Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம்-15 வெள்ளி-16 18-24- யூன் 2004



## போரிடும் வல்லமை சேர்ப்போம்



## தமிழர்களுக்கான விடுதலையே... சிங்கள தேசத்திற்கான நிம்மதியைக்கொடுக்கும்.

எங்கள் மண்ணில் தோன்றி மறைந்த எத்தனையோ பெரியவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய நினைவுகளும் அவர்களைப்பற்றிய அவர்களுடைய ஆற்றல்களும் என்றும் இந்த மண்ணுக்கு பெருமை சேர்த்துக்கொண்டே இருப்பவை. இத்தகைய பெரியவர்களின் நினைவுகள் இளைய சந்ததியினரின் மனங்களில் ஆழமாக பதியவைக்கப்படவேண்டும். இந்த நல்ல நோக்கத்துடன் இந்தப்புதிய பகுதியை நாம் ஆரம்பித்து வைத்திருக்கிறோம்.

# திருமுக அறிமுகம்



அளவையம்பதி எனக்கலையுணர்வுடனும், அளவெட்டி என மரபு ரீதியாகவும் அழைக்கப்படும் அந்த வடபகுதிக்கிராமம் கலைவிளையும் வளமான மண்ணைக்கொண்டது. அ.செ.மு, மஹாகவி, அ.ந.கந்தசாமி, செ.கதிரேசர்பிள்ளை... என ஈழமண்ணுக்கும் ஈழத்தமிழுக்கும் கௌரவம் பெற்றுக்கொடுத்த கலை இலக்கிய படைப்பாளிகள் தொடர்வரிசையாக வேரூண்றி நின்று வியப்புறவைத்தது இந்த மண்ணில்த்தான்.

அளவெட்டி என்றால் நாதம் ஒலிக்கும், இசை பிரவாகிக்கும் கவிதை சாரலடிக்கும், இலக்கியம் மணக்கும், கலைமிளிரும் பாரம்பரியம் கம்பீரம் காட்டும்.

உலகவரைபடத்தில் ஈழத்தழிழனை, அவரின் கலைவளத்தை பிரமிக்கவைக்கும் வகையில் அடையாளப்படுத்திய மா கலைஞர்களை - இலக்கியப்படைப்பாளிகளை, இசைவிற்பன்னர்களை உருவாக்கிய பெருமைக்குரிய செம்மை மிகு செம்மண் பூமிக்குத் தலைவணங்கி அங்கிருந்தே இந்த அறிமுக ஊர்வலத்தைத் தொடங்குவோம்.

'நாமும் நலியாக் கலையுடையோம்' எனக் கம்பீரமாகப் பாடிய மஹாகவியின் வரிகள் வைரமானவைதான். அவர்தன் சமகாலத்திலேயே அதுவும் தன் கிராமத்துக்குள்ளேயே அத்தகைய மா கலைஞர்களைக்கண்டு பெருமிதமுற்ற நிலையில் மிடுக்குடன் தான் அந்தவரிகளை பாடியிருப்பார்.

அந்த மாகலைஞர்களுள் முதல்வராக யாழ்ப்பாணம் அளவையூர் லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்திப்பிள்ளை மனக்கண்ணில் விஸ்வரூபமாக உயிர்ப்புக் கொள்வது தவிர்க்கமுடியாததேயாகும். அவரிடம் 'லயம்' ஞானமாக ஒளிர்ந்தது, ஞானமும் லயமாக மிளர்ந்து லயமும் ஞானமும் இணைந்த அவரின் கலை ஆளுமை அவரைப் பூபதி (அதாவது இந்த பூமியில் நாதத்தின் தலைவன்) ஆக்கியது.

செல்வத்துக்கு தலைவன் குபேரன்.

கலைச்செல்வம் குபேரசெல்வத்திலும் பெரியது.

எனவே அவர் குபேர செல்வத்தை மிஞ்சிய கலைச் செல்வம் மிகுந்தவர். லயஞானகுபேர பூபதி.. அந்த வித்தக விரல்களுக்குரிய மேதைக்கு பொருத்தமான பட்டம்தான்.

நாதஸ்வரத்துக்கு துணைவாத்தியம் தவில் என்ற கருத்து நிலைப்பாட்டு மரபை மாற்றியெழுத வைத்தது. தவில் மீதான அவரது வித்தக விரல்களின் நர்த்தனம்தான்.

அளவையூர் தவில்கலைஞர் விஸ்வலிங்கம், ரத்தினம் தம்பதிகள் புதல்வனாக 26.08.1933இல் பிறந்த தெட்சனாமூர்த்தி தனது எட்டாவது வயதிலேயே தவில் வாத்தியத்துடன் மேடையேறியமூர்த்தி சிறிது. கீர்த்தி பெரிது என்ற முதுமொழியை மெய்ப்பித்தார்.

அக்காலத்தில் பிரபல்யம் பெற்றுவிளங்கிய தவில் வித்துவான்களான காமாட்சிசுந்தரம்பிள்ளை, ராஜகோபால், சின்னத்தம்பி போன்றோரிடம் ஆரம்பப் பயிற்சிகளைப் பெற்று பின் இந்தியாவில் தவில் மேதை நாச்சியார்கோவில் ராகவப்பிள்ளையிடம் குருகுலவாசம் செய்து ஞானம் அதிகம் பெற்றார்.

அவரது லயஞானம் அபரிமிதமானது.

அவரது விரல்கள் தவிலில் நர்த்தமிடும்வேகம் பிரமிப்பையூட்டும். எந்தத்தாளத்திலும் எத்தனை வேகத்திலும் எவ்வளவு நேரத்திற்கும் வாசிக்கும் வல்லமை அவருக்குமட்டுமே உரியது.

சிக்கலானதும், கடுமையானதுமான சுத்தத்தாளங்களில் லயவித்தியாசம் செய்வதில் வல்லவர்..

இரசக் கலைஞர்களுக்கு உதாரலெடுக்க வைக்கும் இந்திய இசைவிமர்சகர் சப்புடு இவரது வித்துவத்திறனை வியந்து "எல்லைகடந்த கலை நுணுக்கத்திறனின் உச்சம்"(Virtuosity at,ts highest) என Indian Express பத்திரிகையில் புகழ்ந்துள்ளார்.

அது மட்டுமல்ல மற்றொரு இசைவிழாவில் இவரது வாசிப்புத் திறனில் மெய்மறந்த சப்புடு அவர்கள் 'மனிதவிரல்களுக்கு இவ்வாறு மிகவும் நுண்மையான நாத பேதங்களை இசைக்கமுடியும் என நான் ஒருபோதும் கற்பனைபண்ணியது, கூடக்கிடையாது திருநந்தி தேவரே நேரில் வந்து வாசிப்பது போலிருந்தது என்றும் வியந்துள்ளமையை குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இந்தியா, சிங்கப்பூர்,மலேயா எனக் கடல் கடந்த நாடுகளிலும் தனது கலையாற்றலால் பிரமிப்பை ஏற்படுத்திய அந்த மா கலைஞன் மிக்க சொற்பவயதில் (42)13 - 05 - 1975இல் நமைவிட்டு திடீரென மறைந்தபோது...

'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே...' என்றும்

'நாதம் ஓய்ந்தது' என்றும் ஊடகங்கள் எழுதியதை மறக்கவே முடியாது.

வித்துவச் செருக்கற்ற வியத்தகு மேதை அவர் நரம்பு வாத்தியத்திற்கு ஒரு இராவணன்... தோல்வாத்தியத்திற்கு ஒரு தட்சணாமூர்த்தி...

இதிகாசகால லயஞானகுபேர பூபதி இராவணனும் எங்கள் கால தட்சனாமூர்த்திப்பிள்ளையும் ஈழமண்ணின் கலைப்பாரம்பரியத்தில் நிகரற்ற உச்சத்தைத் தொட்டவர்கள் என்பதில் எம்மண் எப்போதுமே கர்வம் கொள்வதில் நியாயமிருக்கவே செய்கிறது.

அட்சயன்

# காரசாரம்

## என்னவென்று சொல்வது

முற்காலத்தில் கடைகளில் அலங்காரத்துக்கு பல வண்ணத்தால்களைக் கொழுவிவிடுவார்கள். இன்று விதவிதமான குளியல் சாதனங்கள் சரம் சரமாக தொங்கு கின்றன. சிகைக்காய் வாங்கி அதை வெந்தையம் கலந்து ஒரு எலுமிச்சம் காயும் போட்டு அவித்து விளுவிளுப்பாக அரைத்து முழுகிய பெண்களுக்கு அழகிய பொடுகற்ற கருங்கூந்தல் இருந்ததாம். இன்று இரண்டு ரூபாய் "ஷாம்பூப்பை" முழுகப்போதும்.

வைக்கோல், தேங்காய் தும்பு, சாம்பல், பாத்திரங்கள் பழபழக்க விளக்கிவைக்கப் போதுமானது. இவை உள்ளூரில் எங்கும் கிடைக்கும் இப்போது நீங்கள் ஒரு மாளிகைக்கடையின் தொங்கு பொருட்களுள் ஜிகினா மின்னும், பெண்கள் பின்னல்களில் அனிவது போன்ற ஒரு கறுப்பு தும்புப்பெருளைக்காணலாம். கூடவே ஒரு பாணியும். சீனாவில் செய்யப்பட்டு கப்பல் ஏறி கடல் கடந்து வருகிறது. சட்டி பானை கழுவும்தும்பு. இறைச்சிக் கறியும் சோறும், அல்லது இறைச்சியும் பாணும், இறைச்சியும் றொட்டியும் என இறைச்சியுடன் என்ன சாப்பிட்டாலும் சுவைதான். காரசாரமாக சாப்பிட்ட பின் பல்லுக்குள் நுழைந்துவிட்ட இறைச்சியை கிண்டிஎடுப்பது அதைவிட சுவையான விடயம். மெல்லிய தென்னம்ஈர்க்கு அல்லது " சட்டைப்பின்". பல்லுக்குத்துவது, மூக்குத் தோண்டுவது, காது குடைவது இவற்றையெல்லாம் ரசித்துச்செய்வது யாருக்குத்தான் பிடிக்காது. இப்போது பல்லுக்குத்தும் குச்சியும் தாய்லாந்தில் சீவப்பட்டு அழகாக அடிக்கிக் கட்டி பொலித்தின் பெட்டியுள் அடைக்கப்பட்டு விமானம் ஏறி இங்கு வந்து விற்பனையாகிறது. முன்பொரு காலத்தில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் வாழ்ந்த காலத்தில் ஒரு பகிடிக்கதை சொல்வார்கள். வெள்ளைக்காரன் அழகான கோப்பையில் சாப்பிட்டானாம். இப்படிக் கோப்பையை உங்கள் நாட்டில் வைத்திருக்கிறீர்களா? என்று கேட்டார்களாம். அதற்கு அவர் எங்கள் நாட்டில் ஒரு தடவை சாப்பிட்ட தட்டில் பிறகு சாப்பிடமாட்டோம் அதை வீசிவிடுவோம் என்றாராம். இலையில் சாப்பிடுவதையே அவர் குறிப்பிட்டார். அப்படித்தான் "ரங்கிளீனர்" நாக்கு வழிக்கவென்றே கினற்றடியில் வடலிநிற்கும். வழித்தஓலை கிணாட்டு - குப்பைக்குப் போய் விடும். இப்போது நாக்குவழிக்கவும் நாடுகடந்து தகடு வருகிறது. அதை காசுகொடுத்து வாங்குகிறோம். வழிச்சுவழிச்சு கழுவிக்கழுவி பாவிக்கிறோம்.

மரத்தில் அழகான கடைச்சல் வேலைசெய்த தளபாடங்களை உபயோகித்தவர்கள் நாம். இன்று பிளாஸ்டிக் தளபாடங்களில் முடங்கிக்கொள்கிறோம்.

"இலவம் பஞ்சிற் துயில" என்பது முதுமொழி. அது இல்லாத போது தென்னந்தும்பு மெத்தை புழக்கத்தில் இருந்தது. இப்போது செயற்கைத்தும்பு (ஸ்பொன்ஞ்) மெத்தை. இரவில் படுத்தால் எழும்பவே இயலாத அளவுக்கு உடல்வலியை உண்டு பண்ணினாலும், தும்பு தாராளமாக இருந்தாலும், பஞ்சு பாவனையாளரின்றி மரத்தில் இருந்தே காற்றில் பறந்தாலும். இறக்குமதி மெத்தையில் படுத்துஇளைத்துப்போவதே சுகமென்கிறோம்.

அட அநியாயமே! இவற்றையெல்லாம் கூட விற்றுப் பணம் பண்ணி ஒரு நாடு முன்னேற, வெறும் வரட்டுக்கௌரவத்துக்காக இவற்றையெல்லாம் விலைகொடுத்து வாங்கும் ஏமாளிகளாக நாங்கள். அடவிடுங்கள். எங்கள் நாட்டில் ஒரு லீற்றர் பால் 15 ரூபா, ஒருலீற்றர் தண்ணீர் 35 ரூபா.

"ஆறுகள் பாயொலி ஆநிரை பாயொலி ஏறுகள் பாயொலி இத்தனை- மாறொலி சங்கமித்தே வருந்தாரணி தானதாம் எங்களது வன்னி நகரே."
என்று பாடிய புலவன் பாவம்.

மாயா

# புரியாணி-புரியாய் நீ

புரியாணி, எங்கிருந்து வந்தது என்பது பற்றிய சர்ச்சையொன்றை ஒரு ஆங்கிலப்பத்திரிகை வெளியிட்டுள்ளது.

பிரியாணி என்ற சொல் பிரியன் (birian) என்ற பார்சியச் சொல்லில் இருந்து வந்ததாம் இதன் அர்த்தம் சமைப்பதன் முன் வறுப்பது! என்பதாகும்.

ஒரு வகைப் பிரியாணி முகலாயர்களிடமிருந்து வந்ததாம். அவர்கள் பார்சியை ஆண்டு அப்படியே இந்தியாவை ஆண்டகாலத்தே அவர்கள் ஆக்கிரமித்த பகுதிகளான லக்னோ, ஹைதராபாத், போன்ற இடங்களிலிருந்து இது ஏனைய பகுதிகட்குச் சென்றதாம்.

இன்னொரு வகை அராபிய வர்த்தகர்களால் அரபிக் கடல் கடந்து கோழிக் கோட் வழியாக வந்ததாம். சிந்து, குஜராத், பாகிஸ்தான் போன்ற இடங்களின் பிரியாணி வாசனையுடையது. சிந்தின் ஆட்டுக் கறிப் பிரியாணி வித்தியாசமானதாம். சரி.

தமிழர்களுக்கு பிரியாணி எப்படி வந்தது. சங்க கால இலக்கியங்களில் சோறு பல வகையாகச் சமைக்கப்பட்டது. தயிர்ச்சாதம், மோர்ச்சாதம், நெய்ச் சோறு, சர்க்கரைப் பொங்கள், புளிச்சாதம், பாற் சோறு, சித்திரான்னம், புலவு எனப்பலவகை - சித்திரான்னம் சிறுமணிச்சம்பா சீரகச்சம்பா, குண்டைச்சம்பா போன்ற அரிசி வகையில் சமைக்கப்படுவது. கத்தரிக்காய், வாழைக்காய், கடலைப்பருப்பு, அவரை, கொத்த வரை, கொவ்வை, சலாது போன்றவற்றை தனித்தனி நெய்யில் வறுத்து சோற்றை வெண்முட்டுப் பதத்தில் சமைத்து. ஒரு பிடிசோற்றில் மஞ்சள். ஒருபிடி பச்சை கலந்து கிழறி, கிழங்கும் சுட்டு தட்டில் பரவிஅழகுபடுத்தி உண்பது சித்திரான்னம். இதே சோற்றில் புலால் கலந்தால் அது புலவு எனப்படும்.

அராபிய வர்த்தகர்களை மன்னர்கள் இவ்வகை உணவளித்து உபசரித்ததாக,வரலாறு கூறுகிறது. அரபு இராஸ்ஸியத்தில் அரிசி விளைவதில்லை. ஆகவே அவர்களுக்கு அது சொந்தமில்லை. என்பது வெள்ளிடை மலை நிற்க.

துருக்கியில் ஈரானியன் பிரியாணியை (pilaf) பிலப் என்றளைக்கின்றனராம் (ஏற்கெனவே இந்தப் பெயரில் இதை உண்டவர்களால் இப்பெயர் வந்திருக்கலாம்) இவ் உணவை அவர்கள் திருமண விழாக்களில் வாசனை ஊட்டி தக்காளியுடன் உண்பார்களாம். காஷ்மீர் சிந்து லக்னோ போன்ற இடத்தவர்கள் நாம் இவ் உணவை மொகலாயர்களிடம் பெற்றதாகச் சொல்கின்றனர்.

முன்பு குழந்தையில்லாதவர்கள் கதிர்காமத்துக்கு நேர்த்தி வைப்பார்களாம் எங்களுக்கு குழந்தை பிறந்தால் அதைக் கோவிலில் விற்று வாங்குவோம் என்று அப்படி குழந்தைபிறந்தால் கோயிலில் குழந்தையைக் கொடுத்துவிடுவார்கள் பூசகர் பிள்ளையை ஏலம் விடுவார். ஏலத்தில் விலை கூறி பெற்றார் பிள்ளையை பெறறோர் வாங்கினால் அது கதிர்காமத்தில் வாங்கிய பிள்ளை என்றே கூறுவார்கள்.

இப்படித்தான் தமிழர்களும் காலங்காலமாக ஆக்கிரமித்த அந்நியர்களிடம். எங்கள் பாரம்பரியங்களை விற்றுவிட்டு பிறகு அங்கிருந்து கொண்டு வருகிறோம். எனச் சொல்கிறோம். எங்கள் சித்திரான்னமும், புலவும், இப்போது போன கப்பலிதான் திரும்பி வந்திருக்கிறது. என்ன கொஞ்சம் மினுமினுப்பாக வந்திருக்கிறது. அவ்வளவுதான். ஆனால் பலதலைமுறைக்கு முன்பே போய் இப்போது வந்திருக்கிறார். எனவே புதியவர்கள் இதைப் புரியவில்லை.

தரமான பிரியாணியை எப்படிக் காண்பது என்பது பற்றி பிரபல பிரியாணி விற்பனையாளரும் விற்பன்னருமான விஸ்வநாத் செனாய் சொல்கிறார். உங்கள் கையில் கொஞ்சம் பிரியாணியை எடுத்து நிலத்தில் போடுங்கள். அனைத்துத் தாணியங்களும் தனித்தனியாகப் பிரிந்தால் அதுவே தரமான பிரியாணி பிரியாணிக்கு அதிக வாசனைப் பொருட்கள் சேர்ப்பதில்லை. மெல்லிதான நறுமணம் போதுமானது. என்கிறார்.


*தகவல் உதவி:-சண்டேரைம்ஸ்*

*தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் சட்டம் ஒழுங்கை பல்வேறு சிரமங்கள், இடர்களுக்கு மத்தியில் நடைமுறைப்படுத்துவதில் அயராது உழைத்துவரும் தமிழீழ காவல்துறையினரின் பணி தொடர்பாகவும், காவல் துறையினரின் செயற்திட்டங்கள் குறித்தும் அவர்களின் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாகவும் அறிந்துகொள்ளும்வகையில் தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் ப.நடேசன் அவர்களை சந்தித்தோம்.*

*அவர் இன்று எமது பிரதேசத்தில் ஆங்காங்கு நடைபெறும் வீதி விபத்துக்கள் முதல் மனித உரிமை விவகாரங்கள்வரை எம்மோடு பல கருத்துக்களை பகிர்ந்துகொண்டார்.*

*அவர் எம்மோடு பகிர்ந்துகொண்ட கருத்துக்களை எமது வாசகர்களோடு நாமும் பகிர்ந்துகொள்கிறோம்.*

# தமிழ் மக்களுக்கான விடுதலையே




# சிங்கள தேசத்திற்கான நிம்மதியைக்கொடுக்கும்

## -தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் ப.நடேசன்-

தமிழீழவிடுதலைப் போராட்டம் வலுப்பெற்று வந்த காலப்பகுதிகளிலேயே தமிழீழகாவல்துறை ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது தமிழீழகாவல்துறை எதிர்கொண்ட சவால்கள் குறித்துக்கேட்டபோது;

தமிழீழவிடுதலைப் போர்ராட்டம் வலுப் பெற்றுவரும் காலப்பகுதியில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் எண்ணத்தில் உதித்த இக்காவல்துறையானது பல்வேறு நெருக்கடிகளைச்சந்திக்க நேரிட்டது. அதாவது ஆரம்பகாலத்தில் காவல்துறையினருக்கான பயிற்சிகளை யாழ்ப்பாணம் பழையபூங்காவில் வைத்து வழங்கிவரும்போது இராணுவத்தினரின் பல்வேறு தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டது. எத்தனையோ தடவைகள் விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது எமது உறுப்பினர்கள் காயமடைந்த தோடு உயிரிழந்த சம்பவங்கள்கூட நிகழ்ந்தது.

ஒரு விடுதலைப்போராட்டத்திற்கான ஒரு அமைப்பினை எமது தலைவர் அவர்கள் ஏவ்வாறு கட்டிவளர்த்துவந்தாரோ அதே போன்று தமிழீழகாவல்துறையினையும் கட்டி வளர்த்துள்ளார். ஆரம்பகாலத்திலேயே மிகநீண்ட தூரங்களுக்கு அதாவது யாழ்ப்பாணத்தில் இருந் தும் முல்லைத்தீவில் இருந்தும் கிளிநொச்சியில் இருந்தும் மன்னாரில் இருந்தும் மிக நீண்ட தூரங்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்மூலம் சென்று தமது கடமைகளை மக்களுக்கு ஆற்றிவந்தனர். இவ்வாறு பெரும்கஷ்ரங்களை எதிர்கொண்டு கடமையுணர்வுடன் காவல் துறையினர் செயற்பட்டுவந்தமையினால் இன்றைய காலப்பகுதியில் குற்றச்செயல் களையும் விபத்துக்களையும் தடுக்கக்கூடிய வகையில் துரிதமாக செயற்பட்டுவருகின்றனர். தற்பொழுது ஓரளவு நவீன மயமாக்கலுக்குள் தமிழீழகாவல்துறை உள்வாங்கப்பட்டுவரு வதனால் ஆரம்பகாலத்தில் பொருளாதாரத் தடைகள் போக்குவரத்து வசதியின்மை என்பவற்றுக்கு மத்தியில் மக்களுக்கு சேவை யாற்றி வந்த தமிழீழகாவல்துறை மேலும் தனது சேவையினை துரிதமாக மேற்கொள்ளமுடிகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் குற்றச்செயல்கள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. ஆனால் சிறிலங்கா அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளில் குற்றச்செயல்கள் அதிகரித்துக்காணப்படு கின்றன என்றபோது:

உண்மையில் விடுவிக்கப்பட்ட எமது தாயகப் பிரதேசங்களில் குற்றச்செயல்கள் மிகமிகக்குறைவு இதற்கான காரணம் எங்களுடைய மக்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்ற அளவிற்கு அறிவற்றவர்கள் அல்ல, அறிவுடையவர்கள். எமது விடுதலைப் போராட்ட காலத்தில் குற்றச்செயல்களை தவிர்க்க வேண்டும், இந்த விடுதலைப் போராட்டத்திற்கு பக்கபலமாக இருந்து செயற்படவேண்டும், எல்லா மக்களும் சம உரிமைகளுடன் எமது தேசத்தில் வாழ்வதற்கு ஒரு தேசத்தை கட்டி எழுப்பவேண்டும் என்ற அவாவுடன் வாழுகின்ற மக்கள் உள்ளதால் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் குற்றச்செயல்கள் குறைவாகக் காணப்படுகிறது. காவல்துறையினரும் மக்க ளும் இடைவெளிகள் இல்லாமல் அந்நி யோன்னியமாக இணைந்து செயற்பட்டுவருவ தனாலும் குற்றச்செயல்கள் ஏற்படுவதில்லை. அத்தோடு எமது தாயகப்பகுதிகளில் பலகுற் றத்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

அடுத்து தமிழீழ காவல்துறை என்பது விடுதலைக்காகப்போராடுகின்ற ஒரு மக்களால் உருவாக்கப்பட்ட ஒரு காவல்துறை மக்கள் மத்தியில் குற்றச்செயல்கள் ஏற்படக்கூடாது என்பதில் மக்களும்பெரும் அக்கறையாக இருக் கின்றனர். அதேபோன்று காவல்துறையினரும் இவற்றை வழிநாடாத்திச் செல்கின்ற தேசியத் தலைவர் மேதகு.வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் ஆலோசனைகளும் மிக கவனமாக இருக்கிறது. தமிழீழப் பிரதேசத்தில் ஒரு குற்றச் செயல் வந்தபிற்பாடு அதைக்கொண்டுபோய் தண்டனை கொடுத்து தண்டனைவாங்கிக் கொடுப்பதைவிட குற்றச்செயல்கள் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதில் அதிதீவிரமாக எமது காவல்துறை உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

சிறிலங்கா அரசகட்டுப்பாட்டுப் பிரதே சங்களில் குற்றச்செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமைக்கு பல காரணங்கள் இருக்கின்றன. அங்கு யார் குற்றங்களை கண்டு பிடிக்கவேண்டுமோ அல்லது குற்றங்களை தடுக்கவேண்டுமோ, நீதி செலுத்தவேண்டுமோ அதே சிறிலங்காப் பொலிசார் சிறிலங்காவின் பாதாள உலகக்குழுக்களுடன் இணைந்து குற்றச்செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

குற்றச்செயல்களை தடுக்க வேண்டிய வர்களே குற்றச்செயல்களை தூண்டிவிடுவதில் பெரும் அக்கறையாக உள்ளனர். பாரிய குற்றச்செயல்களையும் கொலைகளையும் கொள்ளைகளையும் செய்தவர்கள் சிறிலங் காவின் பொலிஸ் அதிகாரிகளாகவும் இராணுவ அதிகாரிகளாகவும் இப்பொழுதும் உள்ளனர்.

**நேர்காணல்**
**சு.பிரபா**

இனக்கலவரங்களை மூட்டிவிட்டு தமிழ்மக்களின் வீடுகளில் பொலிசாரும் இராணுவத்தினரும்தான் கொள்ளையடித்து வீடுகளை தீயிட்டுக் கொழுத்தியதும் இவர்கள் தான். இது உலகமறிந்த உண்மை. இப்படியான வர்கள் இப்பொழுது சிங்களப் பிரதேசங்களில் பாதாள உலகக்குழுக்களுடன் இணைந்து பல குற்றச்செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

உதாரணமாக கண்டி உடத்தலவின்ன கொலைச்சம்பவத்தினை எடுத்துக்கொண்டால் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருக்கு மெய்ப் பாதுகாவல்களாக இருந்தவர்களும் மட்டுமன்றி, நேரடியாக அவரும் அவரது குடும்பத்தினரும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

தமிழர்களை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இக்கொடூரயுத்தத்தை மேற் கொள்ளும் எல்லா அரசாங்கங்களும் இவ் வாறான குற்றவாளிகளை இராணுவத்தில் இணைத்துக்கொள்கின்றது. இது அவர்களுக்கு ஒரு பாதுகாப்பாகவும் அமைகிறது.

> *"தமிழ்மக்களுக்கு ஒரு விடுதலை கிடைத்த பின்னர்தான் சிங்களமக்கள் சிங்களப் பிரதேசங்களில் நிம்மதி யாக இருக்கமுடியும்.இதற்கு காரணம் தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்களை சிங்கள மக்கள் மீதும் இந்தக் குழுக்கள் மேற்கொள்ளும் ஒரு நிலை உருவாகும். அவ்வாறான ஒரு நிலையில் குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் அப்பிர தேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்குஏற்படும்."*

இந்தவகையில் எங்களுக்கு ஒரு விடுதலை கிடைத்தபின்னர்தான் சிங்களமக்கள் சிங்களப் பிரதேசங்களில் நிம்மதியாக இருக்க முடியும் என கருதுகின்றேன். இதற்குக் காரணம் தமிழ்மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்களை சிங்களமக்கள் மீதும் இந்தக் குழுக்கள் மேற்கொள்ள வாய்ப்பு உருவாகும். அப்போது அங்கு குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் அப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

அதிகரித்துவரும் வீதி விபத்துக்கள் தொடர்பாக கேட்டபோது:

வீதி விபத்துக்கள் உண்மையில் எமது மக்களுடைய உயிர்களுக்கும் உடமைகளுக் கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது இதற்குக் காரணம் ஏ.9 சாலை திறந்துவிடப் பட்டதும் புதிய வாகனங்கள் எமது பகுதிக்குள் அதிகளவு வந்து சேர்ந்துள்ளதுடன் புதிய வாகன உரிமையாளர்களும் அதிகரித்துள்ள மையுமாகும். இவற்றைவிட தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதிக்கும் அதிகளவு வாகனங் கள் செல்வதும் பெரிய அளவில் அதிகரித் துள்ளது. இதன்போது அதிகளவு வாகனங்கள் மிகக் கூடுதலான வேகத்தில் செல்வதனால் வீதிவிபத்துக்கள் நிகழ்கின்றன.


(16ஆம் பக்கம் பார்க்க...)

### பூலோகத்தின் நண்பர்



**சித்திரகுப்தன்:-** எமதர்மா! உங்கள் நண்பராம். ஒருவர் எங்கள் அவைக்கு வந்துள்ளார்.
**எமன்:-** யாரவன் என் நண்பன்
**சித்திரகுப்தன்:-** பூலோகத்தில் A-9 என்றொரு சாலையில் சாரதியாய்ப் பணிபுரிந்த வராம்.













# சனியனைப் பிடிக்கும் மனிதன்

ஆறுமாதங்களில் சனியனை பீடிக்கும் மனிதன் வழமையாக மனிதனுக்குச் சனி என்றால் பெரும் பயம். வெறுப்பு என்றால் அதனை சனியன் என்றே கூறுவார்கள்.

அந்தளவுக்குச் சோதிடம் சனி பற்றிய பயத்தை மக்களுக்கு அதிகம் உருவாக்கிவிட்டிருந்தது. சனி குறித்த காலத்தில் பீடிப்பதாக எல்லாம் பூச்சாண்டி காட்டி பிழைப்பார்கள். கறுப்புக்காகம் வாகனமான கரியன் சனிஎன சோதிடர்கள் கருத்து உருவாக்கியிருக்கின்றது. 'வானத்தில் போன சனியனை ஏணி வைத்து இறக்கிய' என்ற பழமொழி கூட எம்மவரிடம் இருக்கின்றது. இந்தளவுக்கு மோசமானவனாக சனி நம்மவரிடம் சித்தரிக்கப்படுகின்றான்.

இந்த மனிதனைப் பீடிக்கும் சனியனை இப்போது மனிதன் பீடிக்கப்போகின்றான்.குழம்பவேண்டும் சனியன் மனிதனைப் பீடிப்பது பழமைவாத பிற்போக்குவாத மூடத்தனமான வெறும் கற்பனை. ஆனால் மனிதன் சனியனைப் பீடிப்பது உண்மையிலும் உண்மை.

எதிர்வரும் சனவரியில் மனிதன் சனியனைப் பிடிக்கப் போகின்றான். மனிதன் பிடிக்கப் போகும் சனியனுக்கு கறுப்புக்காகம் வாகனம் அல்ல. சனியனும் கரியன் அல்ல. இப்படியாக எம்மவரிடம் மோசமாகச் சித்தரிக்கப்படும் அதே சனியன் வெண்மையாக வண்ண வண்ணமான கற்களைக் கொண்ட வளையங்களையும், 30 சந்திரன்களையும் கொண்ட தண்ணீரில் மிதக்கக்கூடிய விண்ணில் வலம் வரும் பிரமாண்டமான பந்து.









சூரியனை வலம்வரும் பூமியைப்போன்ற ஒன்பது கோள்களில் 6வது இடத்தில் உள்ளது அது. இதனையே மனிதன் பிடிக்கப் போகின்றான்.

அமெரிக்காவின் நாஸா அனுப்பியுள்ள கஸ்ஸினி என்ற விண்கலம்தான் சனியனைப்பிடிப்பதற்காக சனியை நெருங்கிக்கொண்டிருக்கிறது.

விண்வெளியில் மனிதன் தொடப்போகும் கடைசிக்கோளாக சனி மாறப்போகிறது. நாஸாவின் பயனியர் 10, வொஜேயர் , ஆகிய விண்கலங்கள் சூரியமண்டல எல்லையைக் கடந்து பிரபஞ்ச வெளியில் ·பயணிக்கின்றன. இருந்த போதும் மனிதன் இதுவரை தொட்ட விண்பொருட்களில் கடைசியானது வியாழன். வியாழனுக்காக நாஸா அனுப்பிய கலிலியோ விண்கலம் 1995 ல் உபகலம் ஒன்றை வியாழனில் தரையிறக்கியது.




கலிலியோவும் 1995 முதல் இவ்வாண்டு ஆரம்பம்வரை வியாழனையும் அதன் உபகோள்களையும் வலம் வந்து தன் ஆயுளை முடித்து விட்டது.

வியாழனுக்கு அடுத்த வீதியில் சூரியனைச் சுற்றிக்கொண்டிருக்கும் கோள் சனி. இந்த சனியனை ஆராய அதனது உபகோளான ரிட்டனில் தரையிறக்க நாஸாவின் கஸ்ஸினி பயணித்துக்கொண்டிருக்கின்றது. சூரியமண்டலத்தில் பூமிக்கு அடுத்தபடியாக நீருள்ளதாக கருதப்படும் விண்பொருள் சனியின் ரிட்டன். ரிட்டனில் ஹியூஜென்ஸ் என்ற உபகலத்தை வான்குடை (PARACHUTE)மூலம் கஸ்ஸினி இறக்கும் ஹியூஜென்ஸ் ரிட்டன் மேற்பரப்பில் தவழ்கையில் ஏற்படும் அலைகளை உறுதிசெய்து அதில் நீருள்ளதா என்பது உறுதிசெய்யப்படும்.. அண்மையில் கஸ்ஸினி சனியை முழுமையாக மிக அருகில் பிடித்த படம் வெளியிடப்பட்டது பரபரப்பான விடயம். கஸ்ஸினி என்ற பிரதான விண்கலத்தில் ஹியூஜென்ஸ் தரையிறக்க கலம் பொருத்தப்பட்டுள்ளது.

இவ்வாண்டு டிசம்பரில் 'ஹியூஜென்ஸ்' கஸ்ஸினி விண் கலத்திலிருந்து பிரியும். டிசம்பர் 25 இல் 'ஹியூஜென்ஸ்' ரிட்டன் நோக்கி பயணிக்கத் தொடங்கும். 2005 ஜனவரி 14 ல் 'ஹியூஜென்ஸ்' தன் வான்குடையை விரித்து ரிட்டனின் வளிமண்டலம் ஊடாக தரையில் விழத்தொடங்கும். இரண்டரை மணிநேரம் அந்த தரையிறக்கம் நடைபெறும்.




கஸ்ஸினி தொடர்ந்து 4 ஆண்டுகள் சனியையும் அதன் உபகோள்களையும் வலம் வந்து ஆய்வுகளை மேற்கொள்ளும். ஹியூஜென்ஸில் 6 கருவிகள் உள்ளன.

கஸ்ஸினியில் ஆய்வுகளுக்காக நுண்அலை உணரி கள், ஒளிப்படக்கருவிகள், நிறமாலை படப்பதிவு மானிகள், ரேடர்கள், வானொலி அலைபரப்பிகள் உட்பட 12 கருவிகள் உள்ளன.

இவை சனியின் பிராந்தியத்தில் உள்ள கஸ்ஸினியின் இயக்கத்துக்கான மின் -3 அணு உலைகளால் பிறப்பிக்கப்படுகிறது.

இதுவரை மனிதனை சனியன் பிடிப்பதாகக் கூறினார்கள் இப்பொழுது அந்தச் சனியனை மனிதன் பீடிக்கப்போகின்றான். இதற்கும் சோதிடம் உள்ளதா?




**த.அருவி**




## பித்தத்தைக்குறைக்கும் வழிகள்

** நீண்ட நேரம் விழிப்பது, டி.வி, கம்ப்யூட்டர் இவைகளை அதிக நேரம் பார்க்கக்கூடாது. * காரம், மசாலா, எண்ணெய்ப் பலகாரங்களைத் தவிர்ப்பது நலம். * கவலை, கோபம், பொறாமை எதாவது ஒன்றை நினைத்து நொந்துகொண்டே இருத்தலை தவிர்க்கவேண்டும்.*

**தினமும் தலைக்கு குளிர்ந்த நீர் விட்டு குளிக்கவேண்டும். தினமும் தலைக்கு எண்ணெய் அல்லது மூலிகைத் தைலம் தடவி வரவேண்டும். *தலை மற்றும் உடல் முழுவதும் வியர்வை தோன்றும்படி நன்கு உடற்பயிற்சி செய்யவேண்டும். *தேவையான அளவு தண்ணீர் குடிப்பது உணவில் காய்கறி, பழங்களைச் சேர்த்துக் கொள்வது உடல் வெப்பத்தைக் குறைக்க உதவும்.*

*அன்மோல் க்ரீம் தினமும் இரவில் தலைக்கு தடவி வருவதால் தலை மற்றும் தோலில் உண்டாகும் வெப்பம் தணியும். எனவே முடி உதிர்வது நின்று மீண்டும் வளர ஏதுவாகிறது.*

## தோல் நோய்கள்

அடுத்தபடியாக நாம் கவனிக்க வேண்டியது தோல் நோய்கள். இரசாயனத் தொழிற்சாலைகள். தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வெளிப்பட்டறை போன்ற இடங்களில் வேலை செய்வோருக்கு தோல் அழற்சி, கரப்பான், வெண்குஷ்டம் போன்ற தோல் நோய்கள் மிக அதிக அளவில் காணப்படுகின்றன.

மிகவும் எச்சரிக்கையாக இருந்து இத்தகைய தோல் நோய்கள் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வது நல்லது. நோய் ஏற்பட்ட பின் மனம் பீதியடையாமல் முறையான மருத்துவரை அணுகித்தக்க மருத்துவம் பெறவும்.

தோல் நோய்களை குணப்படுத்துவதில் சித்த மருத்துவம் மிக்க பலனளிக்கிறது.

## வலிப்பு நோய்

வலிப்பு நோய் பார்வையில் ஏற்படும் சில குறிப்பிட்ட மாற்றங்களால் 4சத வீதம் நோயாளிகளுக்கு இருப்பதாகக் கூறுகிறார்கள். மிதமிஞ்சிய வெயிலால் ஏற்படும் இலை வழி ஒளிமாற்றங்கள். அடர்த்தியான வண்ணங்களின் கலவை டி.வி.மற்றும் ஒளிவழிக்காட்சிகள் இவை கூட வலிப்பு நோய் வரக் காரணம் என்று வல்லுநர்கள் ஆய்வுகள் மூலம் தெரிவிக்கின்றனர்.

உண்மை என்னவென்றால் மூளையின் பின்பகுதியில் உள்ள நரம்பு மண்டலமே நமக்கு. பார்ப்பதற்கு வகை செய்கிறது. ஒளி மாற்றங்கள்.அடர்த்தியான வண்ணக் கலவைகள் நம் பார்வையில் படும்போது மூளையில் வளக்கமாக பார்வைக்குப் பயன்படும் அறைகளைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான அறைகள் அந்தப் பணியை மேற் கொள்கின்றன. அப்போது ஒரு இரசாயானக்கலவை தோன்றுகிறது. அதன் விளைவால் நரம்பு மண்டலமானது தன்னை சமன் செய்து கொள்ளமுடியாது திணறுகிறது. அது மூளை முழுவதிலும் பரவுகிறது. அச்சமயத்தில் தான் வலிப்பு உண்டாகிறது.

இது போல் மூளையில் ஏற்படும் மாற்றங்களை அறிய. ஈ.ஈ.ஜி சோதனை மூலம் ஏற்படும் முடிவுகளைக்கொண்டு அதற்கேற்ப சிகிச்சை முறைகளை மருத்துவ நிபுணர்கள் வழங்குகிறார்கள்.

## இதய நோயில் இருந்து குழந்தைகளை காப்பாற்ற

***குழந்தைகள் தேவையான அளவு உறக்கம் கொள்கின்றனவா என்று கவனியுங்கள்.***

***புகையற்ற சுற்றுச் சூழலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.***


***உடற்பயிற்சிகள் குழந்தைகளின் அன்றாட பள்ளி நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.***

***குழந்தைகளின் எடை கட்டுப்பாட்டில் இருக்கும் படி கவனித்துக் கொள்ளுங்கள்.***

### நாடக மேடை



போகாதே போகாதே என் மனிசி
பொல்லாத சொற்பனம் நானும் கண்டேன்.
வாழைமரம் சரியக்கண்டேன்
A-9ல் போகக் கண்டேன்.



# தொல்லியல்

# வரலாற்றுக்கு முற்பட்ட பழைய முறிகண்டி

கண்டி நெடுஞ்சாலையில் இன்றுள்ள முறிகண்டி காட்டினுள் உள்ள இதன் ஆதிமூலமான பழைய முறிகண்டி,கண்டி நெடுஞ்சாலையில் 18ஆம் போர் ஏற்றத்தின் ஆரம்பத்தில் உள்ள காட்டு முறிகண்டி என மூன்று முறிகண்டிகளில் உள்ள மூன்று பிள்ளையார் கோயில்கள் இணைப்பைக் கொண்டவை.



ஆதிமூலமாக காட்டினுள் இருக்கும் பழைய முறிகண்டி பிள்ளையார் கோவில் மற்றும் அதன் சூழல் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரியது. அதை ஆராய்ந்து சிலவிடயங்களை முன்வைப்பது இதன் நோக்கமாகும். தற்போது கண்டி நெடுஞ்சாலையில் பரபரப்புடன் இருக்கும் முறிகண்டிதெரு முறிகண்டி என குறிப்பிடப்படுகின்றது.

தெருவோரம் போக்குவரவு பரப்புள்ள பகுதியில் அமைந்ததால் இது தெருமுறிகண்டி எனப் பெயர் பெற்றது. அதுமருவி இன்று திருமுறிகண்டியாகி விட்டது. கொழும்பு யாழ் ர்யில் சேவையில் திருமுறி



கண்டி ரயில் நிலையம் இருந்துள்ளது. இந்தத் தெரு, முறிகண்டி அருகாக மேற்கு நோக்கிச் செல்லும் பல்லவராயன் கட்டுக்கான சாலையில் 07ஆவது மைல் தொலைவில் அக்கராயன் என்ற கிராமம் வருகின்றது. அக்கராயனில் இருந்து துணுக்காய்க்குச் செல்லும் சாலையில் 04 மைல் தூரம் பயணித்தால் அடர்பாலை மரக்கட்டுக்குள்ளே பழைய முறிகண்டி கிராமம் வருகின்றது.

கண்டி நெடுஞ்சாலையில் இருந்து துணுக்காய்க்குச் செல்லும் கொக்காவில் சாலையில் மருதன் குளம் அருகாகவும், ஐயன்குளம் அருகாகவும் செல்லும் சாலைகளும் பழைய முறிகண்டியைச் சென்றடைகின்றன. பழைய முறிகண்டியில் இன்று ஒரு நடுத்தர நீர்ப்பாசனக்குளம் உள்ளது. சிறிய குளமாக இருந்து அது 1960களில் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டது. பழைய முறிகண்டி பிள்ளையார் கோயில் பாலை மரங்களின் நடுவே உள்ளது. இந்தப் பழைய முறிகண்டி ஒரு தொன்



மைக்கால கிராமம் என்பதற்கு இங்கு தொல்லியல் சான்றுகள் உள்ளன. இந்தக் கிராமத்தில் பாடசாலையருகே ஒரு வளவினுள் தொல்கால நடுகற்கள் வட்டமாக நடப்பட்டு காணப்படுகின்றன. இதுவரை தொல்லியல் ஆய்வாளர்களின் கண் படாததாக இக்கற்கள் உள்ளன.சுற்று வட்டத்தில் இந்தப் பகுதியில் ஏராள



(படங்கள் திரு)

மான செங்கற்களும் மட்பாண்டங்களும் கிடக்கின்றன. நடுகற்கள் கிடக்கும் இடத்தில் இப் பகுதி வாசி ஒருவர் சேவல் வடிவ செம்பு உருக்கு வடிவத்தை கண்டெடுத்துள்ளார். அக்கராயன்குள ஆறுகளிடையிலான சான்றுகள் இருக்குமிடமும் பழைய முறிகண்டி சான்றுகள் இருக்குமிடமும் சுமார் ஓரிரு மைல்கள் இடைவெளியில் காணப்படுகின்றன. இந்தச் சான்றுகள் குறிப்பாக அக்கராயன் குள அலைகரை சான்றுகள் திராவிடர்களின் பெருங்கற்காலத்துக்குரியவை என்பதை ஏனைய பகுதிகளில் உள்ள

காலக்கணிப்பு செய்யப்பட்ட சான்றுகளோடு ஒப்பிடுகையில் உறுதி செய்யமுடிகிறது.பெருங்கற்காலம் என்பது கி.மு 2000 ஆண்டுகள் முதல் கி.மு 3000 ஆண்டுகள்வரை நிகழ்கின்றன.

ஆயினும் இந்தச் சான்றுகளை காலக்கணிப்பினால் உறுதிசெய்வதன் மூலம் இலங்கையில் வரலாற்றில் இந்தச் சான்றுகள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி ,ஏனெனில் இத்துணை செறிவான ஈமச் சின்னங்கள் புத்தளம் பொன்பரப்பி தவிர, ஏனைய பகுதிகளில் காணப்பட வில்லை. இலங்கையின் மனிதகுலவாழ்வின் தொடக்கம் வரட்சிப்பகுதிகளான வன்னி, மன்னார், புத்தளம், அம்பாந் தோட்டை பகுதிகளிலேயே இருந்தன என்பதை அறிவியல் பூர்வமான தொல்லியல் ஆய்வுகள்மூலம் இலங்கை தொல்லியல் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் சிரான்.ரு. தெரனியகலை வெளிநாட்டு தொல்லியல் ஆய்வாளர்களின் துணையோடு மேற்கொண்ட ஆய்வுகள்மூலம் உறுதிசெய்தார்.

வன்னி கிளிநொச்சி அக்கராயன்குளத்துக்கு நீர்வழங்கும் வண்ணாமோட்டை ஆறு, நிலை ஆறு ஆகியவற்றுக்கு இடையே பலதொன்மைக்கால திராவிட ஈமச் சின்னங்கள் உலோக உருக்கு உலைகளின் பகுதிகள் தொல்கால குள் அணைகளின் அருகில் ந.குணரட்ணத்தால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவை 3000 ஆண்டுகள் தொன்மையானவை என காபன்14 காலக்கணிப்பு உறுதிசெய்துள்ளது. இதுவரை இலங்கையில் எடுக்கப்பட்ட



இரும்பு உலைகள் 2700 ஆண்டுகள் தொன்மையானவை எனவே உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.அதன் படங்கள் இங்கே உள்ளன.

**குரலோன்**

---

இப்பொழுது கடல் கடந்த தேசமொன்றுக்கான பயணம் பற்றி இங்கு பார்ப்போம் இந்த கடல்கடந்த தேசம்பற்றி எழுதவேண்டியதேவை ஏன் ஏற்பட்டது என்பதையும் குறிப்பிடவேண்டும். இந்த கடல் கடந்த தேசம் எமது தாயக மண்ணில்தான் இருக்கிறது. நீண்டகால மனித இருப்பினைக்கொண்ட இந்த மண் பல மாறுபாடுகளை புதியவை களை. சவால்களை. வரலாறுப் பிரதிபலிப்புக்களைக்கொண்டது. அநேகமாக இந்த புதிய (பழைய) உலகம் பற்றி எம்மில் அநேகருக்குத் தெரியாது. வரட்சி குடியேற்றக்குறை போக்குவரத்துச் சிக்கல் என்பவற்றால் அங்கு வாழும்மக்கள் ஏன் இந்த மண்ணில் பிறந்தோம் என்ற விரக்தியில்

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...



(படம் திரு)

இருக்கின்றனர். ஆனால் அவர்கள் இத்தனைகாலம் (2000ம் ஆண்டுகளுக்குமேலாக) தொடர்ந்து அதில்வாழ்ந்துகொண்டு இருப்பது என்பது ஆராயப்படவேண்டியுள்ளது. இத்தனைகாலம் அவர்கள் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறார்கள் என்பதன் தேடலை அந்த கடல் கடந்த தேசம்பற்றி எழுதவும் ஆராயவும் தூண்டியது. நெடுந்தீவுதான் இந்த இடம்.

தமிழர் தாயகத்தின் நெடுந்தொலைவில் கடல் கடந்து மக்கள் வாழ்கின்ற பிரதேசம் நெடுந்தீவு யாழ்ப்பாணத்தின் மேற்குக்கரையில் உள்ள மண் டைதீவு. வேலணை. காரைதீவு. (காரைநகர்) எழுவைதீவு. அனலைதீவு. நயினாதீவு. நெடுந்தீவு ஆகிய மக்கள் தீவுகளில் நெடுந்தொலைவில் இருப்பது நெடுந்தீவு. யாழ்ப்பாணத்துடன் கடலூடான தரைவழிப் பாதை யின் கடைசியிடமான குறிகாட்டுவானிலிருந்து 7 கடல்மைல் தொலைவில் ஆழ்கடல் மத்தியில் நெடுந்தீவு அமைந்துள்ளது. நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய தீவுகள் களப்புக் கடலை கிழக்குப்புறத்தில் கொண்டமைந்துள்ளன. ஆனால் நெடுந்தீவு மட்டும் ஆழ்கடலில் உள்ளது. இந்த தீவுக்கான எனது பல பயணங்களின் தொகுப்பாக பயணக் குறிப்பாகவே இதனைத் தரமுயலுகின்றேன். நெடுந்தீவு பற்றி செவிவழியாகவும் நூல் வழியாகவும் அறிந்துகொண்டபல்வேறு தகவல்களே அங்கு செல்லத் தூண்டியது.

தொல்லியல் மையங்கள் குதிரைகள். முருகைக்கல்வேலி உள்ளிட்ட பல இதற்குக் காரணமாகும். நீண்டகாலப்போர் அங்குசெல்லவிடவில்லை. 2002 போர் நிறுத்த உடன்பாடு நெடுந்தீவு செல்ல இடமளித்தது. வன்னியில் இருந்து முகமாலை படைசோதனைநிலையம் கடந்து யாழ்நகர் சென்று அங்கிருந்து குறிகாட்டுவான் பயணம். பண்ணைப் பாலம் கடந்து தீவுகளுக்கான வீதியின் இருமருங்கிலும் முட் கம்பி வேலிகள் படை அரண்கள் இவற்றைக் கடந்[illegible] தான் யாழ்ப்பாணத் தீவுகளுக்கான போக்குவரத்து இடம்பெற்றுவருகி[illegible]றது. பண்ணையின் நுழைவாயில் சோதனைநிலையம் தீவுகளிலிருந்து யாழ்ப்பாணம் வருவோரை சோதனையிடுவதற்கானது. அதனுள்வழியாக பண்ணையைக் கடந்து தீவுக்கான நுழைபாதை வீதியில் நுழைகிறோம். வீதியின் இருபுறமும் முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு இராணுவ முட்கம்பிச்சுருள்கள் போடப்பட்டு இருந்தன. இந்த வேலிகளுக்கு இடையில் நடுவில் உள்ள பாதைவழியாக பேருந்து செல்கின்றது. 100மீற்றர் தூரத்தில் உயரமான படையரண் ஒன்று தெரிந்தது. கிட்டவாகச்சென்றபோது அது பண்ணை பாலத்தில் அமைந்துள்ள படையரண் என்பது தெரிந்தது. அதில் தொலைநோக்கி தேடு வெளிச்சம் ஆகியவற்றுடன் படையினர் இருந்தனர். பண்ணைவீதி யாழ்கடல் ஏரியை பிரித்து அமைந்துள்ளதால் கடல் நீர்ஓட்டத்துக்காக அந்த பெரியபாலம் இருந்தது. இதன் வழியாகவே கடலேரியின் கிழக்குமேற்கு மீன்பிடிப்படகுகள் செல்ல வேண்டும். இந்தப் பாலம் உயரமாக இருப்பதால் கடலேரியின் இருபுறமும் மிக தொலைவுவரை பார்க்கலாம்.அதனாலேயே அந்த படையரண் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீனவர்களின் படகுகளை பாலமருகே படையினர் அழைத்து பாஸ்சோதனையையும் நடத்துகின்றனர். இந்த பாலம் மீது நின்று பார்த்தால் கடல் நீரோட்டத்தை தெளிவாகப்பார்க்கலாம். ஒரு கட்டத்தில் நீர்மேற்கில் இருந்து கிழக்காகவும் அதேசமயம் கிழக்கிலிருந்து மேற்காகவும் அதிவேகமாகப் பாயும். அப்போது நீர் ஓட்டத்துக்கு எதிராக இரைக்காக திரண்டிருக்கும் மீன்களை பிடிப்பதற்காக பாலத்தின் அடிவாரத்தில் வீச்சு வலைகளுடன் மீனவர்கள் காத்து நின்றனர். இதை விடஇன்னுமொரு ஆபத்து இரவு வரும்வரை முட்கம்பிவேலியில் படையினரின் அரண்களுக்கு இடையிலான மின்குமிழ்களுக்கான மின் வழங்கல் வேலியின் முட்கம்பி வழியாகவே மேற்கொள்ளப்படுகின்ற[illegible]. அது தெளிவாகத் தெரிகின்றது. இரவுப் பயணம் இதில் மிகக்கவனமாகவே இருக்கவேண்டும் என்பது இதில் தெரிந்தது.


பேருந்து நகர்கின்றது இந்தப் பண்ணைப் பாலம் முன்னாக மிகக் கறுப்பு நிறத்திலிருந்தது. அதில் வாகனம் ஓடும் போது கடார்.... கடார் என பயங்கர ஒலி எழுப்பும். சிலவேளையில் இது ஒரு பேரபாய பாலம் போலவும் இருக்கும். 1990ல் யாழ் கோட்டை முகாமை மீட்க சிறிலங்காப் படையினர் நடத்திய திரிவிடபலய நடவடிக்கையில் இப்பாலமும். இந்த வீதிகள் எங்கனும் அமைக்கப்பட்டிருந்த நீர்போக்கு குழாய்களும் தகர்க்கப்பட்டன. திரிவிடபலய 1990ல் ஆரம்பித்த இரண்டாம் கட்ட ஈழப் போரில் சிறிலங்காப்படையினர் மக்களை பலியெடுத்து நடத்திய முதற் கட்ட நடவடிக்கை.

**துருவன்**

## பெருமையடைகிறோம்




கொலைகாரர் கழகம் நிர்வாகத் தெரிவு A-9 சாலையில் ஓட்டுநராகப் பணிபுரிந்த ஒரேயொரு அனுபவமே, இந்தக் கொலைகாரக் கும்பலிற்குத் தலைமைதாங்கக் கூடியவர் என்ற தகுதியை இவருக்கு வழங்கப் போதுமானது என்பதால் இவரைத் தலைவராகக் கொண்டதில் நாங்கள் பெருமையடைகிறோம்.



## மண்ணின் மைந்தர்களின் கதை



# முத்தத்தில் உயிர்விட்ட எங்கள் சொத்து

சதா நெஞ்சிலே ரவைக் கூட்டு அங்கியுடனும், எப்போது பார்த்தாலும் பச்சைநிற துப்பாக்கி காவுவாருடன் கூடிய தனது S.84 துப்பாக்கியை தோளிலே தொங்கப் போட்ட வண்ணம் காணப்படும் அந்தச் சின்னஞ்சிறிய போராளியின் செயற்பாடுகளும், நடைமுறைகளும், வித்தியாசமானதாகவே இருந்தது. இவை இரண்டையும் விட இன்னுமோர்படி மேலாக அவனது ஒழுக்கத்துடன் கூடிய குறும்புத்தனமும், எந்த நேரமும் துறுதுறுத்துக் கொண்டே இருக்கும் இளமைத்துடிப்பும் எந்தச் சந்தர்ப்பத்தில் எதைக் கேட்டாலும் தெளிவாக நிதானமாக சொல்லப்படும் பதில்களுமே அந்தச் சின்னப் போராளியை அவன்பால் கவனத்தையும், தொடர்ச்சியான அவனது பக்க பீர்ச்சிப்பிற்கும் எங்களை ஈடுபடச்செய்தது.

அந்த போராளியின் இல்லை ...... இல்லை.... அந்த சிறுத்தைப் புலியின் அனைத்துச் செயற்பாடுகளும் தொடர்கதையாகியது. அவனது வயதை மிஞ்சிவிட்ட வீரமும், விவேகமும், வேகமும் எம்மை சிலவேளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. விடிகாலை எழும்புவதில் இருந்து. அந்திசாய்ந்து கண்ணயரும் நேரம் வரை அவனால் மட்டும் எப்படி ஒரே சீரான வேகத்துடன் இயங்க முடிகிறது என்ற வினா எங்களை ஆழமாக ஊடுருவித் துளைத்தது.

அந்த சின்ன விடுதலை வீரனின் பெயர் அன்றும், இன்றும், என்றும் எங்கள் நெஞ்சினில் இதயத் துடிப்பாய் துடித்த வண்ணமே இருக்கிறது. அவனது செயற்பாடுகள், குறும்பு, வீரம், விவேகம், வேகம் ஆர்வம் எல்லாவற்றையும் விட விடுதலைப் போராட்டத்தை அவன் நேசித்த நேசிப்பின் உச்சத்தை அவனது வீரச்சாவின் ஊடாக மயிர்க் கூச்செறியும் சாதனையாக நிகழ்த்திக் காட்டியதை என்றென்றும் மறக்கவே முடியாது.

லெப்ரினன் ராவ் என்றதும் அவனது சண்டைகளும் அவன் சண்டைகளில் காட்டிய வீரம் - ஓரிடத்தில் இரத்தம் சொட்டச் சொட்ட களமாடித்தன்னோடு இணைந்து போராடி விழுப்புண் அடைந்து, இயலாது கிடந்த லெப்:- மாறனை காப்பாற்ற எதிரியை நோக்கி சுட்டுச்....சுட்டு சிறு வயதினன் என்றும் என்னால் இதை செய்ய முடியாது என்றும் பாராமல் இழுத்து வந்து இறுதியில் மாறனை இழந்த போது தேம்பித்..தேம்பி அழுது... அழுதே பல நாட்களை உணவில்லாமல் உணர்வோடு கழித்தவனை என்னவென்று மறக்க முடியும்.

காட்டு வாழ்க்கையின் கொடிய நாட்களில் அம்பாறை கஞ்சிகுடிசாறு, தொடக்கம் கதிரவெளி கட்டுமுறிவு காடுவரை வாழ்ந்த காலங்களிலும். அப்போதய வாழ்வின் எந்த நேரங்களிலும் தனது நெஞ்சை விட்டு ரவைக் கூட்டு அங்கியை ஓரிரு சிறிய சந்தர்ப்பங்களிலும் தவிர்க்க முடியாத சில நேரங்களையும் தவிர கழற்றியதே கிடையாது. அந்த மாவீரனின் அற்புதமான முகம் நெஞ்சில் நிழலாடும் போதெல்லாம். அந்த உன்னதமானவனின் உடலில் ஒட்டிப் பிறந்ததாய் தெரியும் பச்சை நிற ரவைக்கூட்டு அங்கியும் நினைவில் நிழலாடும்.

படுக்கும் போதே எதிரியின் இடைவிடாத அச்சுறுத்தலை எதிர் பார்த்தவனாய் லெப.ராவ் தனது ரவை அங்கியை கழற்றாமலே படுத்து விடுவான், அதேபோல் தனது உயிராய் மதித்த S.84 துப்பாக்கியை பக்கத்தில் வைத்தே படுத்திருப்பான், சில வேளைகளில் அவனை காவல் கடமைக்காய் எழுப்பிவிடும்போது தோளிலே துப்பாக்கிப் பட்டியை கொளுவியபடியே நித்திரை செய்திருப்பான். அதேபோலவே விடிகாலை 04 மணிக்கு எழும்பி தனது காவல் நிலைக்கு வேகமுடன் செல்லும் அந்த புலிவீரன், அதிகாலை நேரத்திலும் தனது துப்பாக்கியை துடைப்பதை காணக்கூடியதாக இருக்கும்.

சில நேரங்களில் யாருமே எழுப்பாமல் தானே அதிகாலை 04 மணிக்கு எழும்பும் வழக்கத்தை தன்னகத்தே கொண்டிருந்தாலும் சில நாட்கள் கடுமையான வேலை செய்துவிட்டு அசந்து தூங்கிவிடுவான். பொறுப்பாளரும், போராளிகளும் தூங்கட்டுமே என்றுவிட்டுவிட்டால் அன்று எல்லோருக்கும் நல்ல ஏச்சு விழும். அன்று கடைசி காவல்கடமை புரிந்தவனின் பாடோ பெரும் பாடாய் முடியும். வழமையாக எல்லாப் போராளிகளையும் விட ராவ் வித்தியாசமாகவே செயற்படுவான். சாதாரணமான நேரத்திலும் சரி சமரெண்டாலும் சரி, பயிற்சி என்றாலும் சரி எல்லாவற்றிலும் எங்கள் ராவ் துடிப்பானவனாகவே இருப்பான்.

காட்டுப் பாசறைகளில் மரங்களுக்கிடையில் விடப்பட்டிருக்கும். மைதானத்தில் சத்தியப்பிரமாணத்திற்காக அணி வகுத்து நிற்கின்ற வேளையில் மேடு பள்ளங்கள் கூடுதலாய் இருக்கும். அவற்றுக்கு மத்தியிலும் வரிசையை சரி பார்த்து பிழையென்றால் பெரியதொரு கர்ச்சிப்பே கேட்கும். பல முறை எல்லோரும் காலையில் அவனிடம் பேச்சு வாங்கிய பின்பே சத்தியப்பிரமானம் செய்வோம். அதற்கு எங்களது பொறுப்பாளர் மாவீரன் லெப் கேணல் உருத்திரா ஆசிரியரும் விதிவிலக்கல்ல. எதை செய்தாலும் நன்றாக செய்ய வேண்டும் என்பதே அவனின் நியதியாகும்.

எங்களது விடுதலைப் போராட்டத்தில் என்னதான் துன்பங்களும் துயரங்களும் வந்தாலும், வறுமையும் அழிவும் அனர்த்தங்கள் வந்தாலும் இறுதிவரை சோரக் கூடாது என்பதில் லெப். ராவ் உறுதியாக இருந்தான். எனவேதான் குளிக்கின்ற நேரம், அல்லது ரவை அங்கி கழுவுகின்ற நேரம் தவிர்ந்து ரவை அங்கியை கட்டாத நாளே இல்லை என்பதில் உறுதியாக இருந்தான். தோளிலிருந்து துப்பாக்கியை கழற்றுவதில்லை என்பதில் உறுதியாக இருந்தான். முன் அவதானிப்பு நிலையத்தில் மரத்திலே இருந்த போது, பொறுப்பாளர் கீழே இறங்கிவந்து சாப்பிடச் சொல்ல, இல்லை... இது எனது கடமை நேரம்... நான் இறங்க மாட்டேன். முடியுமென்றால் இன்னுமொருவனிடம் அனுப்புங்கள்..., மரத்தில் ஏறட்டும் ஆனால் நான் இறங்கமாட்டேன்... என்று உறுதியாக இருந்ததனால் தான் மரத்தில் கயிறு கட்டி உணவை மேலே எடுக்கும் பழக்கம் வந்தது. பிற்காலத்தில் தொடர்ந்து அவதானிப்பாளர்கள் இருந்தமையினால் எவ்வளவோ இழப்புக்களை தவிர்க்க முடிந்ததும் உண்மையே ராவ் தொலைத் தொடர்பாளனாக இருந்த காலத்தில் எவரையும் கிட்ட அனுமதிப்பதோ தேவையில்லாமல் கதைக்கவோ விடாமல் உறுதியாக இருந்து தனது நிலையை போராட்டத்தில் முற்போக்காக நிலை நிறுத்தினான்.

லெப். ராவ்வின் ஒவ்வொரு நடவடிக்கையும் இயக்கத்தின் வளர்ச்சிக்கானதாகவே இருந்தது. அவனது சாவும் அவனது இளம் வயதை முந்திக் கொண்டு மூப்பாக வந்தது.

அன்றைய நாளை நினைத்துப்பார்க்கவே நெஞ்சம் வெடித்து விடும் போல் இருக்கிறது. மழை இருளால் மாலை 06 மணிக்கே காரிருள் எங்கும் பரவத் தொடங்கியது. ஏற்கனவே கிடைத்த தகவலின் அடிப்படையில் சிவத்தபாலத்துப் பக்கமாகவும் சந்தனமடுப்பக்கமாகவும் எதிரி உள்நுழைந்துவிட்டான் என்பதை உறுதிப்படுத்திவிட்டோம். மட்டுமாவட்டத்தின் பெய்ரூட் பக்கம் (தரவை) உள்ள எமது அனைத்து முகாம்களும் உசார் நிலைப்படுத்தப்பட்டன. எமது புலனாய்வுத் துறை முகாம்களும் உசார்ப்படுத்தப் படவே ஒரு சிலர் நின்று முகாம் காவலில் ஈடுபட, பிறிதொருஅணி சண்டைக்கென தயாரானது. கப்டன் யசுரின் தலைமையிலான எங்களது அணி பதிமருந்து சோலை முகாமிலிருந்து ஈரலாக்குளம் நோக்கி நகர்ந்தது. முன்னேறிவருகின்ற எதிரியை இடைமறித்து தாக்குவதே எமது திட்டமாகும்.

அது 1991ஆம் ஆண்டின்ஆரம்பக் காலப்பகுதி காடுகளுக்குள் அடிக்கடி இராணுவம் ஊடுருவித் தாக்குதல் தொடுப்பது வழக்கம் என்றாலும், இம்முறை எதிரியின் நகர்வு வித்தியாசமானதாகவே இருந்தது. எனவே அனைத்து அணிகளும்இராணுவம் முன்னேறுகிற ஒவ்வொரு பக்கமாக சென்று நிலையெடுத்தனர். எமது அணி இரவோடு இரவாக தரவையிலிருந்து பல மைல்கள் நடந்து ஈரலாக்குளம் காட்டுப் பகுதியை சென்றடைந்தது, எமது அணியின் லெப் ராவ்வும் ஒருவனாக வந்தான்.

**க. மிரேஸ்**

பொழுது மெது மெதுவாக விடியத்தொடங்கியது. எதிரி எங்கே மறைந்திருக்கிறான் என்பது எமக்கு தெரியாமல் இருக்கவே 2ம் லெப்ரினன் தரனை மாடு மேய்ப்பவன் போல் பக்கத்திலிருந்த ஒரு மாட்டுப் பட்டியின் பக்கமாக அனுப்பி நோட்டமிட்டபோது, ஈரலாக்குள பாடசாலைக்குக் கிழக்கே இருந்து தரவை நோக்கி எதிரியின் இலகு இயந்திரத் துப்பாக்கி ஒன்று சடசடத்தது. தரன் எமது பக்கமாக ஓடி வந்து விட்டான். இப்போது நாமிருந்த காட்டுப்பகுதியில் நிலைகளை மாற்றி அமைத்து விட்டு லெட். கேணல் உருத்திரன் ஆசிரியருக்கு நிலைமையை அறிவித்தோம். எதிரியின் நகர்வை புரிந்துகொண்ட உருத்திரன் ஆசிரியர் எதிரிக்கு பாசாங்கு காட்டி உள்ளே இழுக்குமாறு கூறினார்.

காலை ஏழுமணி எதிரி நாங்கள் இருந்த இடத்தை மிக மிக நெருங்கிவிட்டிருந்தான், சுமார் 35 வயதை கடந்து விட்ட அந்த இலகு இயந்திரத் துப்பாக்கிக்காரனின் முகம் கொடூரமானதாக தெரிந்த அதே வேளை ஏனையவர்கள் பரவலாக நகர்ந்து பக்க வாட்டாகச் செல்ல, லெப் ராவ்வின் S.84 முன்னே வந்த எதிரியை குறிதவறாமல் சுட்டு வீழ்த்திய சில விநாடிகள் எதிரி திகைத்தான், மேலும் எங்களது குறிதவறாத சூடுகள் எதிரியை முழுமையாக நிலை தடுமாறிடவைக்கவே, ஏனைய இரண்டுபக்கங்களிலும் எம்மை சுற்றிவளைக்க எத்தனித்த போது எதிரியை எங்களது பக்கமாக திசை திருப்பி பின்வாங்கினோம்.

இப்படி பின்வாங்கிய நாமும் ஏனைய பக்கங்களில் எதிரியை எதிர்த்து போரிட்ட ஏனைய அணிகளும் வந்து ஒன்று சேர்ந்தோம். எதிரியின் முன்னேற்றமும் பரவலானதாகவே இருந்தது. எங்களது பார்வையில் படாத மேலும் எதிரியின் இரண்டு அணிகள் 9ம் கட்டைப் பக்கமிருந்தும் கெவர் மலைக்கு பின்புறமான தேக்கந்தோட்டம் பக்கமிருந்தும் வந்து அழியா ஓடையில் நிலை எடுத்திருந்தான். அழியா ஓடையில் உள்ள எதிரியோடு இணையவே ஏனைய எதிரியின் அணிகள் முன்னேறி வந்து கொண்டிருந்தனர். இதற்கிடையில் எதிரியின் உலங்கு வானூர்திகள் தொடர்ந்து சூட்டாதரவை கொடுக்க எதிரி முன்னேறினான். அந்தக் காலத்தில் எதிரியை எதிர்த்து போரிட ஆற்றல் இருந்தும் எமக்கு கனரக ஆயுதங்கள் இல்லாதது பெரும் தடையாக இருந்தது. எனவே நாமும் பின்வாங்கி அழியா ஓடையின் வெளிப்புறக்காடுகளில் எம்மை உருமறைத்த போது நேரம் மாலை 06 மணியைத் தாண்டியிருந்தது.

அப்போதுதான் கப்டன் மாவியின் தலைமையில் எமது அணி ஒன்று எதிரியின் மறைவிடத்தை நோக்கி நகர்ந்து சென்ற சில நிமிடங்களில் பாரிய வெடிச்சத்தங்கள் கேட்டன. எமது அணிக்கும் எதிரிக்கும் சண்டை இடையிலேயே தொடங்கிவிட்டதனால் நிலைமையைத் தெரிந்து கொள்ள கப்டன் மாவியிடம் தொடர்பை ஏற்படுத்திய போது மாவியின் தொடர்பு இல்லாது போய்விட்டது. அந்த பிரதேசம் எங்கும் கடுமையான இருளால் சூழ்ந்திருந்தமையினாலும் தொலைத் தொடர்புக் கருவிகளின் பற்றாக்குறையினாலும் சென்ற அணியோடு தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது. எங்களது எல்லாவித முயற்சிகளும் கைகூடாமல் இருந்தது.

இரவு எட்டு மணியளவில் இரண்டு...மூன்று இடங்களில் ஏதோ எரிவது தெரிந்தது. அந்த வெளிச்சத்திற்கு என்ன காரணம் என்று. தெரிந்து கொள்ள நினைத்தபோது, கப்டன் மாவியின் அணியில் சென்ற மோகன் வந்து நாங்கள்போய் நிலைகளை தெரிவு செய்யும் முன்பாகவே... எதிரி தாக்கிவிட்டான். மாவியும் மேலும் சிலரும் காயமடைய எல்லோரும் பிரிந்து சென்று தாக்கினோம் என்றான். ஆனால் அந்த சண்டையின் இறுதியில் மோகன் மட்டுமே தப்பினான் என்பது மறுநாள் உறுதியானது.

இரவு எங்களை ஒருவித துன்பம் வாட்டியது. காரணம். மோகனைத் தவிர மாவியையோ, மாறனையோ, அல்லது எங்கள் அசாத்திய வீரனான ராவ்வையோ காணாதது எமக்கு பெரும் கவலையாக இருந்தது. எங்கள் கவலையுடனே காலை விடிந்தது.

அழியா ஓடை மலைப்பகுதியில் நிலை கொண்டிருந்த எதிரி அணிகளை தாக்கவென மேஜர். சங்கர் தலைமையில் அணிகள் தயாராகின. காலை 08.00மணிக்கு அணிகள் நகர்ந்து சண்டையை ஆரம்பிப்பதற்கு முன்பு எதிரியின் இருப்பிடத்தை இனங்காணமுடியாமல் இருந்தது. என்றாலும் தாக்குதல் அணிகள் நகர்ந்தன. நாம் நகர்ந்த இடத்திற்கு முன்பாக ஒரு தொடரான வேட்டோசையுடன் மலையை நோக்கிச்சுடுங்கடா... என்ற சத்தமும் வந்தது. சத்தம்வந்த திசையை பார்த்த உருத்திரன் ஆசிரியர் டேய் எங்கட ராவ்டா... என்று உற்சாகமிகுந்த சத்தத்துடன் குரல் கொடுக்க. அவர் ராவ் இருந்த இடத்தை நோக்கி ஓட... எதிரி முந்திக்கொண்டு அந்த இடத்தை சல்லடை போட்டான்.

சண்டை தொடங்கிவிட்டது. எதிரிக்கும் எமக்கும் இடையிலான தூரம் மிகவும் நெருங்கிவிட்டது. எப்படியோ இரவு முழுவதும் ராவ் எதிரி கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, அந்த இடத்தில் மறைந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ள சிரமமாய் இருக்கவில்லை.

எதிரி நிலைகொண்டு காப்பெடுத்து தாக்கியதால் எமக்கு எதிர்ப்பு கடுமையாக இருந்தது. நானும் தாசனும் யுவராயும் ராவ் இருந்த பக்கமாக காப்புச்சூட்டை மாறி மாறி கொடுத்து போக முயன்றும் பயனளிக்கவில்லை. அந்த நேரத்தில் ராவ் கத்துகிறான் வரவேண்டாம்..., வரவேண்டாம்... அதிலேயே இருந்து சுடு.... அவனது தளதளத்த குரல் எம்மை ஏதோ செய்தது. ராவ் பெரும்பாலும் காயமடைந்திருக்க வேண்டும். காரணம் படுத்தவாறே சுட்டுக் கொண்டிருந்தான்.

அதே நேரத்தில் மூன்று எதிரிகள் தீடிரென எழுந்து தனது மூர்க்கமான தாக்குதலைத் தொடுத்து ராவ் இருந்த இடத்தை நோக்கி சுட்டுக் கொண்டு முன்னேறினர். எதிர்பாராத இதை சமாளிக்க ராவ் எழுந்து கை எறிகுண்டை எறிந்தான். மூவரும் காயத்துடன் விழவே, வேறு எங்கிருந்தோ ஒருவன் ராவ்க்கு மீண்டும் சுட்டுவிடவே முனகியபடி கீழே விழுந்தான். எமக்கு வந்த எதிர்ப்பைச் சமாளித்துச் சுட்டுக் கொண்டே ராவ் இருந்த பற்றைக்கு சென்றபோது அவனது வல்து காலிலும் வயிற்றிலும் காயமடைந்திருந்தான் இரவுதான் வயிற்றில் காயமடைந்து தவழ்ந்து இந்தப் பற்றைக்கு வந்ததாகவும் விடிந்தவுடன் எப்படியும் இரண்டு பேரையாவது சுட்டுவிட்டே சாவது எனவும் உறுதியாக இருந்ததாகவும் தளதளத்து நாவறண்ட குரலில் கூறினான். தன்னைத் தூக்க வேண்டாம் என்றும் உயிர்பிரிவதற்குள் இன்னுமொருவனை என்றாலும் சுட்டுவிட்டே சாவன் எனக் கெஞ்சினான். அப்போது அவனது துப்பாக்கியையும் ரவை அங்கியையும் கழற்றிய போது ஏன் மச்சான் இதை கழற்றியள்..., இது தானடா என்ர உயிர்.... என்று சொல்லி பெருமூச்சு விட்டவனை தரன் தூக்கி தோளிலே போட்ட போது மேலும் எங்கிருந்தோ வந்த ரவை ஒன்று அவனது முதுகிலே பட்டது. ஆ அம்மா எனது.. என்றவன் தனது இறுதி மூச்சிலும் தனது ரவை அங்கியையும் துப்பாக்கியையும் யுவராயிடமிருந்து பறித்து முத்த மிட்டவாறே வீர விதையாகினான்.

## ஆபத்தான பயணம்



பசுபதி:- என்ன கணபதியர் திடீரெண்டு இடுஞ்சு போய் நிக்கிறியள்.

கணபதி:- சும்மா விசரைக் கிழப்பாதையும் என்னட்டை பத்தாயிரம் கடன் வாங்கினவன் A-9 ஆலை போய்க் கொண்டிருக்கிறானாம்

# சந்திரிகா ரணிலை வீழ்த்தியது போல் ரணில் சந்திரிகாவை வீழ்த்துவாரா?

அண்மையில் மகரகம பகுதியில் அமைந்திருந்த மக்கள் வங்கியில் பட்டப்பகலில் கொள்ளையர்கள் துணிந்து சுமார் ஏழு இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டு சென்றிருந்தனர்.

பிறிதொரு சம்பவத்தில் ஒரு கொள்ளையர் கோஸ்டிக்கும் பொலிசாருக்கும் நடந்த மோதலில் இரண்டு கொள்ளையர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இதனைவிட ஏராளமான கொள்ளைகளும், கொலைகளும் தென்பகுதியில் நடந்து வருகின்றது.

இன்று இலங்கையிலிருந்து வெளிவரும் சிங்கள பத்திரிகைகளில் இத்தகைய கொலை கொள்ளை தொடர்பான செய்திகள் கணிசமான அளவுக்கு இடம்பிடித்து விடுவதை எவரும் அவதானிக்கலாம்.

இதற்கு காரணம் என்ன?

ஒன்று தென்பகுதியில் சட்டம் ஒழுங்கைப்பேணுவதில் பொலிஸ் தரப்பு பலவீனமாகிவிட்டது.

இரண்டு -திடீரென கொலை கொள்ளையில் ஈடுபடுபவர்களின் தொகை அதிகரித்துவிட்டிருக்கிறது.

மேற்படி இந்த இரண்டு பின்னணிகளின் அடிப்படையில் இதை மேலெழுந்தவாரியாக எவரும் நோக்குவர்.

சரி. சட்டம் ஒழுங்கு பலவீனப்பட்டுப்போவதற்கோ, அல்லது திடீர் கொள்ளையர்கள் அதிகரிப்பதற்கோ அடிப்படையில் அரசின் பலவீனங்களே காரணமாக இருக்கும். இது இலங்கையில் மட்டுமல்லாது உலகம் முழுவதுமுள்ள பொது வழமை.

அந்தவகையில் இலங்கையில் இந்த திடீர் அதிகரிப்புக்கு காரணம் இல்லாமல் இல்லை.

இன்று சிங்களதேசத்தில்

நிலைப் பாட்டை நாம் நோக்கவேண்டும்.

தென்னிலங்கையில் எல்லா மாற்றங்களுக்கும் அடிப்படையில் பொருளாதாரரீதியான ஒரு துரித மாற்றமே எதையும் நிர்ணயிக்கும் ஒன்று என்கிற நிலையாகிவிட்டது.

இந்த நிலைமாற்றத்திற்கு நாட்டில் ஒரு யுத்தமற்றஅதேவேளை இனப்பூசலற்ற அமைதியொன்றை உலகம் எதிர்பார்க்கிறது.

இதற்கு தமிழ்மக்களின் பிரச்சினைக்கு உரிய அரசியல் தீர்வொன்று எட்டுவதையே உலகம் விரும்புவதோடு

உண்மையில் ரணில் விக்கிர மசிங்க, சந்திரிகா தன்னை வீழ்த்த எவ்வளவு அவசரமும் பதட்டமும் காட்டினாரோ அந்தளவு பதட்டத் தையும் அவசரத்தையும் காட்ட விரும்பவில்லை.

ரணில் சந்திரிகாவை காத்திருந்து வீழ்த்தவே விரும்புகிறார். இதனையே 13ஆவது நாடாளுமன்றின் நான்கு அமர்வுகள் நடந்தபோதும் அந்த அமர்வில் சந்திரிகாவின் தரப்புக்காட்டவேண்டிய அறுதிப் பெரும்பான்மையைக்

வேண்டும் என அந்தக்கட்சி விரும்புகிறது.

அதாவது ஐ.தே. முன்னணி அரசை வீழ்த்த ஜே.வி.பி.யும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும். எந்த ஆயுதத்தை எடுத்தார்களோ, அந்த ஆயுதத்தை ஐக்கியதேசியக்கட்சி வேறுவிதமாகப் பயன்படுத்த முயல்கிறது. எப்படியென்றால் ஜே.வி. பி.யும்,சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அரச ஊழியர்களையும், தொழிற்சங்ககங்களையும் பெருமளவு ஐக்கியதேசிய முன்னணி அரசுக்கு எதிராகத்

ஒரு தகவலின்படி நடைபெறப்போகும் மாகாணசபைத் தேர்தலின்பின்னர் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாகவும் இந்த அதிகரிப்பு சதக்கணக்கில் இல்லாமல் ரூபாக்கணக்கிலானதாக இருக்கப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத்தகவலை வீடுத்தவர் எரி பொருள் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவரே.

இந்த நிலையில் சந்திரிகா அச்சுறுத்தல்களின் மத்தியில் அரசியாக வீற்றிருக்கிறார்.

சந்திரிகாவால் முன்பு போல சமாதானத்தை ஒருநாடகமாக்கும் தந்திரோபாயத்தையும் செய்யமுடியவில்லை. இந்தத்தந்திரோபாயம் இப்போது காலாவதியாகிவிட்டது. இனி சந்திரிகா புதிதாக எதையாவது யோசித்தால்தான்.

சிலவேளை அத்தகையதொரு நிலைப்பாட்டுக்கு சந்திரிகா வருவாராயின் அது அவரது வாழ்வா? சாவா? என்ற நிலையில் எடுக்கும் ஒரு முடிவாகத்தானிருக்கும்.

இத்தகையதொருநிலை சந்திரிகாவுக்கு அதிகம் அச்சுறுத்தக் காரணம் சந்திரிகா - ஜே.வி.பி. க்கூட்டு அவருக்கு நண்பர்களைவிட எதிரிகளைத்தான் அதிகம் தோற்றுவித்து விட்டது.

இந்தநிலையில் ரணிலின் காத்திருப்புத்தொடங்கிவிட்டஒருபுறம் ரணிலின் நம்பிக்கைக்குரிய மிலிந்த மொறகொட அமெரிக்காவிற்கு பயணம் ஒன்றை தொடங்கியுள்ளார்.

அவர் அங்கு இலங்கையின் சமாதான முயற்சிகளோடு தொடர்புடைய ரிச்சட்ஆர்மிரேச்சையும், கிறிஸ்ரினா றொக்காவையும் சந்திக்கப்போகிறார் சிலவேளை அவர்களிடம் அவர் நிதிவழங்களை எவ்வளவுக்கு காலதாமதப்படுத்த முடியுமோ அவ்வளவுகால தாமதப்படுத்துமாறு கோரினாலும் கோரலாம்.

இது சிங்களதேசம் தங்களுக்கிடையில் தாங்களே காலை



**சந்திரிகாவின் தரப்பு தாம் அடுத்ததேர்தலுக்குப்போவதென்றாலும் தயார். ஆனால் அதற்கு ஐக்கியதேசியக்கட்சி தயாரா? எனச் சீண்டியபோதும் ஐக்கியதேசியக் கட்சிக்காரர்கள் நழுவல் போக்கைத்தான் கடைப்பிடித்தார்கள்.**

**இதற்குக் காரணம் ஐ.தே.க.காரர்கள் உண்மையில் ஒரு தேர்தலுக்குப்போக விரும்பவில்லை. ஏனெனில் ஐ.தே.க. இப்போது வகுத்திருக்கும் வியூகம் காத்திருந்து கழுத்தறுப்பது. இதற்கு நாட்டில் சில காரியங்கள் நடந்தாகவேண்டும் என அந்தக்கட்சி விரும்புகிறது.**

தணிக்கொள்ளையர்கள் எல்லாம் குழு மயமாகிவிடுகிறார்கள் என்றொரு தகவலும் உண்டு.

அப்படியானால் சிங்கள தேசத்தில் இந்த கொள்ளையிலும் கொலையிலும் ஈடுபடும் சிங்கள தேசத்தின் புதல்வர்கள் தமக்கான வேலைவாய்ப்புகளும் அரசுகள் தமக்காக வாக்குறுதி அளித்த வாக்குறுதிகளும் கைகளுக்கெட்டாமல் போகவே விரக்தியின் விளிம்புக்கு தானாகவே தள்ளப்பட அவர்கள் புதிய தொழில் முயற்சியில் இறங்க தொடங்கிவிட்டனர்.

இவ்வாறு தொழில் முயற்சியில் இறங்கியவர்களுக்கு முதலீடுகள் இல்லாதொழில் என்றால் அது கொள்ளையும் கொலையுமாகி விட்டது.

இப்போது இந்த பின்னணியில் தான் சந்திரிகாவின் அரசின்

வலியுறுத்தவும் செய்கிறது.

இதனால் தான் இலங்கையின் பொருளாதார நலனை ஒரு

**சிறி.இந்திரகுமார்**

ஆயுதமாகவும் உலகம் பயன்படுத்தவும் செய்கிறது.

ஆனால் சிங்கள தேசம் முதலில் தங்களுக்கிடையிலான அரசியல் ரணகளத்தை திறந்து அதற்குள் அதிகாரத்தையார் பிடிப்பது என்ற போட்டா போட்டியில் முன்நிற்கிறது.

அதன் ஒருபடியாக சந்திரிகா - ரணில் பரிவாரங்களிற்கிடையிலான மோதல் உச்சகட்டத்திலிருக்கிறது.

ரணிலை வீழ்த்திவிட்டு பலவீனப்பட்ட நிலையில் சந்திரிகா ஆட்சியை நகர்த்துகிறார்.

இந்த நிலையில் ஒரு கேள்வி எழுகிறது ரணிலை சந்திரிகா வீழ்த்தியது போல ரணில் சந்திரிகாவை விழ்த்துவாரா?

காட்டமுடியாமல் திணறியபோதும் ரணில் தனது பழைய கனவான் தனத்தின் அடிப்படையிலேயே அணுகமுறப்படுகிறார்.

ரணிலின் இந்தப்போக்கு சந்திரிகாவுக்கு ஆத்திரத்தை மட்டுமல்ல நிதானத்தை இழக்கக்கூடச் செய்துவருகிறது.

சந்திரிகாவின் தரப்பு தாம் அடுத்ததேர்தலுக்குப்போவதென்றாலும் தயார். ஆனால் அதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தயாரா எனச் சீண்டிய போதும் ஐக்கியதேசியக் கட்சிக் காறர்கள் நழுவல் போக்கைத்தான் கடைப்பிடித்தார்கள்.

இதற்குக் காரணம் ஐ.தே.க.காரர்கள் உண்மையில் ஒரு தேர்தலுக்குப்போகவிரும்பவில்லை.

ஏனெனில் ஐ.தே.க. இப்போது வகுத்திருக்கும் வியூகம் காத்திருந்து கழுத்தறுப்பது. இதற்கு நாட்டில் சில காரியங்கள் நடந்தாக

தூண்டிவிட்டன.

ஆனால் ஐ.தே.க. தாங்கள் தூண்டாமல் இந்தஊழியர்களும், தொழிற்சங்கங்களும் ஐக்கியமக்கள் விடுதலைமுன்னணிக்கு எதிராகக் கிழர்ந்தெழும்வரை காத்திருக்கத் தயாராகிவிட்டார்கள்.

ஐ.தே.க.வின் இந்தக் கணக்கை ஓரளவு மெய்ப்பிக்கும் வகையில் இப்பொழுதே சில தொழிற் சங்கங்களும் அரசஊழியர்களும் அரசை எச்சரிக்கத் தொடங்கி விட்டனர்.


இறுதியாக எழுதுவிளைஞர் சங்கம் அரசுக்கான தமதுஆதரவை விளக்கவேண்டிவருமென எச்சரிக்கிறது.

இதைவிடசாதாரணப் பொது மக்களின் தரப்பில் அவர்களின் வாழ்க்கைத்தரச் செலவீனம் முன்பைவிட இப்போது அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமுண்டு.

வாரத்தொடங்கிவிட்டதையே காட்டுகிறது. இந்த நிலையில் சந்திரிகா அரசின் ஆயுள்ரேகை அற்பமாகவே இருக்கும்என்பது வெள்ளிடைமலை.

இந்த அதிகாரசரிவு எப போது என்பதுதான் இப்போது பிரச்சினை. இதில் தமிழ்மக்களின் உண்மையான அரசியல் தீர்வு என்பது அதிக பலத்தோடு எவர் ஆட்சியில் அமர்கிறார்களோ அதற்கு பின்னர் தான் சாத்தியப்படலாம்.

**கூண்டோடு கைலாசம்**



நீண்ட வரிசையில் நிற்பவரை(எல்லாம்) ஏற்றுவது கூண்டோடு கைலாசம் போகும் செயல்.

# கேள்விகளின் மையமாயுள்ள 'செந்நீல' தோழர்கள்

" அவதந்திரம் தனக்கந்தரம்" என்பதே தமது இயங்கியலாகிப் போய் விட்ட, சிறிலங்காவின். இன்றைய 'ஆளும்'. சிவப்பு, நீலக் கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீளமுடியாத சிக்கல்களுள் மாட்டித்த விக்கிறது. இருந்தபோதும் அதனது வாய்ச்சவடால்களோ கொஞ்சமும் குறைந்து விடுவதாகத் தெரிய வில்லை. பேச்சுப்பல்லக்கு தம்பி கால் நடை என்று இதற்கும் ஒரு பழமொழி தமிழில் உள்ளது.

இவ்வாறு வாய்ச்சவடாலுக்கும் அந்தரத்துக்கும் நடுவே அல்லாடும் இக்கூட்டணி பச்சைக்கு எதிரானது என்ற பொதுப்பணிவுடன் நீலம் ஒரு முனை நோக்கியும் சிவப்பு ஒரு முனை நோக்கியும் நகரத் தொடங்கி விட்டது. இந்த இருமுனை நகர்வில் மேலும் ஒரு ஒத்த பண்பு காணப்படு கிறதெனில் அது தமது ஆட்சி கலைந்துவிடக்கூடாது என்பதாகும். இவ்வாறு கட்சியைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்காக கடந்த இரண்டு மாதங்களில் இந்தச் செந்நீலங்கள் அடித்த கூத்துகள், குத்துக் கரணங் கள், செய்த அராஜகங்கள் இலங் கையர் அனைவரையுமே கூனிக் குறுகவைத்துவிட்டன.

'பஞ்சமகர்' கொள்கைகளுடன் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒப்பந்தம் கைச்சாத் திட்டு, ரணிலின் அரசு மீது வாழ்க் கைச் செலவு உயர்வு, ஊழியர்கள்-தொழிலாளரின் நலன்கள் புறக்கணிக் கப்படுகின்றன, புலிகளிற்கு நாட்டைத் தாரை வார்த்துக் கொடுக்கும் சமா தான முயற்சிக்கான எதிர்ப்பு ஆகிய மும்முனை வியூகத்தில் தாக்கு தலைத்தொடுத்ததோடு அமைச் சுக்கள் கையேற்பு,நாடாளுமன்றக் கலைப்பு, பொதுத்தேர்தலூடாக சிறு பான்மை அரசொன்றினைச் செந் நீலங்கள் அமைச்சுக்கொண்டமை யாவருமறிந்ததே.

என்றாலும் வானத்தை வில்லாக் வளைக்கும் இவர்களது கனவுகள் யதார்த்தத்துக்கு ஒத்துவரவில்லை என்பதே உண்மை. அந்த உண் மையே செந்நீலங்களின் இன்றைய செயலின்மைக்கும், அராஜகத்துக்கும், தடுமாற்றமான அறிக்கைகளுக்குமான அடித்தளமாகும். எவ்வாறெனில் இயல்பாகவே ஆதிக்க குணமும் மற்றவரை மதிக்காத இயல்புமுள்ள நீலமும், சிவப்பும் தமக்குக் கிடைத்த 106 இனை 113 ஆக்கிக்கொள்ள கடைப்பிடித்த வழிமுறைகளே அவர் களது இன்றைய அந்தர நிலையின் உடனடித் தோற்றுவாயாகும். தமது எதிர்த்தரப்பினரைக் கிள்ளுக் கீரைக ளாகவும் அவர்களது அபிலாசை களைத் துச்சமாகவும் மதிக்கும் பண்பே இதன் அடிப்படையென்பதை இந்தப் பண்புகளாலேயே தோன்றி இன்று பூதாகரமாக வளர்ந்துவிட்ட இனப்பிரச்சினையால் வதையுண்ட ஈழத்தமிழர் நன்கறிவோம். ஆனாலும் சிங்களவர்களுக்கு இது தற்போ துதான் புரியத்தொடங்கியுள்ளது போலப்படுகிறது.

நாங்கள் விடயத்துக்கு நேரடியாகவே வருவோம். தம்மால் நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கமுடியாது; அதனாலேயே அமர்வுகளைத் தாம் நினைத்தபடி நடத்த முடியாது என்பதை உணர் ந்து கொண்ட செந்நீலங்கள் தற்போது 13 ஆவது நாடாளுமன்றத்தையே கைகழுவிவிடும் மன நிலைக்குச் சென்றுவிட்டமை இந்த 'அந்தரத்தின்' வெளிப்பாடுதான் . அதனாலேதான் நாடாளுமன்றின் உள்ளே அரச தரப்பி னர் காட்டுத்தர்பார் நடத்தியாவது தமது ஆட்சியைச் சிறிது காலத் துக்காவது தக்கவைக்கவேண்டி யுள்ளது.

இந்த வேளைகளின் மத்தியில் நடந்த வெட்கக்கேடு பற்றிச் சிறிது நுழைந்து பார்க்கவேண்டியுள்ளது. தேர்தல் காலத்திலேயே ஜே.வி.பி யினர் தமக்கு அந்தந்த அமைச்சு க்கள் தேவை என்பதைத் தெளி வாகக் கூறி அதனைத் தமக்குப் பெற்றுக்கொள்வதில் சந்திரிகா அம்மையாரை வென்றுவிட்டிருந்த னர். இவ்வாறு பெறப்பட்ட நான்கு அமைச்சுக்களில் கலாசார விழுமி யங்களுக்கான அமைச்சும் ஒன்றா கும். இந்த அமைச்சுக்கு ஜே.வி.பி சார்பில் இரண்டாவது பெரும் எண்ணிக்கையான்தும், கம்பஹா மாவட்டத்தில் அனுராபண்டார நாயக்காவை இரண்டாமிடத்துக்குத் தள்ளிவிட்டு இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானதுமான விருப்புவாக் குகளைப் பெற்றவருமான விஜித ஹேரத்தை நியமித்தது. ஜே.வி.பி.

இந்தக்கலாசார அமைச்சர் விஜித ஹேரத், நாடாளுமன்றின் கடந்த அமர்வின்போது சிறலங்காவின் கலாசார விழுமியங்களை மட்டுமல்ல மனித நாகரிகத்தையே காலில் போட்டு மிதித்திருந்தமையையே வேதனை எனக் குறிப்பிட்டேன்.

சிறிலங்காவின் சிங்கள பௌத் தர்கள் மத்தியில் 'ஹாமது அல்லது 'சாது' எனப் பணிவோடு அழைக் கப்படும் பிக்குகள் கேள்விகளுக்கு அப்பாலான அதியுயர் மதிப்பிற்கு உரியவர்கள் நாட்டின் தலைவர் கூட அவர்களுக்கு சமமாக அமரும் வழமை கிடையாது, அவர்களின் கால்களைப் பணிந்து ஆசிபெறுவதே சிங்களத் தலைவர்களின் முதற் பணியாக அமைகிறது. இவ்வாறான பிக்குகள் இருவர் சிறிலங்காவின் நாடாளுமன்றின் நடுவே சிக்கிப் பந்தாடப்பட்டதுடன் தீவிரமான உட் காயங்கள் ஏற்படுமளவுக்கு நையப் புடைக்கப்பட்டுள்ளனர். இதைவிடக் கேவலமாக; அன்றைய தினம் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டஅக் மீமன தயாரத்ன என்ற பிக்குவின் காவியுடை கலாசார விழுமியங்கள் அமைச்சராலேயே சபை நடுவே உரியப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் தயவில் அன்று தனது மானத்தையும் எச்சசொச்ச மாகவுள்ள சிறிலங்காவின் மானத் தையும்தயாரத்ன தேரர் காப்பாற்றிக் கொள்ள முடிந்துள்ளது சற்று ஆறுத லான விடயந்தான்!

இவ்வாறு நவீன துச்சாதனர்களாக மாறிவிட்ட ஜே.வி.பி.யினர் 'நாடாளு மன்றை எதிர்க்கட்சிகள் கட்டுப் படுத்துவதை இனியும் பொறுக்க முடியாது' எனப் பகிரங்கமாக அறி வித்துவிட்டனர். இந்த அறிவிப்பு வெளியான பத்திரிகையாளர் மாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ர உறுப்பினரும் 'செந்நீல' ஆட்சியின் சபை முதல் வருமான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயும் பிரசன்னமாகி இந்தக் கருத்துக்கு ஒத்தாக இருக்கிறார். ஆக,தமது கட்டுப்பாட்டுக்குள் இந்தப் நாடாளுமன்றத்தைக் கொண்டு வர முடியாது என்னும் நம்பிக்கையை செந்நீலங்கள் இழந்துவிட்டது என்பதே இதன் சாராம்சமாகும்.



அப்படியாயின் இனி நடக்கப் போவது என்ன?

ஏற்கனவே அறுதிப்பெரும்பான் மையுடன் இயங்கிக்கொண்டிருந்த ரணிலின் அரசைக் கலைத்ததற்கு சந்திரிகாவும் அவரது பரிவாரங்களும் புதிய செந்தோழர்களும் தெரிவித்த குற்றச்சாட்டுக்களின் இன்றைய நிலை என்ன?

வாழ்க்கைச் செலவு உயர்வு கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதா? குறைக் கப்பட்டுவிட்டதா? புலிகளின் செயற் பாடுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனவா?

நாட்டைப் பிரிக்காதவகையில் சமாதான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டனவா?

அரச உழியர்கள், தொழிலாழரது நலன்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனவா?

சிறிலங்காவினது வெளிச்சக்தி களினது நடவடிக்கைகள் கட்டுப்ப டுத்தப்பட்டு நாட்டினது இறைமை காக்கப்பட்டுள்ளதா? மதிப்பு சர்வதேச சமூகத்தின் முன்காக்கப்பட்டுள்ளதா?

இதில் எந்தக் கேள்விக்கு செந்நீலத்தாரால் 'ஆம்' எனப்பதில் சொல்ல முடியும்?

எந்த முகத்தோடு அவர்கள் மக்களை மீண்டும் வாக்குகளைக் கோரிச்சந்திக்கப்போகிறார்கள்?

அல்லது மீண்டுமொரு தேர்தலைச் சந்திக்குமளவுக்கு சிறிலங்காவின் நிதி நிலைமை உள்ளதா? மக்களது மனநிலை உள்ளதா? குறைந்தது நாடாளுமன்ற உறுப்பினர்களாவது உள்ளனரா?

ஒன்றன் பின் ஒன்றாகக் கேள்வி களே சூழுகின்றன. பதில்கள் மட்டும் காணக்கிடைக்காத கேள்விகள் இவை.

நாட்டின் ஸ்திரத்தன்மையைக் குலைத்து, விழுமியங்களைக் காலில் போட்டுமிதித்து, மக்களை வறுத் தெடுத்தாவது தாம் ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ளவேண்டுமென் பதே செந்நீலங்களின் அடிமன ஆழம். இவைவிட போரதையும் தெரிவித்துச் சப்பைக்கட்டுக்கட்டுவது விமல் வீரவன்சவாலும் முடியாத காரியம். ஏனெனில் வீரவன்ச இல்லாத ஒன் றையே இரண்டு மன நேரப்பேச்சில் இருப்பதாக அடித்து நிறுவிவிட வல்லவர்.

துகிலுரியப்பட்ட [illegible]குவும், ஒளிக் கப்பட்ட செங்கோ[illegible], ஆசனமாகி விட்ட சபாநாயகர் தெரிவுக்கான வாக் குப்பெட்டியுமாக சிங்கள தேசம் தனது ஆன்மாவில் வீழ்ந்துவிட்ட அடிக்கு மருந்து தேடி அலைந்துகொண்டி ருக்கையில்; செந்நீலங்களோ தமது அடுத்தகட்டப் பதவி வேட்டைக்கான முற்தயாரிப்பில் ஈடுபட்டுக்கொண்டி ருக்கின்றன.

ஈழத்தமிழர்களோ வழமைபோலப் புறமொதுக்கப்பட்டுவிட்ட தமது அபி லாசைகளோடும், சமாதான நடவடிக் கைகளில் விழுந்துவிட்ட ஏமாற்றத் தின் சோகத்தோடும் அசாத்தியப் பொறுமை காத்து நிற்கின்றனர்.

சர்வதேச சமூகமோ 4.5 மில் லியன்களுடன் டொலர் என்ற தங்கத் தட்டுடன் கைவாக்கக் காத்து நிற் கிறது.

இந்த எல்லாக் காத்திருப் புகழுக்கும் ஒரு சாதகமான முடிவு கிட்டுமாவென்பது ஆதிக்க மனோ பாவமும், பதவி வேட்கையும் எத் திசையில் இயங்குகின்றன என்பதி லேயே தங்கியுள்ளன.

**பு.சத்தியமூர்த்தி**

---

# மதவடி மயிலர்



*கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள் என்பார்கள்... உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும் என்றும் ஒரு பழமொழி இருக்குப் பாருங்கோ... பொய் சொல்லும் வாய்க்கு பொரியும் கிடைக்காது என்றும் சொல்லுவார்கள் தெரியும்தானே...!*

*" ஏன் பழமொழிகளாய் அடுக்கிறேன் என்கிறீர்களா? இந்தவாரத்தில் இலங்கை ஒலிவரப்புக் கூட்டுத்தாபனம், மற்றும ரீ.பீ.சி. போன்ற வானொலி ஒலிபரப்பு சேவைகள் மீண்டும் லங்காபுவத் காலத்துக்குப்போய் பொய் பிரசாரம் செய்ததைக் கேட்டால் நீங்களும் அப்படித்தான் பழமொழி களால் திட்டியிருப்பீர்கள்..."*

*"பொய்ப் பிரசாரம் சிறிலங்கா அரச ஊடகங்களின் இலட்சிய நோக்கு என்பது தமிழ்ச் சனத்திற்குத் தெரியாத விடயமல்ல... இந்த இராணுவ நடவடிக்கைகளில் மற்றும் யுத்தக் காலங்களில் வானளாவ பொய் கூறிய வரலாறு இவைகளுக்கு உண்டு."*

*லலித் அத்துலத்முதலி, ரஞ்சன் விஜயரத்னா, அனுருத்த ரத்வத்தை, சரத்முனசிங்க... லக்ஷ்மன் கதிர்காமர் எல்லோருமே பொய்ப்பிரசாரம் செய்து புகழ்பெற்ற பின் தமிழ் மக்களால் பொய் உபசகர்களாக இனங் காணப்பட்டுள்ளார்கள். அவர்களும் இந்த இடையூறுக்கு பொய் உளறியவர்கள் தான்.*

*இப்போது மீண்டும் வதந்தி பரபரப்பு தொடங்கியிருக்க தொப்பிகலவில் புலிகளுக்கும் கருணா குழுவிற்கும் மோதலாம் புலிகளுக்கு கடும் இழப்பாம். எப்படியிருக்கு கதைபாருங்கோ. "ஓடி தலைமறைவான கருணாவை ஒழித்து வைவத்திருக்கிறதே அரச படைதான் என்று நாடெல்லாம் கதைத்து அப்ப அவரை கூட்டில் கொண்டு வந்து இராணுவம் தான் சண்டைபோடவேண்டும் கருணாவின் ஆட்கள் துண்டைக்காணோம் துணியைக் காணோம் என்று ஓடிப்போனபிறகு பெரும் மோதல் நடக்குதாம்.....*

*'உதெல்லாம் சிங்கள மக்களுக்கு எடுபடலாம்... உந்தப்பருப்பு எங்களிட்டை அவியாது பாருங்கோ....'*

*'பொய் சென்னாலும் பொருந்தச்சொல்லவேணும் பாருங்கோ...'*

## நாற்றிசை நடப்புகள்

# ஆதிக்க சக்திகளின் கொள்கை வகுப்புக்குள் ஊசலாடும் கிழக்கு நாடுகள்

ஐங்கரன்



உலகளாவிய அரசியல் நடைமுறை பல்வேறு வெளிப்பாடுகளை அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றது. அவை ஒவ்வொன்று சக்தியின் ஆதிக்க அரசுகளின் இலக்குகளை நிறைவேற்றுகின்ற நோக்குடன் மேற் கொள்ளப்படும். அரசியல் நடைமுறையாக உள்ளது. உலக அரசியலின் ஒவ்வொரு நகர்வுகளும் அரசியல் உள்நோக்கங்களை கொண்டவையாகவே அமைந்திருக்கின்றன. அதனடிப்படையில் உலகளாவிய அரசியலில் முதன்மை வகித்துள்ள சம்பவங்களை பரிசீலிப்போம். இதில் முதன்மைப்படுத்தும் சம்பவங்கள் அனைத்தும் நீண்ட காலத்தில் தாக்கங்களையும்,பாதிப்புகளையும். தரக்கூடிய விளைவுகளாகவே கருதப்படுகின்றது.

**ரொனால் ரீகனின் மறைவு:~**

சராசரியை விஞ்சிய அமெரிக்க சனாதிபதியின் மறைவாகவே ரீகனின் மறைவு காணப்படுகிறது. ரீகனின் பின்பு ஆட்சிக்கு வந்த அனைத்து சனாதிபதிகளும் அமெரிக்காவின் போக்கை ரீகன் போட்ட திட்டத்திலிருந்தே கையாளுபவர்களாக உள்ளார்கள். உலக மாறுதலுக்கு வித்திட்ட அமெரிக்க சனாதிபதியாகவே ரீகன் காணப்படுகிறார். பனிப் போரை முறியடிக்கவும் அதன் வெற்றிடத்தை உலகத்தில் வேறு எந்த சக்தியும் நிரப்ப முடியாத உலக சூழலையும் உருவாக்கியவர் ரீகன் என்பது குறிப்பிடத் தக்க அம்சமாகும். அமெரிக்காவின் நலனுக்காகவும் அதனை அடைவதற்கான உபாயங்களையுமே கொண்ட தலைவராக ரீகன் விளங்கினார்.

ரீகனின் அரசியல் தந்திரம் வரலாற்றில் புதிய தசாப்தத்தை ஏற்படுத்தியது. சினிமா நடிகனாக தனது வாழ்வை ஆரம்பித்த ரீகன் அரசியலிலும் பல நடிகனாகவே நடந்து கொண்டவர். ரீகனின் அரசியல் வாழ்வில் அதிக கலகலப்பை ஏற்படுத்திய ஆயுத விற்பனை சம்பவத்தில் விசாரணையின் போதுதான் அச்சந்தர்ப்பத்தில் மன நோயாளியாக இருந்தார் என்றும் அவ்வாயுத பேரம் பற்றி தனக்கு எதுவும் தெரியாதென செனத்முன் சாட்சியம் அளிக்கும் போது குறிப்பிட்டதன் மூலம் தப்பிக் கொண்டார். உலக அரசியலில் பாரிய திருப்பங்களை ஏற்படுத்திய ரீகன் உள்நாட்டிலும் செல்வாக்கு உடையவராக காணப்பட்டார். இரண்டு தடவையும் சனாதிபதியாக ஆட்சி செய்வதுடன் அமெரிக்காவின் நீண்ட நலனில் அக்கறையுடையவராகக் காணப்பட்டார். சோவியத் முகாமை தோற்கடித்து அரசியலின் பொருளாதாரத்தில், ஊடகத்துறையில் இராணுவத்தில் ராஜதந்திரத்தில் என பலபக்கங்களையும் ஒரே தளத்தில் செயல்பட்டு அமெரிக்காவை வெற்றியின் பக்கமிழுத்துச் சென்றார்.

ரீகன் எப்போதும் உலகளாவிய ஆரசியலில் தனித்த இடத்தை கொண்டிருப்பவர். திட்டமிடலையும், காத்திருப்பையும் தனது தந்திரத்தில் அம்சமாக கொண்டிருப்பதுடன் இலக்கை நோக்கி நகர முன்பு அதன் சூழலை ஒழுங்குபடுத்துவதில் வல்லுனர். சூழலை சரிபடுத்திவிட்டே இலக்கை அடைவதற்கான தாக்குதலை தொடங்குவார். ரீகனின் சகாப்தம் உலக தலைவர்களுக்கு ஒரு பாடமாக அமையும்.

**இந்திய~ அமெரிக்க உறவு:**

முன்னாள் சனாதிபதி ரீகனின் மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்கு சென்ற இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சரும் அவரது குழுவும் அமெரிக்காவுடனான உறவை கோடிட்டுக் காட்டியிருந்தார். காங்கிரஸ் கூட்டணியில் இடதுசாரி கம்யூனிஸ்டுகளின் கை ஓங்கியிருப்பதனால் அமெரிக்க~ இந்திய நெருக்கம் குறைவடையுமென பல அரசியல் விமர்சகர்கள் கூறிவந்தனர். அதற்கேற்றாப் போல் அமெரிக்கரின் மக்களும் இந்தியாவுக்கு எதிரான சக்திகளை அரவணைக்கும் தன்மையை அதிகப்படுத்தியது தெரியவந்தது. இந்த நிலைமையை இந்தியத் தரப்பு அதிக காலம் நீடிக்க விடவில்லை. அமெரிக்க எதிர்ப்பை கொண்டிருந்த மார்திரி தேர்தல் காலத்தை காட்டிய காங்கிரஸ்

அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் கொலின் பவல் வங்களாதேசுக்கு விஜயம் செய்தமையும் அதன் நகர்வுகளை படம் பிடித்துக் காட்டியது. மேலும் இலங்கையுடனான இராணுவ உறவை அமெரிக்கா அதிகப்படுத்தியதுடன் இராணுவப் பயிற்சிக்கான நடவடிக்கையையும் இலங்கை இராணுவத்துடன் இணைந்து ஆற்றத் தொடங்கியுள்ளது. இவையாவும் புதிய இந்திய ஆட்சியாளருக்கு நெருக்கடியான அம்சமாகவே மாறியுள்ளன. இவை யாவற்றையும் முறியடிக்கவே ரீகனின் மரணச்சடங்கிற்கு புதிய அரசின் வெளிவிவகார அமைச்சர் சென்றிருந்தார். ஆனால் அடுத்து விஜயம் உள்நாட்டில் சர்ச்சையைக் கிளப்பியதுடன் அப் புதிய அரசுக்கே பெரும் நெருக்கடியாக மாறிவிட்டது. இதனை விரிவாக நோக்குவோம்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வர முன்பிருந்த பாரதீயஜனதா அரசாங்கம் ஈராக் தொடர்பான அரசியலில் இறுக்கத் தன்மையை கடைப்பிடித்து வந்தது. ஈராக்கில் பணிபுரிய இந்திய இராணுவத்தை இணைத்துக் கொள்ளும் சனாதிபதி புஷ்ஷின் அழைப்பினை நாகரீகமாக வாஜ்பாய் கையாண்டார். ஆனால் புதிய அரசின் வெளிவிவகார மந்திரி அமெரிக்காவிற்கு சென்று கொலின்பவலுடன் உரையாடும் போது ஈராக்குக்கு படையனுப்புவது பற்றி அழைப்புவிடுத்தால் புதிய அரசு மீள்பரிசீலனை செய்யும் எனக் குறிப்பிட்டுள்ளார். இது நத்வர்சிங்ன் வங்குரோத்து அரசியலையே காட்டுகிறது இந்தியா படையனுப்பலாம் அல்லது அனுப்பாமல் விடலாம் ஆனால் அமெரிக்காவிற்குச் சென்று அவ்வாறான கோரிக்கையை முன்வைப்பது பலவீனமான ராஜதந்திரமாகவே இருக்கும். இதனை காங்கிரஸ் கூட்டணியிலுள்ள இடதுசாரிக் கட்சிகள் அவசரமாக கண்டித்ததுடன். அத்தகைய நடவடிக்கைக்கு இடது சாரிக்கட்சிகள் ஒப்புதல் அளிக்க மாட்டாது எனவும் தெரிவித்தன. இத்தகைய வெளியுறவுக் கொள்கையை நிறுத்த காங்கிரஸ் தவறுமாயின் அடுத்த தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே சாத்தியப்படலாம். அதுமட்டுமல்ல அமெரிக்க சார்புடைய செயலாளர்களையும் தூதுவர்களையும் ஆலோசகர்களையும் காங்கிரஸ் நியமிக்க முயல்வதாக இடது சாரிகள் குற்றம் சாட்டி வருகின்றனர் எனவே இந்தியாவின் கௌரவத்தை அசிங்கப்படுத்தும் வெளிநாட்டுக் கொள்கையை புதிய அரசு கடைப்பிடிக்க முயலுமாயின் ஆபத்தான பிராந்தியமே அடிமைப்படும் அரசியல் நிகழ



வாய்ப்பு ஏற்படும்.

ராஜீவ் காந்தியின் அரசியல் ஞானம் இல்லாத தன்மைகளும் தூர நோக்கற்ற முடிவுகளும் இந்தியாவை அபாயமான நிலைக்கு இட்டுச் சென்றது.

மீளவும் அமெரிக்கா பக்கம் சாயும் போக்கை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது.

ஆனால் அமெரிக்க ஆட்சியாளர்களோ வாஜ்பாய் காலத்திலிருந்த உறவை போல் அல்லாது சற்று விலகியே இந்தியாவுடன் உறவை திட்டமிட விரும்புகிறது. குறிப்பாக பாகிஸ்தானின் தனித்துவத்தை பாதுகாப்பதுடன் முஷாரப் அரசாங்கத்தின் ஆட்சியை அங்கீகரிக்கும் போக்கையும் அமெரிக்கா கையாண்டு வருகிறது. பாகிஸ்தான் கொமன்வெல் அமைப்பில் இணைக்கப்பட்டதுடன் பொருளாதார உதவிக்கான அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.

பாகிஸ்தானுடன் நிறுத்திக் கொள்ளாது இந்தியாவுடன் தென்னாசியப் பிராந்தியமே ஆபத்தை அனுபவித்தது. அவ்வாறே மன்மோகன் சிங்கின் அரசாங்கமும் அரசியல் தந்திரமற்ற போக்குகளாலும் அதித சட்டாப்பித்தனமான முடிவுகளாலும் தவறான தென்னாசியாவுக்கே பாதகமான முடிவுகள் எடுக்கப்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது போல் தெரிகிறது. குறுகிய நாட்களுக்குள்ளேயே தவறான முடிவுகளை வெளிவிவகாரத்துறை எடுக்க ஆரம்பித்துள்ளது. ஈராக்கில் போர் முடியவில்லை இப்போதைக்கு அதற்கான வாய்ப்பில்லை அது மட்டுமல்ல உலகிலேயே இந்தனேசியாவுக்கு அடுத்து அதிக முஸ்லிம் கள் வாழும் நாடும் இந்தியாவே. இந்தியாவுக்கு ராஜீத பொருளாதார அடிப்படையில் மிக நெருக்கமான உறவு மேற்காசியாவில் உண்டு. இதனால் ஈராக் விடயம் மிக ஆபத்தானது.

**பாகிஸ்தான் தலிபான்கள் மீது தாக்குதல்:~**

இஸ்லாமியர்கள் இஸ்லாமியர் மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக பாகிஸ்தானியர்கள் தளிபான்கள் ஆயினும். அல்கொய்டாவாகினும் இஸ்லாமியர்கள் என்றடிப்படையில் நோக்காது தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். ஒரு காலத்தில் இத்தகைய அமைப்புக்களை உரமூட்டி வளர்த்தவர்கள் இன்னும் தாக்கியழிக்க முடிவெடுத்துள்ளனர் அவ்வாறு வளர்த்தவர்கள் அழிப்பது இலகுவானதென முழு உலகத்தை ஆக்கிரமிக்கும் சக்திகள் கருதுகின்றன. அத்துடன் பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் முஷாராப் அமெரிக்காவுடனான நெருக்கத் தினையே அதிகம் முதன்மைப்படுத்துவதாக உள்ளார். இந்திய ஆட்சி மாற்றம் முஷாராப்பில் அரசியலுக்கு மேலும் மெருகூட்டியுள்ளது. ஒரு வகையின் தலிபான்களையும், அல்கொய்டாவையும் முஷாராப் தாக்க முயல்வது அமெரிக்காவைத் திருப்திப்படுத்த வேயாகும். இதுவரை இத்தகைய இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு விதித்த பொது மன்னிப்பை ரத்துச் செய்ததுடன் பாகிஸ்தானின் பழங்குடியினர் வாழும் பிரதேசமான வசிரிஸ்தான பகுதி மீது இராணுவத் தாக்குதலையும் தொடங்கியுள்ளது.

முஷாராப் மீதான தீவிரவாதத்தின் தாக்குதலுக்கு பதிலடியாக ஆரம்பிக்கப் பட்ட தாக்குதலாக இருந்தாலும் ஆப்கானிஸ்தான் எல்லையோரம் இஸ்லாமிய தீவிரவாதத்தின் பிரதேசமாகவே உள்ளது அதனால் தாக்குதலின் விளைவுகள் தெற்காசியாப் பக்கம் நகர்வதுடன் பாகிஸ்தான் மீதான தீவிரவாதத்தின் நடவடிக்கை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். அமெரிக்க ஆதிக்கத்திற்கு தலையாட்ட ஆரம்பித்த முஷாராப் இறுதி மூச்சுவரை அமெரிக்க நட்பு சக்தியாகவே விளங்க வேண்டிவரும் இதனால் இந்தியாவுடனான பகையை பாகிஸ்தான் தீர்த்துக் கொள்ளும் பாகிஸ்தான் நலன் ஒருபக்கம் சாதகமாக அமைய மறுபக்கத்தில் பாகிஸ்தானை ஆக்கிரமிக்கும் அல்லது அடிமைப்படுத்தும் சம்பவமும் நிகழும். இத்தாக்குதலூடாக முஷாராப் மட்டுமல்ல தென்னாசியப் பிராந்தியமுமே நெருக்கடிக்கு உட்பட வேண்டிய நிலை ஏற்படும் ஈராக்கின் தொடர்ச்சி பாகிஸ்தானையும் பாதிக்கும் என்பதை நிராகரிக்க முடியாது.

**ஜீ.எட்டு நாடுகள் (G~8)**


ஜீ.8 நாடுகளது உச்சிமாநாடு அமெரிக்காவின் மாநிலமான ஜோர்ஜியாவில் நடந்து முடிந்துள்ளது. நான்கு பிரதான அம்சங்களை கருப்பொருளாகக்கொண்டு மாநாடு ஆரம்பித்தாலும் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. ஆபிரிக்கக் கண்டத்தின் கடன் சுமையை அழிப்பது, உலகளாவிய சமாதானப் படையாக நிறுவுதல், மேற்காசியாவில் சனநாயகத்தை வலுப்படுத்துவீது என்பன நிறைவேற்றப்பட்டதுடன் ஆனால்

இந்திய~ சீனா என்பவற்றை G~8 இல் இணைப் பதென தெரிவிக்கப்பட்ட கருத்து பின்னர் வலுப் பெறவில்லை.

ஆனால் இக் கூட்டு வலுவான கூட்டாக மாறி வருவதுடன் புதிய தடங்களை பதிக்க திட்டமிட்டுவருகிறது.

இப் புதிய திட்டமிடலில் இராணுவப் பொருளாதார (Miltary Conomy) போக்கொன்றும் காணப்படுகிறது. இராணுவத்தின் அணுகுமுறைக்கூடாக ஒரு பொருளாதாரத்தை கட்டிவளர்க்க G~8 நாடுகள் முயன்று வருகின்றமை தெளிவாகிறது. அத்துடன் புதிய ஆசிய சக்திகளையும் (இந்தியா சீனா) அத்தகைய சுரண்டல் பொருளாதார மாதிரிக்குள் தீவிரமாக உள்ளடக்கலாமெனG-8 கருதுகிறது. G~8 நாடுகளின் இலாபத்தையும் அபிவிருத்தியையும் இலக்காகக் கொணடு முன்னெடுக்கப்பட்ட விடயம் எது எவ்வாறான தாக அமைந்தாலும் G~8 சக்திகளின் நடவடிக்கையில் அமெரிக்காவின் நலன்களும் தந்திரங்களும் தனித்துவமானவை என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.





வளர்ச்சியடைந்த கைத்தொழில் வள நாடுகள் விவசாயத்தைக் காட்டிலும் வர்த்தகத்திலேயே முனைப்பாக உள்ளன. இதனை முழு உலகத்திலும் நிறுவ முயல்வதே அதன் பிரதான நோக்கமாக உள்ளது. ஈராக் அரசியலில் இரண்டுபட்ட சக்திகள் G~8மகா நாட்டுடன் ஒன்றிணைந்ததுடன் மேற்குலகத்தின் முரண்பாட்டின் அரசியல் கலாசரத்தை உணரமுடிந்தது.

எனவே முழு உலக அரசியலையும் ஒரே குடையின் கீழ் அளவீடு செய்வோமாயின் வளர்ந்த உலகை ஆளும் சக்திகள் போடும் திட்டங்களுக்கும், நலன்களுக்கும் ஏனைய பிராந்திய அரசியல் சக்திகள் அசைவதையே காட்டுவதாக உலக அரசியல் உள்ளது. ஆதிக்க சக்திகளின் நலன்களுக்கு உதவச் சென்று கீழைத்தேசங்கள் தங்கள் தனித்துவத்தையும் முதன்மையையும் இழந்ததே கடந்த கால வரலாறாகும். இந்த அரசியல் வரலாற்று ஓட்டமே தொடர்கிறது. ●

### வைத்தியசாலையே கதி



வைத்தியம் பிடித்தோர் போல் உந்துருளி ஓட்டுவோர்க்கு வைத்தியசாலையே கதி

# நேர்நோக்கு

மற்றுமொருதேர்தலைச் சந்திக்க ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி தயாராகவுள்ளது. இதுதொடர்பாக 13ஆவது நாடாளுமன்றத்தின் அமர்வில் ஏற்பட்ட "நாடாளுமன்றப் பயங்கரவாதத்தின்" பின் அமைச்சர் ஜெயராஜ்பர்னாண்டோபுள்ளே சவால்விடுத்தார். இதேவேளை ஜே.வி.பி..யின் பிரச்சாரச் செலாளர் விமல்வீரவன்ச தாம் இது குறித்து சந்திரிகா குமாரதுங்கவுக்கு அழுத்தம் பிரயோகிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான கூற்றுக்கள் பலவீனமானநிலையிலிருந்து கொண்டு எதிர்க்கட்சிகளை மிரட்டுவதற்காகக் கூறப்பட்டவையாகு"தற்போதைக்க இருக்கலாம். அதிலும் வீசியஅலையில் அடித்துவரப்பட்ட ஜாதிகஹெலஉறுமய போன்றவற்றை அடக்கிவைக்கக் கூறப்பட்டவையாகவும் இருக்கலாம். ஆனால் சிறிலங்காவின்13ஆவது நாடாளுமன்றத்தின் ஆயுள் மிக அற்பமானது என்பது அது தெரிவுசெய்யப்பட்ட அன்றே குறிக்கப்பட்டுவிட்டது.

இழுத்துப்பறித்துக் கொண்டு தனது ஆயுளைக்கடத்திக்கொண்டிருந்தாலும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் முடிய அதன் ஆயுளும் முடிவுறும் என்பது நிச்சயம்.

இதேவேளை இன்றுள்ள நெருக்கடியான நிலையில் நாடாளுமன்றத்தைக்கலைத்துவிட சனாதிபதி சந்திரிகா விருபலாம் அல்லது நிர்ப்பந்திக்கப் படலாம். ஆனால் இதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பாதிப்புகள் குறித்து இவ்வாறு விரும்புபவர்கள் சிந்திக்கிறார்களா?



2000ஆம் ஆண்டு ஒக்ரோபரில் 11ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் 2001ஆம் ஆண்டு 12வதுநாடாளுமன்றத்துக்கான தேர்தல் 2004 ஏப்ரல் 13வது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் என அடுத் தடுத்து மூன்று தேர்தல்கள் நடத்தப்பட்டுவிட்டன. இரண்டுமாதங்களுக்குள்ளேயே அடுத்ததேர்தல் பற்றிப்பேசப்படுகிறது.

## ஒரேஆண்டில் இரண்டாவதுதேர்தல்...?

இவ்வருடம் நடைபெற்ற தேர்தலுக்கு பொதுமக்களின் பணத்தில் 60கோடிரூபாவுக்கு மேல் செலவிடப்பட்டிருக்கிறது. இதேவேளை தேர்தலைக் கண்காணிக்கும் அமைப்புகளுக்கு 85மில்லியன்ரூபா வழங்கப்பட்டிருப்பதாக இன்றைக்கு ஆட்சிபீடம் ஏறிய கட்சியினர் கூறியிருக்கின்றனர்.

இதனைவிட ஒவ்வொரு வேட்பாளரும் செலவிட்டபணம்,பயன்படுத்தப்பட்ட அரசவளங்கள் என்பனவற்றையும் பார்த்தால்... இதேவேளை தேர்தல் காலத்தில் செலவிடப்பட்டமனிதவளம், சிந்தியகுருதி, அழிக்கப்பட்டசொத்துக்கள்...

சுமார் இரண்டு மாதங்களுக்குமேல் ஒவ்வொருதேர்தலின்போதும் காபந்து அரசாங்கமே நிர்வாகத்தை மேற்கொள்கின்றது. இக்காலப்பகுதியில் எதிர்காலத்திட்டங்கள் எவையுமே, திட்டப்படவோ, நடைமுறைப்படுத்தப்படவோ முடியாது. எனவே அடுத்தடுத்து இடம்பெற்ற மூன்று தேர்தல்களையும் எடுத்துக்கொண்டால் இந்த மூன்றை ஆண்டு காலப்பகுதியில் அறுமாதங்கள் இவ்வாறு கழிந்திருக்கிறது. இந்த மூன்று தேர்தல்களில் இரண்டில்ஆட்சிமாற்றங்கள் இடம் பெற்றிருக்கின்றன. சிறிலங்காவின் ஆட்சிமாற்றமென்பது நாட்டின் சகல நடவடிக்கைகளிலும் மாற்றம் என்பதையே காட்டிவருகிறது. 2000இல் பதவியேற்ற சந்திரிகா அரசாங்கம் யுத்தத்தில் விடாப்பிடியாகநின்றது. 2001இல் பதவியேற்ற அரசாங்கம் சமாதானமுயற்சிகளை இரண்டு வருடங்கள் மேற்கொண்டது. இப்போது 2004இல் மீண்டும் பதவியேற்ற சந்திரிகா அரசாங்கம் சமா தானப்பேச்சுக்குறித்து கதைத்தாலும் அதனை நகர்த்த முடியாத நிலையில் உள்ளது.

சந்திரிகா தலைமையிலான ஐக்கியமக்கள் 'சுதந்திரமுன்னணியின் பிரதான பங்காளியான ஜே.வி.பி. இதுவரை இடம்பெற்ற சமாதானமுயற்சிகள் அனைத்தையும் முற்றுமுழுதாக நிராகரித்து பூச்சியத்திலிருந்து பேச்சுவார்த்தை முயற்சிகளில் ஈடுபடும் நோக்கம் கொண்டதாக உள்ளது.

அதாவது கடந்த இருவருடங்களாக சமாதான நடவடிக்கையின் ஏற்பாட்டாளராக செயற் பட்ட நோர்வேயிலிருந்து செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் பேசப்பட்டவிடயங்கள் அதில் ஏற்பட்டமுன்னேற்றங்கள் பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாக ஐக்கியதேசியமுன்னணி அரசாங்கத்துடன் இணக்கம் காணப்பட்ட புலிகளின் இடைக்காலத்தன்னாட்சித்திட்டவரைபு என அனைத்தையுமே அது நிராகரிக்கிறது.

எனவே ஒட்டு மொத்தமாகப் பார்க்கப்போனால் இலங்கையின் மிக முக்கிய பிரச்சினை ஒன்று தொடர்பாக இருவருடங்களுக்கு மேலாக சர்வதேச அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் அது நிராகரிக்கிறது.

இதேவேளை சனாதிபதி சந்திரிகாவும் கூட இந்த முயற்சியைத்தொடர பெருமளவு விருப்பம் கொண்டவராக இல்லை. அவர் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சித்திட்டவரைபு தொடர்பாக பேசும் அதேவேளை இறுதித்தீர்வு குறித்தும் பேசவேண்டும் என்கிறார்.

இதற்கு கூட யூலை, ஆகஸ்ற்என்று பேச்சுவார்த்தைக்கான நாள் தள்ளிப்போடப் பட்டுக்கொண்டேசெல்கிறது.

அவ்வாறு நாட்குறிக்கப்பட்டு பேச்சவார்த்தைகள் ஆரம்பித்தாலும் கூட அதிலே எடுக் கப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்குக்கூட இந்த ஆட்சிஅல்லது 13வது நாடாளுமன்றம் நீடிக்குமா? என்ற கேள்வியுள்ளது.

இந்தவகையில் பார்க்கும்போது சர்வதேசத்தின் தீவிரமான சமாதான முயற்சி கூடப் பயனற்ற ஒன்றா? என்ற கேள்வியும் எழுகின்றது.

அரச ஊழியர்கள் கடந்த இந்த மூன்றரைவருடகாலத்தில் அனைத்துத் தரப்பினரும் சம்பள உயர்வு கோரி நடத்தியபோராட்டங்கள் சமாளிக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை, அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவில்லை, பொருளாதாரநிலை சற்றுமேம்பட்டதேயொழிய குறிப்பிடத்தக்கவளர்ச்சி ஏற்பட்டுவிடவில்லை. இவ்வாறெல்லாம் நாட்டிற்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து சிந்திக்கா, இந்த நாட்டின் "தலைவர்கள்" அடுத்த தேர்தல் குறித்தும் சவால் விட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ஜே.வி.பி.யை பொறுத்து 9,16,39 என்று உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பை விரைவிலேயே அடுத்த தேர்தலைச் சந்திப்பதன்மூலம் மேலும் அதிகரித்துக்கொள்ளவிரும்பலாம். ஆனால் நாட்டின் நிலையைச் சிந்திக்காது தொடர்ந்தும் செயற்பட்டுக்கொண்டிருந்தால் விளைவு எதிர்மாறானதாகவே இருக்கும். ஆனால் தமிழ்மக்களைப் பொறுத்தவரை அவர்கள் உறுதியாக இருக்கின்ற போதிலும் சிறிலங்காவின் இன்றைய அரசியல் நிலை அவர்களை நிச்சயம் பாதிப்பதாகவே இருக்கின்றது. இதேவேளை சிங்கள மக்களுக்கும் கூட இதுபாதிப்பை ஏற்படுத்தியேவருகிறது என்பதும் வெளிப்படை. ஆனால் குறுகிய அரசியல் நோக்கம் அல்லதுஅதிகார நோக்கம் கொண்ட இவ் அரசியல் வாதிகளைத் தலைவர்களாக அவர்கள் கருதும்வரை இதனைவிட மேலும் மோசமான நிலையே அவர்களுக்குக் காத்திருக்கிறது.

**வேலவன்**

### வெளிநாட்டில்



**போட்டியாளர்:-**
A-9 லை ட்றைவ் பண்ணிறவன் எல்லாம் இந்தமுறை பந்தயத்திற்கு வாறாங்கள் அவங்கட ஸ்பீட்டுக்கு என்னால் ஈடுகொடுக்கமுடியாது தோற்கிறது நிச்சயம்.

**நண்பன்:-**
டோன்ட் வெறி பிறண்ட்... அவங்கள் எங்கை யாவது இடிச்சுப் போட்டு இடையிலை நிப்பாங்கள்.

அண்மையில் வெளியிலிருந்து வந்த ஓவியத்துறை நண்பர் ஒருவரிடம் எங்களின் கடந்தகாலத்தைப்பற்றிப்பேசிக்கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் இராணுவக் கட்டுப் பாட்டுப்பகுதி மக்களின் வாழ்க்கை எப்படி இருந்தது என்று அவர்கேட்டார். அவருக்கு யாழ்ப்பாணமே ஓ... எனது யாழ்ப்பாணமே..., என்ற கவிதையின் சில அடிகளை மட்டும் சொன்னேன்.

"தெருவெனப் படுவது
ஒரு காவலரணில் தொடங்கி
இன்னொரு காவலரணில் முறிவது.
இரவெனப்படுவது
ஊளையிடும் நாய்களுக்கும்
உறுமிச் செல்லும் ட்ரக்குகளுக்குமுரியது

பகலெனப்படுவது
இரண்டு ஊரடங்குச் சட்டங்களுக்கு
இடையில் வரும் பொழுது"

கேட்டுக்கொண்டிருந்த அந்த நண்பர் கண்ணீர் நிரம்பிய கண்களுடன் என் கைகளை இறுகப்பிடித்து அழுத்தினார். இதையெல்லாம் தாங்கள் அறியாதபடிக்கு 'தடா'வும் 'பொடா'வும் தடை பண்ணிவிட்டன என்று கவலையும் கோபமும் தொனிக்கச் சொன்னார்.

யாழ்ப்பாணத்தின் இன்றைய இரவுகளிலும் உறுமிச்செல்லும் ட்ரக்குகள் ஓடிக் கொண்டுதானிருக்கின்றன. ஊளையிடும் நாய்களும் அப்படித்தானிருக்கின்றன. ஆனால், அவை முந்திய அர்த்தத்திலல்ல அந்த மாதிரியுமல்ல.

ஆனால், யாழ்ப்பாணம் அடங்கித்தானிருக்கிறது. அதனுடைய வீதிகளில் இன்னும் இயல்பில்லை. அதனுடைய ஊர்களில் உயிர்ப்பின் அழகில்லை. வளர்ச்சியின் முகமில்லை. எல்லாவற்றிலும் சிதைவும் மந்தமும் குறைவுமாகவே தெரிகிறது.

எல்லோரும் வீதிகளில் போகிறார்கள்: வருகிறார்கள். ஊர்களுக்குள் காணிவிலை உச்சத்துக்குப் போயிருக்கிறது. பலரும் வீடுகளைக் கட்டுகிறார்கள். தோட்டக்காணிகள் வீடுகளாகவும் வளவுகளாகவும் மாறுகின்றன. கோவில்களில் திருவிழாக்கள் நடக்கின்றன. ஹீரோ கொண்டாக்களும், பஜாஜ்களும், ரி.வீ.எஸ்.களும் மினுங்கிக் கொண்டோடுகின்றன. ஹைஏஸ்கள் வீதியை நிரப்புகின்றன. புதிதாகவும் மிகக்கூடுதலாகவும் முளைத்திருக்கின்றன. மிக்ஸர்கடைகளும் தொலைத்தொடர்பு நிலையங்களும்.

யாழ்ப்பாணத்தின் தோட்டக்காணிகள் இல்லாமல்போக அந்த இடத்திற்கு தொலைத் தொடர்பு நிலையங்களும் வீடியோ சென்ரர்களும் வந்திருக்கின்றன என்றொரு நண்பர் சொன்னது சரியெனவே படுகிறது. முன்பு யாழ்ப்பாணத்தின் மரக்கறிகள் வன்னிக்கு வந்தன. இப்போது வன்னியிலிருந்துதான் யாழ்ப்பாணத்துக்கு மரக்கறிகள் வரவேண்டியிருக்கிறது.

வீதிகளில் இன்னும் அதே பலப்படுத்தலோடு இராணுவத்தினரின் காவலரண்களிருக் கின்றன. அநேகமான சந்திகளில் கட்டாயம் இருக்கவேண்டும் என்பதுபோல முகாம்களைப் போட்டிருக்கிறார்கள் படையினர். ஒவ்வொரு சந்தியிலும் அல்லது முக்கியமான இடங்களிலுள்ள பெரிய வீடுகளைத் தம்வசம் வைத்திருக்கிறார்கள் அவர்கள். முட்கம்பிவேலிகள், தடையரண்கள், காப்பரண்கள், எல்லாவற்றோடும் அவர்களிருக்கிறார்கள்.

## யாழ்ப்பாணம் இன்று; சிறு அவதானக்குறிப்பு



தெருக்களிலும் சந்திகளிலும் கடைகளிலும் மிகச் சாதாரணமாகப் புழங்குகிறார்கள் படையினர். படைவண்டிகள் வேகமாகத் திரிகின்றன. இதெல்லாம் நாளாந்த வாழ்க்கையின் ஓரம்சமாக யாழ்ப்பாணத்தில் இன்று ஆகியிருக்கின்றன.

கோவில்களில் பகலோடு திருவிழாக்களை முடித்துவிட்டு எல்லோரும் இரவு வீட்டுக்குள் முடங்கிவிடுகிறார்கள்.

இரவுப் பயணங்கள் இல்லை படக்காட்சி இல்லை. இரவு நிகழ்ச்சிகளில்லை, இரவுக் கடைகளில்லை, இரவில் கொண்டாட்டங்கள் இல்லை, இரவு ஏழு, எட்டுமணிக்குள் நகர்க்கடைகள் முழுவதும் பூட்டப்பட்டு விடும் பிறகு பஸ்போக்குவரத்துகள் இராது வெளியூரிலிருந்து ஒருவர் ஏழுமணிக்கு யாழ்ப்பாணம் வந்தால் அடுத்தவூருக்குப் போவதற்கு போக்குவரத்து வசதிகளில்லை. இரவு ஒன்பது மணிக்குப்பிறகு ஓட்டோவையோ காரையோ கூட ஒரு பயணி வாடகைக் கமர்த்துவதற்கு பொதுஇடங்களில் ஏற்பாடுகளில்லை. இரவுத்தொழில்நிலையங்களும் இயங்கு வதில்லை.

பொதுவாகச்சொன்னால் யாழ்ப்பாணத்தில் இப்போதும் இரவுகளில்லை என்றுதான் சொல்லவேண்டும். போர் நிறுத்தம் வரமுதல் இரவுகளை ஊரடங்குச் சட்டம் வைத்திருந்தது; படையினர் வைத்திருந்தார்கள்.

யாரும் வெளியே வராமல், எல்லாவற்றுக்கும் ஒடுங்கிக்கொடுத்து அனுசரித்துப்போகும் ஒரு நிலை அப்போது உருவாகியிருந்தது. அது யுத்தகாலத்தின் அழுத்தம் - அச்ச விரிப்பு எனலாம்.

ஆனால் இப்போது போர் நிறுத்த காலத்திலும், ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத நாட்களிலும் யாழ்ப்பாணத்தின் இரவுகள் மீட்கப்படாமல்தானிருக்கின்றன.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தபோது அதற்குள் வாழ்ந்துபழக்கப்பட்ட சனங்கள் அது விலக்கப்பட்ட பின்னும் அதன் பிடியிலிருந்து இன்னும் விடுபடவில்லை என்றுதான் படுகிறது. இரவானதும் வீட்டுக்குள் அடைந்துகொள்ளும் சுருக்கு இன்னும் விடுபடவில்லை. இரவின் இயக்கம் இல்லாது இருக்கிறது ஒருநகரம். ஊர்களும் அப்படித்தான். இதுபற்றி எவரும் ஆழமாக யோசிப்பதாகவும் தெரியவில்லை.


யுத்தகாலத்தைப் போலத்தான் போர்நிறுத்த காலத்திலும் மக்களின் மனநிலை இருக்கிறது. சிறு சிறுமெல்லிய விலகல்களும் மின்மினி போன்ற மினுக்கங்களும்தான் சமாதானகாலத்தின் பரிசாக இருக்கிறதே தவிர வேறெதுவுமில்லை.

வவுனியா கூட இரவிரவாக ஓரளவுக்கு இயங்குகிறது. இரவுப்பயணங்கள்கூட நடக்கிறது.

மீட்கப்படாத இரவுகளும்
மீட்கப்படாத நாட்களும்
மீட்கப்படாத இயல்பும்
மீட்கப்படாத சந்தோசமுமாக
இருக்கும் ஒரு வாழ்க்கையில் இன்று யாழ்ப்பாணம்.

**வெளிவாசல் பாலன்**

# நறுக்கென...



அண்மையில் கட்சி தாவிய அந்த முன்னாள் 'மந்தி' ரியைதெரியும்தானே! ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவராகவும், ஐக்கிய தேசிய முன்னணி அரசியல் வெளியுறவுக்கு பொறுப்பாக இருந்தவருமான

## கட்சிதாவிய டிரோன் சந்திரிகாவுக்கு போடுவார் ஜால்ரா

டிரோன் பெர்னாண்டோவின் 'பதவி' யாசை அவர் வாயாலேயே வெளிவந்து விட்டது.

ஐயா அவர்கள் வெளியுறவு அமைச்சராக இருந்த போது வெளிநாட்டு விஜயங்களின் போது அங்கு சமாதான முயற்சிகள் குறித்தும் விடுதலைப்புலிகள் குறித்தும் கேட்கப்படும் கேள்விகளுக்கு கழுவிய மீனில் நழுவிய மீனாக அரைவாசி அனுருத்த ரத்வத்தை பாணியிலும் அரைவாசி லக்ஷ்மன் கதிர்காமர் பாணியிலும் பதிலறுத்த தன்மையைப் பார்த்த போதே இவரின் உள்ளகப் பேரினவாதப் புரையின் நாற்றம் வெளிப்படவே செய்தது.

ஆட்சி மாறியதும் ஐயா கட்சி மாறியது ஆச்சரியப்படவைக்கும் விடயமாக படவில்லை. அவரது பதவியாசை அவரது கொள்கையற்ற தன்மையை மட்டுமல்ல கட்சி, இலட்சியம் சமாதானம் போன்ற விடயங்களில் அவரின் விசுவாசமின்மையையும் கூட இனம் காட்டியது.

பாவம் ரணில் பொறுத்த நேரத்தில் டிரோன் அடித்த குத்துக்கரணம் அவர் எதிர்பார்க்காத ஒன்று தான். ஆனால் இன்னொரு வகையில் அவரைத் தேசியபட்டியலின் மூலம் உறுப்பினராக தெரிவு செய்யாமல் தவிர்த்ததன் மூலம் ரணில் கொஞ்சம் புத்திசாலித்தனமாகவும் தான் நடந்து கொண்டுள்ளார் என்றே கூற வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் தான் ரணிலுக்கு சவாலாக இருந்ததால் தான் தன்னை அவர் புறக்கனித்தார் என்று கூறும் டிரோன். ரணில் சரியாகத் தான் செயற்பட்டுள்ளார் என்று சொல்லாமல் சொல்கிறாரா?

சரி விடுவோம்! இப்போது தனக்கு ஓர் உயர்வரிசைப் பதவியை சந்திரிகா தரப்போவதாக வாக்குறுதியளித்துள்ளாராம். டிரோன்தான் கூறியுள்ளார்.



கட்சி மாறிகள், கொள்கையில்லாதவர்கள், இனத்துரோகிகள், ஊழல் பேர்வழிகள், ஏன் தன்னையே மிரட்டி அச்சுறுத்தக் கூடியவர்கள் போன்றவர்களுக்கு உயர்பதவிகள் வழங்கி கௌரவிப்பதில் சந்திரிகா அம்மையாருக்கு நிகர் அவர் தான்... தராதரம் பார்க்காது பதவியுயர்வு வழங்கிவிடுவார். உதாரணம் அனுருத்த ரத்வத்தைக்கு ஜெனரல் பட்டம் வழங்கியமை.... விளக்குமாறுக்கு பட்டுக்குஞ்சம் கட்டினாற்போல்... என்ற பழமொழி நினைவுக்கு வருகின்றதா...?

சரி சந்திரிகாவுக்கு ஒரு புதிய 'ஜால்ரா' கிடைத்துவிட்டது...

டிரோன் இந்த 'ஜால்ரா' பணியையாவது ஒழுங்காகச் செய்வாரா? அது அவருக்கே வெளிச்சம்.

## சும்மா சொல்லக் கூடாது தாத்தாவை விஞ்சிய பேரன்

'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்ற நரியாரின் கதை தெரியும் தானே.! அந்தக் கதை இப்போது ஏன் என்கிறீர்கள் அப்படித்தானே....

'அரசாங்கத்துடன் நாம் பேசவும் இல்லை, அரசுடன் இணைய வேண்டிய தேவையுமில்லை' என்ற ஆறுமுகம் தொண்டமானின் அறிவிப்பைப் பார்த்த போது அந்த நரியும் திராட்சைப் பழமும் கதை நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியவேயில்லை.

ஆளும் கட்சியும் இணைந்து - அதாவது பேரம் பேசி இணைந்து- செயற்பட்டுத்தான் மலையக மக்களின் உரிமைகளைப் பெறமுடியும் என்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கருத்து நிலைப்பாடு ஆறுமுகனின் தாத்தா சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்தில் இருந்தே பிரசித்தமான தொன்றாகும்.

பலவீனமான அரசுடன் பேரம் பேசுதலின் இ.தொ.காவும் முஸ்லிம் காங்கிஸும் எப்போதுமே கைதேர்ந்த அரசியல் வியாபாரிகள் தான் பேரம் என்றால் பால் குடித்த குழந்தை போல் பேசாமல் இருந்து விடுவார்கள்.. இல்லையேல் 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்ற கதை தான்' .... சரி ஆறுமுகன் அவர்களே, ஏதாவது ஒரு விடயத்தில் அறிக்கை விடும் போது அதில் வெளிப்படையாக உறுதியுடன் இருக்க வேண்டாமோ? இதோ பாருங்கள் நீங்கள் உங்கள் பேட்டியொன்றில் கூறியவற்றை

'நாம் அரசுடன் பேசவுமில்லை.. இணைய வேண்டிய அவசியமுமில்லை.

நாம் அரசுடன் இணைவதா இல்லையா என இன்றும் தீர்மானத்திற்கும் வரவில்லை' (இணையலாம், இணையாமலும் விடலாம் என்ற அர்த்தம் தானே இதில் தொனிக்கிறது... அப்படியானால் இணைய ஆர்வமுண்டு என்று தானே அர்த்தம்.)

"நாம் எதிர்க்கட்சி ஆசனங்களில்த்தான் உள்ளோம்.. இதுவரை அதில் எந்த மாற்றமும் இல்லை..." (இனிமேல் சிலவேளை மாற்றம் ஏற்படலாம் ஆளும் கட்சி ஆசனங்களில் அமரலாம் என்ற தொனியும் இதில் இழைந்துள்ளதே..!)

"அரசுடன் இணையும் நோக்கம் இல்லை ஆனால் எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது.." ( அப்படியானால் எதிர் காலத்தில் அரசில் இணைந்து அமைச்சர் ஆனாலும் ஆகலாம்..... அப்படித்தானே..?)

ஆறுமுகன் அவர்களே எவ்வளவு சாதுரியமாக பதில் கூறியுள்ளீர்கள்! தாத்தா 16 அடி பாய்ந்தால் ... பேரன் 48 அடி பாய்வதில் வியப்பு என்ன உள்ளது...?

அம்மையார் ஒரு திசையில் போனால் அடியாட்கள் எதிர்த்திசையில் செல்கிறார்கள்.



சமாதானம் தொடர்பான விடயங்களில் தான் இப்படி நடக்கிறது.

சந்திரிகா அம்மையார் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க முயற்சி செய்வது போல் நடிக்கிறார் என்று வைத்துக் கொண்டால் உண்மை நிலையும் அம்மையாரின் அடியாட்கள்... (இந்தச் சொல் ஒரு மாதிரியாக இருந்தால் துணை யாட்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்) அதனைத் தீவிரமாக எதிர்க்க ஆரம்பித்து

## கெட்டுத்தான் தீரவேண்டும் என்றால் பட்டுத்தான் தெளியவேண்டும்

விடுவார்கள்.

சந்திரிகா 'சமாதானம் சரணம் கச்சாமி' என்றால் அவரை அடியொற்றி நடப்பவர்கள் 'சண்டையே சரணம் கச்சாமி' என்ற தொனிப்பட கோஷம் போட ஆரம்பித்துவிடுவார்கள்.

இது ஒரு முன்னதாகவே பேசி எடுக்கப்பட்ட முடிவின் படி நடத்தப்படும் நாடகமாகவே உள்ளது. இப்போது அரசின் எதிர்காலம் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற நூலில் அல்லாடிக் கொண்டிருக்கிறது. சமாதானத்தை தொடர வேண்டுமெனில் ஏற்கெனவே விடுபட்ட இடத்திலிருந்து புதிய நிபந்தனைகள் ஏதுமின்றி ஆரம்பிக்க வேண்டும்.. அதாவது இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்து ஒரு முடிவை எடுக்கும் வகையிலேயே அதனைத் தொடங்க வேண்டும்.

அதனை ஜே.வி.பி யினரோ ஏனைய பேரினவாதக் குழுக்களோ ஏற்கப் போவதில்லை. இவர்களை எதிர்த்துக் கொண்டு சமாதான முயற்சிகளை நியாயமான முறையில் சர்வதேச அனுசரனையுடன் முன்னெடுக்கும் துணிவும் நேர்மையும் சந்திரிகாவிற்கு இல்லை.

ஏன் தனது கட்சிக்காரரையே சமாதான முயற்சிகளைக் குழப்ப வேண்டாம் என்று கட்டுப்படுத்தும் திறனோ விருப்பமோ கூட அவருக்குக் கிடையாது.

இப்போது அவரது புதிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க 'உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச தலையீடு தேவையில்லை' என்று அறிக்கை விட்டுள்ளார்.

அவரது உள்வீட்டுப் பிரச்சினைகளே (குடும்பப்) தெருச் சண்டையாக நாறி ஊடகங்கள் ஊடாக பகிரங்கம் ஆன போதே அதனைத் தடுக்க திராணியற்றிருந்த இந்த முன்னாள் பிரதமர் நாட்டுப் பிரச்சினையை தீர்க்க வெளிநாட்டுத் தலையீடு தேவையில்லை என்றும் அலம்புகிறார்.

ஐயா ரத்னசிறி அவர்களே..

பாதுகாப்பு, பொருளாதாரம், அபிவிருத்தி இவையெல்லாம் கூட உள்நாட்டுப் பிரச்சினைகள்



இதற்கு மட்டும் தீர்வுகான வெளிநாடுகளை யாருக்கும் ர் இனப்பிரச்சினை தீர்வுக்கு மட்டும் சர்வதேச தலையீடு ண்டாம் என்கிறீர்கள்...!

என்ன செய்வது கெட்டுத்தான் தீரவேண்டும் பட்டுத்தான் தளிய வேண்டும் என்பது உங்களின் தலைவிதியானால் அதனை யாரால் தடுக்கமுடியும்?

## துள்ளூற மாடு பொதி சுமக்கும்

அரசியல் பேச்சு- 02

"திருமலை சென்ற புலிகளின் படகுகளை நடுக்கடலில் வைத்து படையினரால் தடுக்கப்பட்டது."

"நாகர் கோவில் கடற்பரப்பில் துப்பாக்கிப் பிரயோகம் "

"மன்னாரில் பெண்போராளிகளின் பைகளைச் சோதனையிட படையினர் முயற்சி.."

மட்டக்களப்பில் பாரிய ஆயுதங்கள் கவச வாகனங்கள் சகிதம் படையினர் தேடுதல் நடவடிக்கை"

கிளிநொச்சிக்கு மின்சாரம் வழங்க மின்பிறப்பாக்கிகள் எடுத்துச்செல்லப்படையினர் தடை.."



"என்னப்பா.. அதிர்ச்சி தரும் செய்திகளை அடுக்கடுக்கா சொல்லுறாய்..?"

"அப்படியொன்றுமில்லை 'சமாதானத்திற்கான யுத்தத்தை' மீண்டும் ஆரம்பிக்க சனாதிபதி அடுக்குகள் செய்யிறா போல கிடக்கு.."

"துள்ளூற மாடு பொதிசுமக்கும்.. நாமென்ன செய்யமுடியும்..?"

## சிறிலங்காவின் அரசியல்

அரசியல் பேச்சு-01

"என்னய்யா அரசாங்கம் புலிகளுடன் பேசுமா?"

"பேசநினைக்கிறது பேசாமல் இருக்கத்துடிக்கிறது."

"ஹெலஉறுமயவும்,ஜே.வி.பியும் அரசு புலிகளுடன் பேச அனுமதிக்குமா?"

"அனுமதிக்கக்கூடாதென்றே அரசு விரும்புகிறது!"

"சர்வதேச சமூகம் அரசின் மீது சமாதானத்திற்கான அழுத்தத்தைக்கொடுக்குமா?"

"அழுத்தத்தைக் கொடுக்கும் ஆனால் அழுத்தமாகக் கொடுக்காது."

"இந்த அரசின் ஆட்சி நிலைக்குமா?"

"வேறு அரசு வந்தாலும் அம்மணி ஆட்சி நிலைக்க விடமாட்டார்..."

"சனாதிபதி ஆட்சி முறை நீக்கப்படுமா?"

"சனாதிபதி சனாதிபதியாக இருக்கும் வரை நீக்கப்படமாட்டாது,"

"அப்படியானால்..'

"சனாதிபதியின் அதிகாரம் பிரதமருக்காக காக்கப்பட்டு, தற்போதைய சனாதிபதி பிரதமராகும் வரை நீடிக்கும்"

"எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கே.."

"அதுதான் சிறிலங்காவின் அரசியல்."

*செங்குட்டுவன்*

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 18 . 06 . 2004

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## தேவை என்ன...?

அரச சார்பு ஊடகங்களில் திட்டமிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடக்காத தாக்குதல் ஒன்றை நடைபெறுவதாக பரப்பிவரும் பொய்ப்பிரச்சாரம் தொடர்பான கண்டனத்தை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வே தூதுவர் கான்ஸ்பிரஸ்கரிடம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தொப்பிகல காட்டுப்பகுதியில் புலிகளுக்கும் கருணா குழுவினருக்குமிடையில் பாரியமோதல் இடம்பெற்றதாகவும் அதில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் இராணுவவட்டாரத்தை ஆதாரம்காட்டி ஊடகங்களின் மூலமாக பொய்ப்பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசின் இந்தத் திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரத்தின் பின்னணியில் அரசு சில அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளமுயல்கிறது.

அதாவது ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி அரசு எதிர்கொள்ளும் சிக்கல்களையும், நெருக்கடிகளையும் தணிப்பதற்கான ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அதாவது நாடாளுமன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தனது பெரும்பான்மையை நிருபிக்கமுடியாது திணரும் அதேவேளை ஊடகங்கள் மூலமாக ஆளும் தரப்பு நாடாளுமன்றத்தில் மிகக் கீழ்த்தரமாக நடந்துகொள்வதுடன் சிங்களதேசம் மிகவும் மதிக்கும் பௌத்த துறவிகளை அசிங்கமானமுறையில் தாக்கி தமக்குத்தாமே களங்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் நாட்டு மக்களின் கவனத்தை திசை திருப்பவேண்டுமாயின் தங்களுடைய அநாகரிகங்கள் எந்த ஊடகங்களின் ஊடாக மக்களை சென்றடைந்ததோ அதே ஊடகங்களின் ஊடாகவே மக்களின் கவனத்தை திருப்பலாம் என அரசு கருதுகிறது.

அத்தோடு அரசின் இந்த முயற்சி மூலம் இரட்டிப்பு அனுகூலங்களை பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஒரு தவறான கற்பிதத்தையும் கொண்டுள்ளதுபோலத்தெரிகிறது.

சிங்கள மக்களின் கவனத்தை திருப்பிவிடுவதுடன் தமிழ் மக்கள் மத்தியில் புலிகள் தொடர்பான ஒரு குழப்பத்தை ஏற்படுத்திவிடுவதுடன் தமிழ் மக்களை ஒரு பதட்டமான சூழ் நிலையில் வைத்திருக்கலாம் எனவும் கருதுகின்றது.

அடிப்படையில் அரசின் இந்த எண்ணம், மக்களை சமாதானத்தின் மீது அதிக பற்றுறுதியை வைத்திருக்கவிடாமல் செய்கின்ற ஒரு முயற்சியாகும்.

சிறிலங்காவின் வரலாற்றில் ஆளும் அரசுகளுக்கு நெருக்கடிகள் ஏற்படும்போது தமிழர் தாயகத்தின்மீது ஒரு படை நடவடிக்கையை மேற்கொள்வார்கள், அல்லது பொதுமக்கள் பெருமளவு கூடுமிடங்களை இலக்கு வைத்து விமானங்கள் மூலமாகவோ, எறிகணைகள் மூலமாகவோ தாக்குதலை மேற்கொன்றுவிட்டு தாங்கள் பெருமளவு புலிகளை கொன்றுவிட்டதாக கவனத்தைத் திசைதிருப்புவார்கள்.

ஆனால் நிகழும் யுத்தநிறுத்த காலத்தில் அவ்வாறானதொரு நடவடிக்கையைசெய்யமுடியாத, அரசு புலிகளை கற்பனையாக கருணா குழுவினருடன் மோதவிட்டு தாக்குதல் நடைபெறுவதுபோல காட்டமுயல்கிறது. இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது அரசுக்கு இப்போது அவசரமாக ஒரு மோதல் தேவைப்படுகிறது.

இதற்காகவே படையினரே பயிற்சி என்ற பெயரில் எறிகணைகளை பெருமளவில் மட்டக்களப்பு தொப்பிகல காட்டுப் பகுதியில் மேற்கொண்டுவிட்டு ஒரு மோதல் நடைபெறுவது போன்ற தோற்றத்தைக்காட்டமுற்பட்டுள்ளனர்.

அரசின் இந்த முயற்சியானது மிகவும் நேர்த்தியாக பேணப்பட்டுவரும் யுத்தநிறுத்தத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தத்தக்க ஒரு விடயமாகும். ஏனெனில் அரசு தனது படையினரை ஏவி ஒரு தாக்குதலை மேற்கொள்ள முயல்கிறதோ என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது

இதனால் தான் தமிமீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வேத் தூதுவர் கான்ஸ்பிரஸ்கரிடம் இந்தவிடயம் தொடர்பாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு யுத்தகாலத்திலும் தமிழ்மக்களையே பலியிட்டது, தற்போதைய யுத்தநிறுத்த காலத்திலும் தமிழ்மக்களையே பலியிட விரும்புகிறது.

இது சமாதான முயற்சிகளில் விசுவாசமிக்க பங்காளிகளாக செயற்பட்டுவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பங்கத்தை ஏற்படுத்த முற்படுவதுடன் தமிழ்மக்கள் மத்தியில் வீணான ஒரு குழப்பத்தை ஏற்படுத்தமுற்படுகின்றனர்.

இதனை எதுவரை அரசு தொடரப்போகிறது என்பதிலேயே சமாதானத்தின் ஆயுற்பலமும் தங்கியிருக்கிறது.

---

## தூரனின் பார்வை

# பலவீனத்தின் உச்சக்கட்டம் வெளிப்படத்தொடங்கிவிட்டது

சமாதான முன்னெடுப்புகள் யாவும் முடக்கமடைந்து அதன் எதிர்காலம் என்பது கேள்விக்குறியாகிவிட்டது என அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளமையானது. பல செய்திகளை பூரணமாக தெரிவிப்பதாக உள்ளது.அரசு சமாதான நகர்வுகள் குறித்து விடுத்துவரும் அறிக்கைகள் சர்வதேசத்தையும் பொறுப்புகளையும் ஏமாற்ற நடைமுறைப்படுத்தும் தந்திரோபாயங்களின் ஒரு வடிவமேயாகும். ஆட்சி பொறுப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் அமர்ந்துகொண்டபோதே சமாதானம் தொடர்பான அமைதிப் பேச்சுகளின் எதிர்காலம் பற்றிய சந்தேகங்கள் எழ ஆரம்பித்துவிட்டமை குறிப்பிடத் தக்கது சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் உள்ளக முரண்பாடுகள் மூர்க்கம் கொளளத்தொடங்கியுள்ளதை அன்றாடம் ஜே.வி.பி தெரிவிக்கும் கருத்துக்கள் மூலம் அறியக் கூடியதாகவும் அரசின் உட்கட்சி

தின் பேரால் பேய்க்காட்டிவிடலாம் என்று சனாதிபதி போட்டிருந்த கணக்கிற்கு, விடுதலைப் புலிகளின் இடைக் கால நிர்வாக அதிகார சபை கோரிக்கை இடையூறாகிவிட்டது.

இடைகால நிர்வாகத்தையும், இறுதித்தீர்வையும், ஒன்றாக இணைத்து ஒரு சிக்கலை ஏற்படுத்த சந்திரிகா போட்ட மூலோபாயத்திட்டமும் புலிகளால் நிராகரிக்கப்பட்ட



களை எதிர்த்தும் நிராகரித்தும் பிரசாரத்தை மேற்கொண்டே ஆட்சிக்கு வர முயன்ற சந்திரிகா மற்றும் ஜே.வி.பி கூட்டணியினர் அதனை எந்த வகையிலும் மீண்டும் முன்னெடுப்பதென்பது மற்றொரு கண்ணாமூச்சி விளையாட்டாகவே அமையும் என்பதில் எவரும் முரண்பட்ட கருத்தைக் கொண்

முரண்பாடுகளுக்கு மற்றொரு காரணம், ஜே.வி.பியினர் ஹெல உறுமய உறுப்பினர்களுடன் நடந்து கொள்ளும் ரௌடித்தனமான முறைகளுமாகும்.

மௌன போக்கை கடைப்பிடிக்குமாறு சந்திரிகா விடுத்தவேண்டுகோளினை ஜே.வி.பி கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. இது

நிலையில் செயலற்றுப் போய்விட்டது. ஆட்சியும் பலமாக இல்லை- அரச நிர்வாகமும் இறுக்கமாக இயங்கத் தொடங்கவுமில்லை. சமாதானத்தை முன்னெடுக்கும் சாத்தியமும் தெரிவதாக இல்லை. தோழமைக் கட்சிகள் விட்டுக்கொடுத்து ஒத்துழைப்பதாகவுமில்லை -எதிர்க்கட்சியை உடைக்கும் முயற்சிகளும் கைகூடவில்லை.

இந்தநிலையில் விடுதலைப் புலிகள் பேச்சுவாத்தை தொடர்பான தமது நிலைப்பாட்டிலும், சமாதான முயற்சிகள் மீதான பற்றுறுதிலும் தெளிவாகவும், இறுக்கமாகவும் மட்டுமல்ல சர்வதேச சமூகத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவும் இருந்துவருவது சந்திரிகாவினால் எந்த நகர்வையும் தந்திரோபாயமாக மேற்கொள்ள முடியாத நிலையை உருவாக்கியுள்ளது.



டிருக்கவில்லை. ஆனாலும் சமாதானத்தை ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒருவழியில், முன்னெடுக்க வேண்டிய சர்வதேச அழுத்தமொன்று அரசுக்கு உருவாகியே தீருமென்பதும், அதனை அரசால் தவிர்க்கவே முடியாதென்றும் அரசியலறிந்தோர் தெளிவாக அறிந்தே இருந்தனர்.

எனினும் சந்திரிகா தனது வழமையான ஏமாற்று தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி அந்த நெருக்கடி நிலையை சமாளித்து விடலாம் என எண்ணிப்போட்டிருந்த கணக்கு தப்புக்கணக்காகி விட்டமையால், சமாதான முயற்சிகளில் இருந்து எந்த நாட்டை அகற்றவேண்டுமென்று கோசமெழுப்பினார்களோ அந்த நோர்வேயின் காலடியே சரணம் என விழ வேண்டியநிலை ஏற்பட்டமையானது சந்திரிகாவே எதிர் பார்த்திராத ஒன்றாகும்.

சந்திரிகா பேச்சுவார்த்தைகளை தொடர எடுத்தமுடிவை விடவும், அதற்கு நோர்வே அரசை அனுசரணைபுரிய அழைத்த விடயமானது அவரது பிரதான தோழர்களான ஜே.வி.பி யினருக்கு ஏற்படுத்திய அதிர்ச்சி சாதாரணமானதல்ல.. தங்களுடன் இதுபற்றி எந்த ஒரு வார்த்தையையும் கூடப் பகிர்ந்து கொள்ளாது தன்னிச்சையாக சனாதிபதித்துவத்தன்மையுடன் நடந்துகொண்டதில் ஜே.வி.பி தலைமை கொண்டசினம் இன்னமும் முழுமையாகத் தணியவில்லை என்றே கூறவேண்டும்.

அரசுடன் இணைந்து கொண்டே,அதற்கு அச்சறுத்தலையும் எச்சரிக்கையையும் விடுக்கும் ஜேவிபி , தன்னை எவராலும் கட்டுப்படுத்த முடியாது என்ற கருத்து நிலைப் பாட்டை வெளிப்படையாகவே தெரிவிக்க

பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளை சந்திரிகா மீது சினம் கொள்ளச் செய்துள்ளது. பிக்குகள் தாக்கப்படுவதானது அதாவது தங்களால் பெருமையாகக் கூறப்படும் பௌத்த சிங்களக் குடியரசு நாட்டின் நாடாளுமன்ற அமர்வு மண்டபத்திற்குள்ளேயே வைத்துதாக்கி அவமதிக்கப்படுவதானது அவர்களால் சகித்துக் கொள்ள முடியாதவிடயமாகும். இந்தச் சம்பவத்திற்கு ஜே.வி.பி யினரையும் அத்துடன் தொடர்புடைய ஏனையோரையும் சந்திரிகாவினால் தண்டிக்கவோ அல்லது கண்டிக்கவோ முடியவில்லை என்பது அவரது இயலாமையை வெளிப்படுத்தும் விடயமாக சிங்களமக்களால் உணர்ந்து கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆட்சிபீடம் ஏறிவெறும் எழுபது நாட்களே ஆகியுள்ளநிலையில் அரசு தனது ஆட்சியை தக்க வைக்கும் முயற்சியில் வெற்றி பெறாத இக்கட்டான சூழலுக்கு முகம் கொடுத்தபடியே, கட்டுப்பாடற்ற, சனநாயகநாகரீகம் தெரியாத தனது கூட்டணிக் கட்சிகளின் அடாவடித் தனத்துக்கும் அச்சுறுத்தல்களுக்கும் வளைந்து கொடுத்து இயங்க முனைவது இந்தஆட்சியின் பெருந் தலைவ்யான சந்திரிகாவுக்கு கிடைத்த கௌரவக்குறைவாகும்.


இந்நிலையில் நாடாளுமன்றக் கூத்துகளையடுத்து எதிர்க் கட்சிகளின் பெரும்பான்மை அதிகரித்துள்ள நிலையில் அரசு நித்திய கண்டம் 'பூரண ஆயுசு' என்ற திரிசங்கு நிலையில் அல்லாடத் தொடங்கியுள்ளது. இதற்கிடையே வேகமாக பரபரப்புக்காட்டி ஆரம்பித்த சமாதான முயற்சிகளுக்கு சனாதிபதி தரப்பிலேயே பலத்த எதிர்ப்பு பகிரங்மாகவே கிழம்பும் என்று கற்பனை கூட செய்திருக்கவில்லை. அப்படிக் கிழம்பினாலும் அதனை எப்படியாவது சமாளித்து சர்வதேசத்தையும் சமாதானத்

கதிர்காமரின் திடீர் விஜயங்களும் அரசின் திக்கற்ற நிலைக்கு பரிகாரம் தருவதாகஇல்லை. அரசின் பொருளாதாரவங்குரோத்து நிலைமை சமாளிக்க இலங்கைக்கு உதவும் சர்வதேச நாடுகளினதும், அமைப்புக்களினதும் கரங்கள் சமாதானத்தை நிதிக்கு மாற்றீடாக தனையாக்கி விட.. அரசு விக்கித்துப் போயுள்ளதெனலாம்.

சந்திரிகாவுக்கும், அரசுக்கும் உள்ள நெருக்கடிகளை புரிந்து கொண்டு ஒத்திசைந்து இயங்க ஜே.வி.பி.தயாராக இல்லை என்பது தான் இன்றுள்ள அரசியல் யதார்த்தம் .இன்நிலையில் சந்திரிகா தனது பக்க பலவீனங்களை ஒழுங்கமைக்கும் திரானியின்றி பிரச்சினைகளின் போக்கினை வேறுபக்கம் மாற்ற, பதற்றமான, பீதியூட்டும், குழப்பமான சூழலை நாட்டின் வடக்கு-கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் படைதரப்பினரின் அனுசரணையுடன் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார் என்ற செய்தி பலதரப்பினராலும் பேசப்படும் விடயமாகிவிட்டது.

இது மீண்டும் நாடளாவிய ரீதியல் அவசரகால நிலையை ஏற்படுத்தும் நோக்குடனும், சமாதான முயற்சிகளை கிடப்பிற்போட்டு இழுத்தடிக்கும் நோக்கடனும் விடுதலைப்புலிகளை குழப்பி சினமூட்டி அவர்களைப் போர்க்கோலம் கொள்ளவைக்கும் சதித்திட்டத்துடனும் மேற்கொள்ளப்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு உதவஅரசசார்பு ஊடகங்களும் பெரும் உள்நோக்குடனான உளவியல் செயற்பாடுகளுக்குப்பயன்படுத்தப்படத் தொடங்கியுள்ளமை குறிப்பித்தக்கது.

இலங்கை ஒலிப்புக்கூட்டு தாபனம் (SLBC) தமிழ் ஒலிபரப்புச சேவை (T.B.C)போன்றவை கடந்த சில வாரங்களாக மேற்கொண்டு வரும் பொய்ப்பிரச்சார நடவடிக்கைகளைப் பார்க்கும் போது சந்திரிகா அரசு தனது பலவீனத்தின் உச்ச கட்ட நிலைச் செயற்பாடுகளில் இறங்கிவிட்டதாகவே தெரிகிறது.




# சந்திரிகா அடுத்த தலைமுறைக்கு விட்டுச்செல்லப்போவது எதை?



சந்திரிகா மறுபடியும் ஏதோ தந்திரம் செய்யப்போகிறார்போல தோன்றுகின்றது. தமிழரசுக்கட்சி எம்.பி.க்களை அவர் சந்தித்து வழங்கிய வாக்குறுதிகளும் அதற்குப் பின் அவர் நடந்துகொள்ளும் விதத்தையும் வைத்துப்பார்த்தால் அப்படித் தான் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

கடந்த சில மாதங்களாக அவர் செய்துவரும் காரியங்களை தொகுத்துப்பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரியவரும். அதாவது, தொடந்தும் அதிகாரத்தில் இருப்பதே அவருடைய ஒரே இலட்சியம். அதற்காக அவர் எதையும் செய்யக்கூடிய ஒரு மனோநிலையில் காணப்படுகிறார்.

நாடாளுமன்றத்தில் தனது கூட்டுமுன்னணியின் நிலையை பலப்படுத்துவதற்காக கடந்த இரு மாதங்களாக தொடர்ச்சியாக அவர் செய்துவருபவை அவருடைய இமேஜை மோசமாக நொறுக்கிவருகின்றன. அவருடைய எழுச்சிக்காலமான கடந்த சுமார் ஒரு தாசாப்தகாலத்துள் மிகமோசமாக அவருடைய பெயர் கெட்டகாலகட்டமிது.

ஒரு பௌத்தநாட்டின் அதியுயர் அதிகாரமன்றத்தில் அவருடைய கூட்டுமுன்னணி எம்.பி. ஒருவர் அவர்களால் சங்கைக்குரியவர் என்று விழிக்கப்படும் ஒரு பிக்குவின் விதையை நசுக்கும் அளவுக்கு அவருடைய அரசியல் அசிங்கமான ஒரு கட்டத்தை அடைந்துவிட்டது.

எந்த அரசியல் அமைப்பின் பெயரால் அவர் தனது எதிரிகளைப் பந்தாடிவந்தாரோ, அந்த அரசியலமைப்பின்படி அடுத்த சனாதிபதித் தேர்தலோடு, அவருடைய பண்டாரநாயக்கா குடும்பத்தின் ஆட்சிமுடிவுக்கு வரலாம்போல் தோன்றுகிறது.

இதை அவரால் ஜீரணிக்க முடியாதிருக்கிறது. சகோதரனான அனுரா குடும்பத்தின் பெயரை கெடுப்பவராகவே காணப்படுகிறார் . அவர் அடுத்தவாரிசாக வரமுடியாத அளவுக்கு தலைமைத்துவப்பண்புகள் குறைந்தவராகவும் காணப்படுகிறார். இந்நிலையில் இந்தியாவில் ராஜீவின் பிள்ளைகள் அரசியலில் இறங்கி பெருவெற்றி பெற்றிருப்பது சந்திரிகாவை வேறொரு திசையில் சிந்திக்குமாறு அருட்டிவிட்டிருக்க இடமுண்டு.

அதன்படி இந்தவாரம் தனது பட்டப்படிப்பை முடித்திருக்கும் அவரது மகளையோ அல்லது மகனையோ அரசியலுக்குக்கொண்டுவரும்வரையிலுமாவது தன்னை ஆட்சியில் தக்க வைத்துக்கொள்ள அவர் விரும்பக் கூடும்.

இதற்கெல்லாம் அரசியலமைப்பை மாற்றலாமென்றால் அதற்குக்கிடைத்த மக்கள் ஆணைபோதாமலும் தெளிவற்றதாகவுமிருக்கிறது. எனவே இருக்கின்றகால அவகாசத்துள் எதையாவது செய்துவிடவேண்டும் என்ற தவிப்பும் அவசரமும் அவரை நிதானமிழக்கச்செய்துவிட்டன. அவர் இப்பொழுது கெலித்துப்போய்க்காணப்படுகிறார்.

ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்துமிருக்கும் அவருடைய வரையறையற்றபேராசைக்காக முதலில் பலியிடப்பட்டது ரணில் செய்த சமாதானம். இரண்டாவதாகப் பலியிடப்பட்டது அவருடைய சொந்தக் கட்சியான எஸ்.எல்.எவ்.பி.யே. அதாவது ஜே.வி.பி.யுடன் அவர் வைத்துக் கொண்ட கூட்டு அவருடைய குடும்பக் கட்சியான எஸ்.எல்.எவ்.பி.யின் ஆதரவுத்தளத்தின் கணிசமான அளவை ஜே.வி.பி.யிடம் இழப்பதில் முடிந்திருக்கிறது.

ஆனாலும் அவர் பின்வாங்குவதாயில்லை. அதைத்தான் அவருடைய இரண்டுமாதகால செயற்பாடுகள் நிரூபித்துவருகின்றன.

நாடாளுமன்றத்தில் தனது அதிகாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக அவர் நேரடியாகவும் மறைமுகமாக ஜே.வி.பி.யை ஏவிவிட்டும் செய்துவரும் காரியங்கள் அவர் எந்தளவு தூரத்துக்கு அரசியல் நாகரிகத்தை மீறத்தயார் என்பதை காட்டுகின்றன. இவற்றால் தனது இமேஜ் முன்னெப்பொழுதையும்விட நொறுங்கிச் செல்வதுகுறித்தும் அவர் கவலைப்படுவதாகத்தெரியவில்லை.

**நிலாந்தன்**

கடந்த திங்கட்கிழமை அவர் தொலைக்காட்சியில் தோன்றி ஆற்றிய சிறப்புரைகூட தனது சரிந்து விழும் இமேஜை தூக்கிநிறுத்தும் ஒரு உத்திதான். ஆனால் அவர் கடந்த இருமாதகாலமாக செய்துவரும் வேலைகளை வைத்துப்பார்த்தால் நொறுங்கிச் செல்லும் அவருடைய இமேஜை மீளக்கட்டியெழுப்புவது கடினமென்றே தோன்றுகிறது.

ஏனெனில், அந்தளவுக்கு பாரதூரமான காரியங்களை அவர் செய்துவருகிறார். அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலாவதாக, பிக்குகளைக் கடத்தியது. இதை தான்செய்யவில்லை ஜே.வி.பிதான் செய்தது என்று அவர்சொன்னாலும் கூட அவருடைய சம்மதமில்லாமல் ஜே.வி.பி. அதைச் செய்திருக்கமுடியாது.

இரண்டாவதாக, முஸ்லிம்களை அவர்களுக்கிடையில் மோதவிட்டது. அதாவது, றவூப்ஹக்கீமின் அந்தரங்கத்தை அரசியலாக்கிய தன் மூலம் முஸ்லிம் காங்கிரசை உடைத்தது. இதற்காக பெருந் தொகைக்காசு புரண்டிருப்பதோடு ஹக்கிமை பிளைக்மெயில் செய்யுமளவுக்கு நிலமை போய்விட்டது.

மூன்றாவதாக, ஆறுமுகம் தொண்டமானோடு செய்யமுற்பட்ட பேரம் பிசகியதும் தொண்டமானுக்குத் தரப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பைக் குறைப்பதன் மூலம் தொண்டமானை மிரட்டமுற்பட்டது. அதாவது, முதலில் பேரம்பேசிப்பார்ப்பது அது முடியா விட்டால் மிரட்டுவது.

நாலாவது, தமது உறுப்பினர்கள் கடத்தப்பட்டதையும் மீறி தொடர்ந்து செயற்படமுயன்ற பிக்குகளை நன்கு திட்டமிட்டு நாடாளுமன்றத்தில்வைத்து அடித்துநொறுக்கியது.

ஐந்தாவது, கிழக்கில் கருணாவின் பெயரால் செய்யப்படும் காரியங்களால் புலிகளின்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கமுயல்வது. இது யுத்தத்திற்கு ஆகக்கி ட்டவாயிருக்கும் ஒரு தெரிவு என்று நன்கு தெரிந்திருந்தும் அவர் இத்தெரிவை எடுத்திருப்பது அவர் எந்தளவுக்கு நிதானமிழந்துவிட்டார் என்பதைக் காட்டக்கூடியது.

ஆறாவது, சமாதானத்தைக் காட்டி தமிழரசுக்கட்சி எம்.பி.க்களை தன்வசப்படுத்த அல்லது எதிரணி பக்கம் போய்விடாமல்தடுக்க எத்தனிப் பது. அண்மையில் தமிழரசுக்கட்சி எம்.பிக்களை அவர் சந்தித்ததை இப்படித்தான் பார்க்கவேண்டியிருக்கிறது.

பிக்குவின் விதையை நசுக்கும் ஒரு நாடாளு மன்றம் தமிழர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளும் என்று நினைப்பதெல்லாம் அம்புலி மாமாக் கதைகளுக்கே பொருத்தமாயிருக்கும்.

பிக்குகளுக்கும் அதாவது, ஹெலஉறு மயவுக்கும், ஜே.வி.பி.க்கும் இடையிலான பகைக்குள் சிக்கி அவருடைய ஆட்சி தளம்பத் தொடங்கிவிட்டது. சீண்டப்பட்ட பிக்குகள் எதிரணியுடன் சேர்ந்து தனது ஆட்சிக்கு அச்சுறுத்தலாக வளரமுன்பு எதிரணிக்கட்சிகள் ஒன்றிணைவதைத் தடுக்கும் விதத்தில் அவர் தமிழரசுக் கட்சிக்கு சமாதான வலை வீசப்பார்க் கிறார்.

அவர் என்னதான் தந்திரங்கள் செய்தாலும் அல்லது மந்திரவித்தைகள் செய் தாலும் அதிசயம்போல அற்புதம்போல ஏதாவது நிகழ்ந்தால் தவிர அரசியலமைப்பை அவருக்குச் சாதகமான விதத்தில் இப்போதைக்கு மாற்றியமைக்க முடியாது.

இந்த யதார்த்தத்தை அவர் ஒப்புக் கொள்வாராயிருந்தால் சமாதானத்தை ஒரு குறுக்கு வழியாகப் பாவிப்பதற்கோ அல்லது பிக்குக்களின் விதையை நசுக்கும் ஒரு அரசியலுக்கோ தேவையிருக்காது.

அவருடைய பதவிக்காலம் முடிவதற்கிடையில் அவருக்குள்ள கால அவகாசத்துள் அவர் முன்னால் இருக்கும் பிரகாசமான தெரிவு ஒன்றே ஒன்றுதான். அதுதான் - விசுவாசமாகச் சமாதானம் செய்வது.

அப்படியவர் செய்வாராக இருந்தால் அவருடைய பெயரையும் அவருடைய குடும்பத்தின் பெயரையும் நாட்டின் எதிர்காலத்தையும் அவருடைய பிள்ளைகளின் அரசியல் பிரவேசத்தையும் அவரால் பாதுகாக்க முடியும்.

பண்டாரநாயக்காக்கள் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்று கேட்கப் போகும் வருங்காலத் தலைமுறைக்கு எதையாவது பெருமைப்படும் விதத்தில் விட்டுச்செல் லமுடியும்.

அதோடு ஆதர்.சி. க்கிளாக் தீர்க்க தரிசனம் உரைத் ததுபோல சிலச மயம் சமாதானத் துக்கான நோபல் பரிசை சுவீகரிக் கவும் முடியும்.

இல்லையென்றால், சில சமயம் அவருடைய பிள்ளை கள் அரசியலுக்கு வருவார்களாயிருந்தால் அவர்களுக்கு அவர் விட்டுச்செல்லப் போவது முடிவற்ற ஒரு யுத்தமாகவே இருக் கும்








# அர்த்தமாயை

இப்போதெல்லாம் அவனுக்கு தன்னுடைய பெயரையே ஞாபகம் கொள்ளமுடியாமல் போய்விட்டது. இது உங்களுக்கு அதிசயமாக இருக்கலாம். (உலகத்தில் எந்த ஒருவனுக்கும் மிகவும் பிடித்தசொல் அவனுடைய பெயர்தான் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக் கிறார்கள்) ஆனாலும்கூட அவன் தன்னுடைய பெயரை நினைவுத்தடத் திலிருந்து தவற விட்டுவிட்டான்தான். நான் அவனின் பெயரை அறிய எவ் வளவோ முனைந்தும் தோல்விய டைந்துவிட்டேன். இறுதியாக இன்று காலையில் சூரியன் சற்றுமேலெழுந்து வந்தபோது இரண்டுமூன்று குருவிகள் கிழக்கே பறந்துபோனது. மிகச்சரியாய் ஒரு விழாக்கால நாளைப்போல இருந்த இன்றைய காலையில் நான் அவனை சந்தித்தேன். உனது பெயரை நான் அறியலாமா? என்ற எனது கேள்வியை மிகவும் கவனமாக ஆராய்ந்துவிட்டு தெரியவில்லை என உதட்டைப்பிதுக் கினான். அப்போது அவன் குறித்து நான் கழிவிரக்கப் படுவதைவிட நான் என்ன செய்வேன். நான் அவனை அவன் என்றே விழித்து ஞாபகப்படுத்தி வருகிறேன்.

எங்களுக்கு வழமையாக இருக்கிற எதையும் நான் அவனிடம் காணவில்லை. எனக்கு மிகவும் சந்தே கமாகக்கூட இருந்தது. அதேநேரம் ஒருவித பயஉணர்ச்சி கூட தோன் றியது. அவனை நான் அணுகியவிதமே மிகவும் சுவாரசியமானதுதான். அவன் தனது வீட்டின் பின் பகுதியில் இருந்த ஜன்னலைத் திறந்து வைத்திருந் தான். அது அளவில் அவ்வளவு பெரி தாகக் கூட இல்லை. சாதாரண சப் புப் பலகையில்தான் அதன் கதவுகள் செய்யப்பட்டிருந்தது. அதற்குக்குறுக் காக தறையப்பட்ட ஆணிகள்கூட களன்றுவிழும் தறுவாயில் இருந்தது. காற்றுக்கு கதவுகள் திறப்பதுவும் மூடுவதுமாக இருந்தது. அவன் அந்த ஜன்னலையே கதவாகவும் பாவித்துக் கொண்டான். எனக்கு இது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. முதன்முதல் யாரும் அவன் வீட்டிலிருந்து வெளியேறு வதை பார்த்தால் திருடன் என்று கத தவே செய்வார்கள். உண்மையில் ஒரு திருடன் வீட்டுக்குள் நுழைந்து பொரு ட்களோடு வெளியேறுவதைப்போலவே அவன் தனது வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தான். நானும் அவ்வாறு தான் எண்ணிக்கொண்டேன் என்று ஒப் புக்கொள்கிறேன். இது எனக்கு இன்னொன்றையும் ஞாபகப்படுத்திற்று. நவீன சிறுகதையின் வெளிப்பாட்டு முறைகூட இப்படித்தான். கதவுக் கூடாக நுழையாமல் ஜன்னலுக்கூடாக வோ அல்லது புகைபோக்கியின் துவா ரங்களுக்கூடாகவோ உள்ளே நுழை ந்து திருட்டுத்தனமாக வரவேற்பறைக் குவந்து அதிலிருக்கின்ற சோபாக் களிலோ அல்லது முதிரை மரத்தாலான அழகிய கதிரைகளிலோ இருந்து ஆறு தலாக தேனீரோ,குளிர்பானமோ அருந் திவிட்டு அங்கேயிருக்கிற கண்ணாடி மீன் தொட்டியில் ஓடிக்கொண்டு நீந் தியபடிஇருக்கிற வர்ணமீன்களை ரசித்து திரும்பிவந்து புத்தக அலு மாரியில் இருந்து எழுமாறியாக இரண்டு புத்தகங்களை எடுத்து ஒரே நேரத் தில் இரண்டையும் படித்து முடித்து நண்பரோடு உரையாடிவிட்டு வாசல் கதவின் துவாரங்களுக்கூடாக வெளி யேறுவது போலத்தான் அவன் அந்த ஜன்னலினூடாக வெளியே வந்தான். குறிப்பாக ஒரு மஜிக்கஸ் றியலிச் சிறு கதையைப்போலவே அவன் செயல்கள் இருந்தன.

அவன் தான் அணியும் உடை களில்கூட கவனம் செலுத்தவில்லை ஆனாலும் அவனில் தெரிகிற ஒருவித மிடுக்கான தோற்றம் பார்ப்பவரை அவன்பால் ஈர்க்கும்படியாகவே இருந் தது. அவன் தன்னுடைய ஒருகாலின் குதியை நிலத்தில் தொடாதபடிக்கு நடந்துவந்தான். (இவ்வாறு நடப்பவர் கள் உலகத்தில் அதிகபுத்திசாலிக ளாக இருப்பார்கள் அல்லது பெருத்த தலையை உடையவர்களாக இருப் பார்கள்) நடையில் தானும் அவன் அவ்வளவு சிரத்தை எடுத்துக்கொள்ள வில்லை. அல்லது அது அவனுக்கு இயல்பாகவே ஏற்பட்டிருக்கிறதாகவே நான் நினைத்தேன்.

அவன் யாருடனும் பேசவோ புன்ன கைக்கவோகூட இல்லை. அவன் ஜன் னலைத் திறந்து மன்னிக்கவும்! அதன் கதவுகளைத் திறந்து முதலில் தனது ஒரு காலையும் தலையையும் முதல் தடவையாக நுழைத்தபடி வெளியே வந்தான் எதேச்சையாகத்தான் அவனைப்பார்த்தேன். அவனுடைய முகத்தில் புன்னகை தெரிந்தது. நான் புன்னகைத்தேன். அது அவனுக்கு ஒரு ஆறுதலாகக்கூட இருந்திருக்கலாம். நான் அவனுடன் உரையாட விரும் பினேன். விரும்பி அவனருகில் சென்று விட்டேன். இப்போது அவன் ஜன் னலுக்குள்ளால் முழுமையாக வெளியே வந்திருந்தான். தரையில் இரண்டு கால்களையும் ஊன்றிக்கொண்டி ருந்தான். என்னைப்பார்த்ததும் மீண்டும் புன்னகைத்தான். பதிலுக்கு நானும் புன்னகைத்தேன் "ஏன் வீட் டின் கதவின் சாவியைத் தொலைத்து விட்டீர்களா?" என்றேன். "இல்லை" "பிறகேன் ஜன்னலூடாக வெளியேவரு கிறீர்கள் சாதாரணமாக கதவினூடா கத்தானே வெளியேறுவது?" "ஏன் ஜன்னலினூடாக வெளியேறவும் உள்ளே போகவும் யார் தடைசெய்தார்கள். இன்னும் போனால் ஜன்னலும் கதவும் இன்னும் பிறவும் வீட்டினுள்போகவர தடைகளாகத்தானிருக்கிறது" என்றான் அவன். நான் அவனை அதிர்ச்சியாகப் பார்த்தேன். அர்த்தமாயைகளால்இந்த உலகத்தில் எத்தனை லீலைகள் நிரந்தரமான வெளியை நாங்கள் சிதைக் கப்பார்க்கிறோம். ஆனால் வெளியே யாவற்றையும் மறுதலிக கிறது. பின்னும் எதையோ இன்னமும் உதடுகளில் முணுமுணுத்துக் கொண்டிருந்தான். ஒரு புன்னகை யோடு அவனின் விழி களில் ஏதோவொரு ஒளி தோன்றியதை கவனித்தேன். "ஏன் நீங்கள் வீட்டில் முன்புறமுள்ள கதவுகளை பயன்படுத் தாது நழுவுகிறீர்கள்" என்று சட் டென்று கேட்கவேண்டும்போல் எனக் குத்தோன்றியது. ஆனாலும் அவனிடம் கேட்கும் துணிவு வரவில்லை.

அவன் அடிக்கடி என்னைத் தாண்டிவெளியே பார்த்துக்கொண்டி ருந்தான். "நீங்கள் இப்போது எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள்?" என் றேன். இக்கேள்வியை நான் எழுப்பிய போது என்னுடைய குரலை நானே நம்பும்படியாகத் தோன்றவில்லை. கிணற்றின் அடியிலிருந்து பேசுவது போல மிகவும் சன்னியமான ஓசைப்பி சிறலோடு வெளியே வந்தது. அவன் இப்பொழுது எனக்குப் பக்கவாட்டில் வந்திருந்தான். திரும்பவும் அவனிடம் "நீங்கள் எங்கே போகிறீர்கள" என்றேன். ஆம் இன்னமும்கூட எனது குரல் அப்படியேதான் வெளியேவந் தது. ஏன் அப்படியென்று எனக்குத் தோன்றவேயில்லை. "நானா என்ற படிக்கு என்னுடைய முகத்தைப் பார்த் தான்" நான் "அந்திவானத்தின் இரத் தச்சிவப்பை கைகளால் அள்ளி வான த்தின் மீது ஓவியம் வரையப்போக' றேன" என்றான். அவனின் இந்தப் பதிலால் நான் திடுக்கிட்டேன். திகைப் பினூடே நின்று கொண்டிருந்தேன். நான் எந்த உலகத்தில் அவனோடு நின்று பேசிக்கொண்டிருக்கிறேன் என சந்தேகம் வந்தது. பக்கத்தில் நின்ற மரங்களில் காற்று மோதிச்சிலிர்த்தது. கிளைகளிலிருந்து பறந்துபோன குரு விகள் ஏதோ வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல இருந்தது. நான் பாரதப் போரில் அர்ச்சுனன். அவன் பார்த்த சாரதிதொடர்ந்து சந்தேகங்கள். கண்ணன் புன்னகைக்கிறான். குறுக்கே கேள்விகளோடு காத்திருக்கிறான் அர்ச் சுனன். காண்டீபம் நழுவிவிட்டது. நான்யார்? தேரிலிருந்து இறங்கி களத்தைவிட்டு ஓடிவிடுவோமா? அர்ச்சுனன் குழம்பிவிடுகிறான். அவ னுக்கு முன்னே உறவினர்கள் எதிரி களாகிநிற்கிறார்கள். அவர்கள் யார்? நீண்டமௌனம். கண்ணன் புன்ன கைக்கிறான். எனது அவனும் புன்ன கைக்கிறான். நான் எக்காலத்தில் நின்றுகொண்டிருக்கிறேன்? இந்த வெளியின் சாயல் அன்றையநாளை நினைவூட்டுகிறது. தலையைத் திருப்பி அவனிடம் கேட்டேன்.

"இப்பொழுது சூரியன் கிழக் கிலிருந்து எழுந்துவிட்டான். காலை தொடங்கி வெகுநேரமாயிற்று நீங்கள் எப்படி..."

இருக்கட்டும் அதற்கென்ன செம்மைதானே வானத்தின்நிறம் வன்முறையும்கூட சிவப்புத்தான் ஏன் புரட்சியைக்கூட சிவப்பு என்கிறார் கள். நீங்கள் அறியவில்லையா எல் லோருடைய சிந்தனைகளும் சிவப் பாகத்தான் அனேகம் இருக்கிறது. செயலில்தான் அதிகம் வேறுபடு கிறோம். செயலின்வேறுபாடுகளுக் கேற்பதான் இரசாயன மாற்றங்களும் நிகழுகிறது. அதுதான் நிறபேதங்கள் தோன்ற வழியாயிற்று. நீங்களே பாருங்கள் வானங்கூட செம்மை யைத்தானே கோரிநிக்கிறது. சாதா ரண வாழ்வில்கூட எத்தனை வன் முறைகள் மலிந்துவிட்டது. பொது வாழ்வில் சொல்லவேவேண்டாம். ஆட்சி பற்றி நாங்கள் பேசக்கூடாது அது தடைசெய்யப்பட்ட ஒரு விடயம். அனே கம் அதன்பேரால் செம்மையின் ஆட்சி நிலைநிறுத்தப்படுகிறது. சிவப்பு மிக வும் அழகியநிறம் குருதிகூட சிவப்புத் தான். சதைகள்கூட சிவப்பாய்தான் முதலில் தெரியும். குண்டுவீச்சுக்களின் போது பார்த்திருப்பீர்கள். நான் போர்க்களச்செய்தியாளனாக பணியாற் றியிருக்கிறேன். நீங்களே பாருங்கள் உங்கள் மண்ணில் எத்தனை படு கொலைகள் நிகழ்ந்தது. எனக்குத் தெரியும் நீங்கள் அதைப்பற்றிப் பேசவோ எழுதவோ தைரியமாகஇல்லை. ஒன் றில் எழுதமுதல் அழுவீர்கள். அல்லது எழுதியபின் அழுவீர்கள் அதனால்தான் நீங்கள் அதுபற்றி இப்போது எழுத முடியவில்லை. சில நேரங்களில் நான் பார்க்கிறேன் அனேகம் நீங்கள் யாவரும் அழுது கொண்டே எழுதுவீர்கள். நான் இன்றே கவனித்தேன் உங்கள் புன்ன கையில் இருந்து. நீங்கள் மிகவும் அதிர்ச்சியாக இருக்கிறீர்கள் எதையும் குறைந்த அளவேனும் யதார்த்தமாகப் பார்க்க தயங்குகிறீர்கள். அல்லது உங்கள் புன்னகைகளில் மாயங்கள் இருக்கிறது. இல்லையென்றால் புரட்சி பற்றி இவ்வளவு நம்பிக்கையீனமாக உங்களால் புன்னகைக்கமுடிகிறது. நான் சொல்லுவதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்வீர்கள் என்று நான் நம்பவில்லை. நான் எனது வீட்டிலி ருந்து வெளியே வந்ததுபற்றி உங் களின் சிந்தனை ஒரு சில நூறாண்டு களுக்கு முந்திய சிந்தனை. உங்கள் சிந்தனைகுறித்து நான் பரிதாபப் படுகிறேன். ஆனாலும் நீங்கள் புரட் சிகுறித்து சிந்திக்கவேண்டும். இன்னும் இன்னும் நீங்கள் சிந்திக்கவேண்டும். இன்றே அது உங்களுக்கு இயலும் நேற்றே நான் உங்களைக் கவனித் தேன் எனது மூடிய ஜன்னலினூடாக பார்த்த போது, இதிலிருந்து நாலா வது வீதியில் இருக்கும் உங்கள் வீட் டில் உறங்கும் போது காலையில் அது வெளிப்படையாகிற்று என்றான்.

என்னுடைய பிரக்ஞையில் பொறி தட்டிற்று. என்னுடைய அவன் எப்பொழுதோ காலத்தை இழந்து விட்டான். இன்னும் சொன்னால் காலத்தை முழுமையாகக் கடந்தே விட்டான். அதோடு சாதாரண வழமைகள் எல்லாவற்றை யும் கூட கடந்துவிட்டான் என்று நான் முழுமையாக நம்பத்தொடங் கினேன். அப்பொழுது அங்கேயொரு நிகழ்ச்சி நடந்தது.

நான் முன்பே சொன் னேன் அல்லவா அவனுடைய ஒரு கெந்தல் நடையுடைய கால் அதை மற்றய காலோடு சேர்த்துக்கொண்டு நுணி விரல்களில் எம்பி எனக்குப் பின்னாலுள்ள வெளியைப்பார்த் தான். அவனுடைய கண்களில் நிரம் பிய மகிழ்ச்சி தெரிந்தது. 'என்ன பார்க் கிறீர்கள் யாரையாவது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?' 'இல்லை' நான் உங்களைத்தான் வெகு நேரம்வரைக்குமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். சென்றமுறை நீங்கள் என்னைச் சந்தித்தபோது கொடுத்துச்சென்ற புத்தகத்தை இன்னமும் படித்துமுடிக்கவில்லை. அதற்காக முதலில் என்னை நீங்கள்

முல்லைக்கமல்

மன்னிக்கவேண்டும். அதைநான் அந்த வெளிகளுக்கப்பால் ஓடிச் செல்லும் ஆற்றின் கரையில் உள்ள பாறைகளில் வைத்துவிட்டு வந்து விட்டேன். திரும்பப்போய்ப்படிக்கவும் இல்லை. மிகவும் சுவாரசியமானகதை தான் அது. நான் இப்போது கூட ஞாபகம் வைத்திருக்கிறேன். அந்தக் கதையின் தலைப்பு 'தோற்காதவன்' அதன் நாயகன் ஓர் நல்ல பாத்திரந்தான். ஏன் நீங்கள் இடையில் ஒருநாள் என்னோடு அக்கதைபற்றி வாதாடக் கூட முனைந்தீர்கள். அப்போதும் நான் அதைப்படித்து முடிக்க வில்லை. இப்போதும் நான் அதை முழுமையாக படிக்காததற்கும் என்னை மன்னிக்கவேண்டும். அப்படியென்றால் நீங்கள் என்னோடு அதைப்பற்றி வாதாட முடியாது என்பதை உங்க ளுக்கு ஞாபகப்படுத்த விரும்புகி றேன். ஆனாலும் அந்தக்கதையின் பாத்திரங்கள்தான் எப்படி நகர்த்தப் பட்டிருக்கின்றன என்றான் அவன்.

'இல்லை இதற்கு முன்னம் நான் ஒருமுறையும் உங்களைப் பார்த்ததில்லையே அதோடு எனக்கு அப்படியொரு சந்தர்ப்பத்தில் நீங்கள் குறிப்பிட்ட கதைப்புத்தகத்தை நான் கொடுத்ததாயுமில்லையே இன்னும் போனால் இதற்குமுன்னால் உங் களோடு எதைப்பற்றியும் உரையாடிய தில்லையே... என்றேன்.

அவனுடைய முகத்தில் இப்போதும் புன்னகைதோன்றியிருந் தது. இல்லை நன்றாக ஞாபகப் படுத்திப்பாருங்கள் அன்றும் இதே நாள்தான் நானும் நீங்களும் வெளி யிலிருந்து அதோ நான் வந்து என் னுடைய வீட்டுக்குள் ஜன்னலூடா கவே நுழைந்துகொண்டு மணிக்கணக் கில் இலக்கியம் பற்றி பேசிக்கொண்டி ருந்தோமே அன்றும் இதேநாள்தான் ஞாபகப்படுத்திப்பாருங்கள்.

அப்படியொரு நாளும் உங் களுடன் அந்த வீட்டுக்குள் நுழைந்த தில்லையே என்னால் உறுதியாகக்கூட கூறமுடியும். அப்படியெதுவும் நிகழ வேயில்லையே... எனது குரலில் பிசிறல் தட்டிற்று. அழுதுவிடுவேனோ என்று நினைத்தேன்.

'இல்லை வால்விட்மனின் கவிதைகளையும் எலியாட்டின் படைப் புக்களையும் ராஸ்ரோயின் நாவல் களையும் சிறுகதைத்தொகுதிகளை யும் இன்னும்பிற ரஸ்சிய பிரான்சிய அமெரிக்க எழுத்தாளர்களின் படைப் புக்களையும்கூட ஒன்றன் பின் ஒன்றா கக் கொடுத்தீர்கள் உங்களுக்கு ஷோமரின் நாடகங்களில் கூட பரீட் சயமிருக்கிறது. ஒதெல்லோ நாட கத்தை நடித்துக் காட்டக்கூடச் செய் தீர்கள். அச்சொட்டாக அதிலொரு பாத்திரத்தில் ஒன்றி நடித்தீர்கள். இந்தியாவில் தாகூரையும் நீங்கள் அறி முகப்படுத்தியதுக்கு மிகவும் நன்றி. அது எனக்கு நன்றாய் ஞாபகத்தி லிருக்கிறது. அவை எல்லாவற்றையும் அன்று இதேநாளில்தான் வாங்கி வாசித்துவிட்டு அன்றே கொடுத்து விட்டேன். இன்றுதான் அது நிகழ்ந் தது யோசித்துப்பாருங்கள் இன்று தான்.. என்று. என்னால் அதை உறு தியாகக் கூறமுடியும்.

'இல்லையே நான் உங் களை முதன் முறையாக இன்றுதானே பார்க்கிறேன். அதுவும் உங்களுடைய வினோதமான நடவடிக்கையால் கவரப்பட்டு உங்கள் மீதுள்ள பரிவின் காரணமாகத்தான் உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னுடன் கட்டாயம் வரவேண்டும். என்னுடைய நண்பர் ஒருவர் டாக் டராக இருக்கிறார். நிச்சயம் நீங்கள் குணமடைவீர்கள் உங்களை என் னால் காப்பாற்றமுடியும்.

இல்லை நண்பரே நீங்கள் அதிகம் நினைவுக் குழப்பத்திலிருக் கிறீர்கள். அன்றுதானின்று அது சரி யாகவே நடந்தது உங்களால் நிச் சயம் ஞாபகப்படுத்தமுடியும் ஆலிவ் டைய்ஸ் நாவல்கூட எனக்கு கொடுத் தீர்கள் அதைப்படிக்கும்போது மிகவும் சிரித்தேவிட்டேன். அதைப்பற்றிக்கூட விவாதித்தோம் நிச்சயமாக அன்று தானின்று. இதேபோல நாங்கள் பேசிக் கொண்டோம். இதோ இந்த மரங் களில் இவ்விதமாய்த்தான் காற்று வீசி யது. சூரியன்கூட இப்படித்தான் இருந்தான் எங்களை அன்றும் கூட ஒருவரும் தொந்தரவு செய்யவில்லை. அன்று இதேவிதமாகத்தான் நீங்கள் உடைஅணிந்திருந்தீர்கள். ஒரேயொரு வித்தியாசம். அன்று நாங்கள் சந்தித் தபோது முதலில் சோகமாகவும் இறு தியில் சந்தோசமாகவும் பிரிந்து சென் றோம். ஆனாலும் நீங்கள் என்னொடு தோற்காதவன் கதைகுறித்துப் பேசக் கூடாது என்று உங்களுக்கு ஆணை யிடுகிறேன். ஏனெனில் அதைஅந்த ஆற்றின் தீரத்தில் பாறைகளுக்கு நடுவே வைத்துப்படித்தேன். முடிக்கவில்லை.

"இல்லையே என்னுடைய குரல் முற்றிலும் உடைந்துவிட்டது.

(17ஆம் பக்கம் பார்க்க)

## மாட்டுக்கு சாபம்




**கணவன்:~**

ஏனடியப்பா அந்தமாட்டை சனியன் A-9 இலை போகாதோ என்று திட்டுறாய்.

**மனைவி:~**

பேந்தென்ன, ரெண்டு வருசமா வளர்த்த தென்னையைத் திண்டுபோட்டு போகுது, வாற விசருக்கு இதைவிட என்னண்டு திட்டிறதாம்.





# வேலப்பன் மலையின் நாயகன்

## இ.கபிலன்

நீலக்கடல் அலைகள் இயற்கை எழிலாய் தாலாட்டும். அக்கடல்நீர் இறக் கண்டி. சலப்பை. ஆற்றுவாய்க்கால்களால் ஊரில் இருசிறு கடல்களை தோற்று வித்தது.

மாரிகாலமானதும் இச்சிறு கடல்களில் இறால்.மீன்பிடித்து தம் வாழ்வை வளமாக்கும் மக்கள் கோடை காலமானதும் சிறுகடல் உப்பளமாக அதில் உழைப்பைத்தேடித் தம்மை வாட்டியெடுக்கும் வறுமைக்கு ஒத்தடம் கொடுக்கும் மக்கள்.

மண்ணோடு மாரடித்து வியர்வை சிந்திய மக்களது உடல் உழைப்பால் தோட்டங்களது பசுமை ஒருபுறம்.

மேற்குப்புறம் வேலப்பன் மலையும் அதனைச்சூழ காடுகளும். சிறு குளங்களும். வயல்வெளிகளும் இவைகள் அனைத்தும் கும்புறுபிட்டிக் கிராமத்தின் மண்வாசனையை சிறந்தோங்க வைத்தன. இக் கிராமத்தைப் பார்ப்பவர்களின் மனத்தில் இனம் புரியாத சுகம் பரவும்.

இங்குள்ள பிள்ளையார் கோயில். அந்தோனியார் கோயில். முத்துமாரியப்பன் கோயில்கள். இம்மக்களின் ஆன்மீக நாட்டத்தின் இறையுறவு இருப்பிடங்கள். இவ்வான்மீகச் சூழலில் முத்துமாரியப்பன் திருவிழாக்காலங்களில் மக்களது முகம் முழுவதும் புரிப்பின் முழுமையைக் காணலாம்.

இப்படியாக சிறப்புற்று உள்ளக் களிப்போடு வாழும் மக்கள் அன்பைக் காட்டி. அன்பைப்பெற்று வாழ்ந்தார்கள்.

இம்மக்களுக்குள் முத்துலிங்கம் அண்ணன் தன் இல்லாள். ஐந்து பிள்ளைகளோடு முழுமனத்துடனும். முழு ஆன்மாவோடும் குடித்தனம் நடத்தலானார்.

அண்ணன் தனிமனிதனாகப் பிறரோடு தொடர்பற்ற தன்னலவாதியாகத் தன்குடும்பத்தைக்கொண்ட உலகில் வாழவில்லை. தன் அன்புறவால் மக்களோடு இரண்டறக்கலந்து வாழ்ந்தார்.

அவர் வேட்டைக்காரனாக. கமக்காரனாக. மீனவனாக உழைக்கும் உழைப்பாளியாகவும் இயங்கலானார்.

அண்ணனது வேட்டையாடும் திறனும். காட்டு அனுபவமும். துணிவு மிக்க மனமும் ஊரின் நாயகனாகவே அவரை மிளிர வைத்தது.

இப்படியான அண்ணனின் வாழ்க்கை காலச்சுழற்சியில் திசை திரும்பியது. அதாவது அவர் தமிழின உணர்வு ஈடுபாடுகொண்ட தியாக மனப்பான்மையுள்ளவராக மாறினார்.

அண்ணனுக்கு நெருக்கமான ஷாம் அண்ணன் மூலம் 1984ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மூத்த போராளி இளங்கோவுடன் தொடர்பு ஏற்பட வாய்ப்புக் கிடைத்தது.

தமிழரின் சுதந்திரத்தைப்பெற தம் வாழ்வை விலையாகவும். சோதனையாகவும் கொடுத்துப் போராடும் புலிப்போராளிகளுக்காக சேவை செய்யக்கிடைத்த வாய்ப்பு ஈடற்றது என்கிற மனவெழுச்சியோடு அண்ணனது பணிகள் ஆரம்பித்தன.

அவரின் ஆரம்ப பணியாக மூத்ததளபதி சந்தோசம் மாஸ்ரர். பதுமன்.சஞ்சய். சங்கிலி. நாதன்.சுருளி உள்ளிட்ட பதினாறு போராளிகள் கொண்ட ஆயுத அணியை வேலப்பன் மலைக் குகையில் நிலைப்படுத்தினார்.

அம் மலையில் மூத்த குடிகள் வாழ்ந்த புராதன சான்றுகள். எச்சங்கள் காணப்பட்டன. குகையும் வௌவால் கழிவுகளால் துப்பரவற்றே இருந்தது. போராளிகளின் கடின உழைப்பால் அவ்விடம் புதுப்பொலிவு பெற்று போராளிகளது தங்ககமாக மாறியது.

மலையடிவாரத்தில் சிறிய கிடங்கு தோண்டப்பட்டு அதில் ஊறும் நீர்தான் போராளிகளின் அனைத்துத் தேவைகளுக்கும் பயன்படுத்தினார்கள். அதுவும் சிரட்டையால் அள்ளியே எடுக்கப்படும். நீர் அள்ளியபின் தடயங்கள் இன்றி மூடப்பட்டுவிடும்.

மலையின் உச்சியில் இத்திமரம் அம்மரமே போராளிகளின் காவற்கோபுரம். இக்காவற்கோபுரமும். தொலைநோக்குக் கண்ணாடியும் ஊரின் அழகை போராளிகள் சுவைக்க உதவின அதுவே அப்போதைய பொழுதுபோக்காகவும் இருந்தது.

இது இப்படியிருக்க அண்ணன் போராளிகளுக்கான அனைத்துத் தேவைகளுக்கும் ஊர் சென்று வந்தார். உணவுப் பொருட்கள். மருந்துகள். தன் இல்லத்தாளின் தின்பண்டங்கள் என சுமந்தும்.ஊர்நிலவரங்களை அறிந்தும். சொல்லியனுப்பும் செய்திகளைப் பரிமாறியும் வரலானார். அவரின் பாதங்களுக்கும். தோள்களுக்கும் சோர்வின்றிய உழைப்பு இருந்தது.

ஒவ்வொரு நாளும் இருள் சூழும்வரை போராளிகள் காத்திருப்பார்கள். இருள்சூழ்ந்து இருளானதும் போராளிகளான நாதன். சுருளி அண்ணரின் வழித்துணையோடு ஊருக்குள் சென்று தம் பணிகளை ஆற்ற. காலக்கிரமத்தில் ஏனைய போராளிகளும் நகர ஆரம்பித்தார்கள்.

இப்படியாக நாளாந்தம் இருள் சூழ்ந்ததும் ஊருக்குள் போராளிகள் சென்றுவரும்போது ஊர்நாய்கள் வழக்கத்திற்கு மாறாகக் குரைக்க ஆரம்பிக்க. காலப்போக்கில் போராளிகளது செயற்பாடுகளும் கசியத்தொடங்கின.

அதாவது கடற்கரையில் படகுகளால் பொருட்கள் இறக்குதல். ஏனைய பிரதேசங்களுடான தொடர்பை விரிவுபடுத்துதல். மக்களுடனான உறவை வலுப்படுத்துதல். வேவுநடவடிக்கைகளில் ஈடுபடுதல். துரோகி அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல். ஆகிய செயற்பாடுகளில் போராளிகள் இறங்கினார்கள். அதில் அண்ணனும் விசுவாசத்தோடு உழைத்தார்.

இத் தகவல்கள் பரவ சிங்களப் படையினரின் வாகனங்களும் ஊரினுள் நுழைந்து தேடல்களைச் செய்ய. ஊர் பதற்றமான சூழ்நிலைக்குள்ளாகியது. போராளிகளுக்கான பொருட்களை வழங்கிவந்த அருள்சாமி கடைக்காரர் சிங்களப் படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார்.

இவ்விறுக்கமான சூழ்நிலையில் இருக்கும்போது போராளிகள் சூட்டுப் பயிற்சிபெற சத்தம் வெளியே கேட்காதகாட்டுப்பகுதிக்குள் செல்லவேண்டி இருந்தது. அண்ணனின் உதவியோடு நடுக்காட்டுப்பகுதிக்குள் நகர்ந்தார்கள்.

அங்கு மரங்கள் அடர்ந்து வளர்ந்தோங்கியிருந்தன. அவை மனத்தைக் கவரும் இயற்கை எழிலாகும். நவீன மனிதர்களைக் கண்டதனால் குரங்குகளின் மரத்தாவல்களும் கதறல்களும் அவைகளோடு மர அணிலின் குரலிசை. இன்னும் பல இதய சங்கீதங்கள் ஒலித்தன.

இவ்வகையான இயற்கை இன்னிசையோடு வரும் வசந்தம் போராளிகளின் மனதை மிகிழவே வைத்தன.

மனிதர்கள் தம்மிடம் வருபவர்களுக்கு விருந்தோம்பல் செய்வது போல மரங்கள் தன் குளிர்மையான நிழலால் நவீன மனிதர்களான போராளிகளை அரவணைத்தன.

ஆகா என்ன சுகம். என்ன இயற்கை அழகு எனப் போராளிகளின் வாய்கள் பேசின. அனைத்தும் ரசனைக்குரிய புதுமையாகவே அப்போது அவர்களுக்கு இருந்தன.

கன்னாமரம் அறுக்கப்பட்ட பழைய தடயங்களைத்தவிர மனித நடமாட்டங்கள் இல்லாத காட்டுப்பகுதி அது. அத்தகைய பாதுகாப்பான பகுதியில் சூட்டுப் பயிற்சிகள் நிறைவு பெற்றன.

இப் பயிற்சியின் போது அண்ணனும் நவீன துப்பாக்கிப் பயிற்சி பெற்றார்.

அவரின் நிதானம் தப்பாத வேட்டைத்துப்பாக்கிச் சூட்டு அனுபவத்தினால் பயிற்சியின் போதும் இலக்கின்மீது குறிதவறாது சுட்டார்.

மரமொன்றின் அடிப்பாக நடுப்பகுதியில் பொருத்திவைக்கப்பட்ட இலைதான் சூட்டு இலக்காக இருந்தது. அந்த இலை மேற்பாகத்திலேயே சூடு விழுந்தது.

மிருகத்தின் தலையில்தான் தன் சூடு விழுவது போல் இலையின் மேற்பகுதியில் சூடு விழுந்துள்ளதாக புன்னகையுடன் போராளிகளிடம் பகிர்ந்துகொண்டார்.

போராளிகளின் நவீன துப்பாக்கியால் சுடும் சந்தர்ப்பம் கிடைத்தமையாலும். சுட்ட முதற்சூடே இலையின்மீது சுட்டமையினாலும் அவரின் உள்ளம் ஆனந்தத்தில் மூழ்கியது. போராளிகளுடன் மீளவும் வேலப்பன் மலைத் தளத்திற்கு வந்து சேர்ந்தபின்னரே இல்லத்தாளைக் காணச் சென்றார்.

இல்லத்தாளின் நேசமான உழைப்போடுதான் போராளிகளுக்கான உதவிகளைச் செய்துவரும்காலத்திலேயே அவரின் மைத்துனர் நடேஸ் மற்றும் தனம் அக்கா ஆகியோரும் போராளிகளுக்கான உற்சாகத்துடன் கடினமாக உழைத்தார்கள். அவர்களின் உழைப்பு காலம் கடந்தும் நேசிக்கப்படுவதாகவே இருக்கின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் போராளிகளுக்கான உணவிற்கு பணநெருக்கடி ஏற்பட்டபோது உடும்பன் இராசதுரை அண்ணன் ஏழ்மையிலும் துன்பப்பட்ட போதிலும் மனைவியின் சிறிய சங்கிலியை அடைவுவைத்து உதவினார்.

இப்படியாக மக்கள் ஆதரவுகள் போராளிகளுக்கு கிடைக்கவும். போராளிகளின் செயற்பாடுகளில் தீவிரம் பெறவும். சிங்களப் படையினரின் நடமாட்டங்களும் தீவிரமானது.

இந் நெருக்கடியான சூழ்நிலையால் எந்த நேரமும் ஆபத்து வேலப்பன் மலைத்தளத்திற்கு வரலாம் என்பதால் வேறு பாதுகாப்பான தளமொன்றை வேறு காட்டுப்பகுதியினுள் அமைத்தார்கள். அதற்கான அனைத்து வேலைகளிலும் அண்ணனின் உழைப்பு முக்கியமாகவே இருந்தது.

வயல்குடிசை போடும் மறைப்போடு மாட்டுவண்டியில் கிடுகு கொண்டு வந்துகொட்டில் அமைத்துக்கொடுத்தும். வழமையான பணிகளை நிறைவேற்ற ஊர் சென்று வந்தும். வேட்டையாடி இறைச்சி. உணவு போராளிகள் உண்ணவும் அண்ணனின் உடல் பாடுபட்டது.

மக்களில்சிலர் எல்லாவற்றிற்கும் முன்பாகவும். மேலாகவும் பாதுகாப்பைத் தேடுகின்றார்கள். ஆபத்து எங்கெல்லாம் தென்படுகின்றதோ அவ்விடங்களையெல்லாம் தவிர்க்கின்றார்கள். ஆனால் அண்ணன் குடும்பத்தார் சற்றேனும் தயக்கமின்றிப் போராளிகளுக்கு சேவை புரிந்தார்கள்.

ஒருநாள் அண்ணன்வீட்டில் இருக்கும் சமயம் சிங்களப்படையினரிடம் சிக்கிக்கொள்ளநேரிட்டது. வேட்டைக்குப் போவோம் எனச் சொல்லியபடியே அண்ணனைக் கைதுசெய்து திருமலைநகர் கோட்டைமுகாமிற்குக் கொண்டு போனார்கள்.

இச் சம்பவம் மனைவி பிள்ளைகள் யாவரையும் தேம்பித்தேம்பி அழவைத்தது. இச்செய்தி போராளிகள் அனைவருக்கும் வருந்தத்தக்க செய்தியாகவே இருந்தது. இக்கைது ஊர் மக்கள் அனைவரையும் சோகத்தினுள் ஆழ்த்தியது.

சிலநாட்களின் பின் அண்ணன் சிங்களப்படையாட்களுடன் வீட்டிற்கு வந்தார். மோசமாகத் தாக்கப்பட்ட உடல்நிலையிலேயே மனைவியைக் காணமுடிந்தது. சிங்களப்படையாட்கள் இளநீர் குடிக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தன் மனையாளுடன் கதைத்தார்.

கணவனைப் பார்த்து மனைவி புன்னகைக்கவில்லை. அவளிடம் மகிழ்ச்சி இல்லை. அவளின் விம்மல்கள் உடலைக்குலுக்க கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. அண்ணன் தன் கண்களால் தன் துக்கத்தையும் சோகத்தையும் பகிர்ந்தார்.

இச் சோகமயமான சூழ்நிலையில் அவர்தன்மனைவியிடம் "பிள்ளைகளிடம் சொல்லு தன் உயிர் போனாலும் தளத்தைக்காட்டமாட்டேன். அவர்களை அந்த இடத்திலேயே நம்பிக்கையுடன் இருக்கும் படியும். பிள்ளைகள் இன்னும் காட்டு அனுபவம் பெறாததனால் அவர்களை அலைந்து திரிய வேண்டாம் எனவும் அமைதியாக உணர்த்தி அழும் மனத்தோடு விடைபெற்றார்.

கோட்டைமுகாமில் சிங்களப் படையாட்களால் அவரது நரம்புகளிலும். இதயத்திலும் மீண்டும் மீண்டும் எழுப்பிய ஒவ்வொரு கேள்விக்கும் அண்ணன் கொடுத்த உறுதியான மறுமொழி தெரியாது என்பதே.

அண்ணனின் கைதும். அண்ணன் தன் மனைவியிடம் சொன்ன செய்தியும் எல்லாப்போராளிகளின் நெஞ்சத்தின் ஆழத்தில் பதிவாகி அவர் மீதான பிடிப்பு இன்னும் இறுக்கமானது.

போராளிகள் சென்றுவரும் ஊர்ப்பாதைகளுக்கோ. சென்றுவரும் வீடுகளுக்கோ எந்தவொரு ஆபத்தும் ஏற்படவில்லை. அண்ணன் வீட்டு வேலியில் வழமைபோல் எச்சரிக்கும் செய்தியாக உடுப்புக் காயப்போடும் செயற்பாடுகளும் மாறாது நடைபெற்றன. இதனால் காயத்தை வருடிச் செல்லும் மெல்லிய தென்றலைப் போல் போராளிகள் முகங்களில் சோகத்தைமீறிய ஆத்மதிருப்தி தளும்பி நின்றது.

சில நாட்கள் கழிந்து சிங்களப் படையினர் அண்ணனை ஊருக்குள் கொண்டுவந்தபோது அவரின் உடல் நிமிர்ந்து நிற்கும் ஆற்றலை இழந்திருந்தது. பழைய வேலப்பன் மலைத்தளத்தைக் காட்டும் சம்மதத்தோட வந்திருந்தார். அதுவே அவர் அனுபவித்த சித்திரவதையின் கொடூரத்தைப் புலப்படுத்தியது.

சிங்களப் படைகள் வேலப்பன் மலையைநோக்கி நகரும்போது நல்லலிங்கம். சிங்கக்குட்டி ஆகிய இரு அப்பாவித் தமிழர்களையும் கைதுசெய்து தம்மோடு அழைத்துச் சென்றார்கள்.

இப்படியாக நகரும் வழியில் சிறுகடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சில தமிழர்களை அழைத்து ஓர் இடத்தில் அமரவைத்து வீச்சுவலையால் மூடிய பின் வீசியவரையும் அதனுள் இருக்க வைத்தார்கள். அத்தோடு நிற்காது பச்சை மீன்களை ஒவ்வொரு தமிழனுக்கும் கொடுத்துவற்புறுத்திச் சாப்பிடவைத்து துன்பத்தில் இன்பம் கண்டனர் சிங்களப் படையினர்.

வேலப்பன் மலையை சென்றடைந்ததும் அங்கு ஏமாற்றத்தையே சிங்களப்படையினர் சந்தித்தார்கள். அங்கு பன்றிகளால் சிதைக்கப்பட்டிருந்த போராளிகளின் எச்சங்களே காணப்பட்டன. ஆனால் போராளிகள் எவரையும் கொல்ல முடியவில்லை.

இந்த ஏமாற்றத்தை சந்தித்த படையினர் மலைச்சரிவுள்ள உயரமான இடத்தில் மூவர்களையும் கண்கள்.கைகள் கட்டியபடி நிறுத்திவிட்டு சுடுவதற்கான தயார்நிலையில் இருக்கும்போது நல்லலிங்கமும். சிங்கக்குட்டியும் இறுதியாகத் தப்பிக்க முயன்றார்கள்...

ஆனால் அண்ணன் சித்திரவதைகளால் உடல் தளர்ந்து இருந்ததனால் சிங்களத்தின் துப்பாக்கி ரவை உடலைத் துளைத்தது. இரத்த வெள்ளத்தில் வேலப்பன்மலையின் மடியில் தலை சாய்ந்தார். அதுவும் தமிழரின் இப்படியொரு புராதனக்குகையில் அவரின் உயிர் பிரிந்தது.

முத்துலிங்கம் அண்ணனுடைய வாழ்வு முடியவில்லை. அவரின் வாழ்வு தமிழீழ வரலாறு தன்னகத்தே ஏற்றுக்கொண்டதனால் மறைவிலும் மகிமை.

எல்லோரது வாழ்க்கையும் வரலாறாவதில்லை வரலாறானவர்கள் யாவரும் தனக்காக வாழ்ந்ததுமில்லை.



### நின்றுபோன கலியாணம்



ரகு:~
என்ன மச்சான் உன்ரை கலியாணம் இடையிலை நிண்டு போச்சு.

திரு:~
வேறயென்ன சீதனக்காணி A-9 இலைதான் தருவினமாம் அது தான் மாட்டன் எண்டு சொல்லிப் போட்டன்.



சாவகச்சேரி ~ கல்வயல் ~ பெருங்குளம்

அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

புனராவர்த்தனப் பிரதிஷ்டா நவ (9) குண்டபக்ஷ உத்தம மஹாயாக சம்புரோக்ஷண அஷ்டபந்தன

மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

காலம்: தாரண வருஷம் ஆனி 11~ம் நாள் வெள்ளிக்கிழமை 25.06.2004

நேரம்:~ காலை 9.31. முதல் 10.00 மணிவரை

ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகன் அடியார்களே!

இலங்கை நாட்டின் வடபால் அமைந்திருக்கும் ஈழத்திருநாட்டின் தென்மராட்சி பகுதியின் கல்வயல் பெருங்குளம் பழமை மிக்க திருப்பதியில் அருள்பாலிக்கின்ற ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம் நாட்டின் யுத்தத்தால் சேதமடைந்து மெய்யன்பர்களது நிதியுதவி கொண்டு பல திருப்பணி சிற்ப வேலைகள் நடைபெற்று சிவாச்சாரிய பெருமக்களைக் கொண்டு தாரண வருஷம் ஆனி மாதம் 11ஆம் நாள் 25.06.2004 வெள்ளிக்கிழமை பகல் 9.31 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள சிம்மலக்கின சுபமுகூர்த்தத்தில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நிகழத் திருவருள் பாலித்துள்ளதால் அத்தருணமும் இதற்கு முன் பின்னும் நிகழும் சகல கிரியா காலங்களிலும் இப்பெரும் மஹா சாந்தியிலும் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகப்பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறப்புற நடைபெறவாழ்த்துவோர்

சாரங்கன் நகைமாடம்
அன் சென்ரர்
இல. 45, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2226059

மிகவிரைவில்
சாவகச்சேரி நகரில்
சிவா நகைமாடம்

சாரங்கா நகைமாடம்
இல. 157/1, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2222480

(சி-9916)

COMPUTER EXPRESS

Institute of Information Technology

இலங்கையில் தமிழ்மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச் சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - (3) 2004

எமது அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம்.

| பாடநெறிகள் | | பாடநெறி கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம் (20%) |
|---|---|---|---|
| Diploma in Computer Science | – 4 மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | – 4 மாதம் | 8,000 | 1,600 |
| Advance Diploma in Computer Science | – 6 மாதம் | 10,000 | 2,000 |
| Diploma in Webpage Designing | – 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphics Designing | – 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desk Top puplishing | – 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hardware Engineering | – 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | – 3 மாதம் | 7,000 | 1,400 |

வகுப்புகள் ஆரம்பம்:- 25.06.2004

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

Maniam's Building
இல.152/1. சிராம்பையடி வீதி, யாழ்ப்பாணம்.
(Off Stanley Rd.)
0777222422/ 0777278880

(சி-9917)

கண்ணன் கடைச்சல் தொழிலகம்

(ஷாப் மைக்ரோ)

21 வருட அனுபவங்களுடன் மீண்டும் நீண்ட கால இடைவெளியின் பின் கிளிநொச்சியில் மத்தியகல்லூரியின் முன்பாக இயங்கத்தொடங்கியிருக்கிறதென்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். உங்கள் மோட்டார் சைக்கிள்கள் வாட்டப்பம், ரக்ரர் கடைச்சல், போறிங், றீசீலிங் வேலைகள் சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும்.

இடம்:59, மத்தியகல்லூரி முன்பாக, யாழ்சாலை, கிளிநொச்சி.

தகவல்: தவம்.

(4599)


(03பக்கத்தொடர்ச்சி...)

நகரமயமாக்கலுக்கு அமைவாக பிரதான சாலைகள் புனரமைக்கப்படாது சிறிய வீதிகளாக உள்ளதால் இதனூடாக பாரிய வாகனங்கள் தினமும் சென்று வருவதானால் விபத்துக்கள் நிகழ்கின்றன. இவற்றைவிட அனேகமான சாரதிகளுக்கு வேண்டிய வீதி ஒழுங்கு விதிமுறைகள் கடைப்பிடிக்கத் தெரியாது வீதிவிபத்துக்களை ஏற்படுத்துகின்றனர்.

வாகனங்களை அதிக வேகத்தில் செலுத்துவது, பக்கம் பக்கமாக செல்லுதல், எதிரில் வருகின்ற வாகனம் பற்றி எதுவுமே சிந்திக்காது செல்வதனால் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்பவர்கள் அனேகமானோர் விபத்துக்களில் சிக்கி இருக்கின்றனர். இதனைவிட இவற்றின்மூலம் மரண விபத்துக்கள் கூட நிகழ்ந்துள்ளன. அத்தோடு பயணிகளை ஏற்றிக்கொண்டு அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தும்போது கூடுதலான விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன.

முகமாலை சோதனைச் சாவடி ஓமந்தை சோதனைச் சாவடி என்பன மாலை 5.30 மணிக்கு மூடப்படுவதனால் இச்சோதனைச் சாவடிகளை கடக்கவேண்டும் என்பதால் மிகவேகமாக செல்லமுற்படுவதனால் மாலை 3.00 மணிக்கு பின்னர் கூடுதலான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன். தற்பொழுது வேகக்கட்டுப்பாடு இறுக்கமாக. பேணப்படுவதனால் ஓரளவு விபத்துக்கள் குறைவடைந்துள்ளன.

இளவயதினருக்கு வீதி ஒழுங்கு முறை தொடர்பான கற்பித்தலை உருவாக்கி அதனூடாக ஒரு அனுமதிப்பத்திரம் வழங்கும் முறை ஒன்றை ஒழுங்குபடுத்திக்கொண்டு இருக்கின்றோம். அது மிகவிரைவில் நடமுறைக்கு கொண்டுவரப்படும்.

வீதி ஒழுங்குமுறை தெரியாது குறிப்பாக சொல்வதானால் மற்றவர்களைப் பற்றி சிந்திப்பவர்கள் வாகனங்களில் சாரதிகளாக செல்லும்போது வீதிவிபத்துக்கள் நிகழாது. தன்னை மட்டும் பற்றிசிந்தித்துக் கொண்டு செல்லும் சாரதிகளால் தான் இப்படியான விபத்துக்கள் நிகழ்கின்றன.

நீண்டகாலமாக போரினால் பாதைகள் செப்பனிடப்படாது வெளியூர்களிலிருந்து வாகனங்கள் நீண்டகாலத்தின் பின் இருந்தமையாக இப்பகுதிக்கு வந்துள்ளமையாலும் வீதிஒழுங்கு முறைகளை சரியாகப் பேணப்படவில்லை. அதற்கு வீதிகளும் உரியமுறையில் இல்லாது காணப்பட்டமையும் ஒரு காரணம். இடது பக்கமாகச் செல்லும் வாகனம் வீதிகுன்றும் குழியுமாக காணப்படுவதனால் அவ்வாகனத்தை வலது பக்கத்துக்கு சென்று மீண்டும் இடது பக்கம் சென்று தான் வாகனத்தை ஓட்டிச்செல்லப்படும். அன்றைய காலப்பகுதியில் நீண்டகாலயுத்தம் ஒரு இறுக்கமான பொருளாதாரத்தடை எங்களுடைய பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படாமை.எமது பிரதேசங்களில் உள்ள வீதிகள் உரிய முறையில் புனரமைப்புச்செய்யப்படவில்லை. இதன் காரணமாக இந்த பழக்கத்தில் நீண்டகாலமாக இருந்த எமது மக்கள் தற்போது கூடுதலான பாதைகள் செப்பனிடப்பட்டு நிறைய வாகனங்களை இங்கு விட்டமையால் அனேகமான இளவயதினருக்கு வீதி ஒழுங்கு முறைபற்றி தெரியாது இது ஒரு முக்கிய காரணமாகும்.

இனி வருகின்ற காலங்களில் பாடசாலைகளில் இருந்து ஒவ்வொரு ஆசிரியர்களை எடுத்து அவர்களுக்கு வீதி ஒழுங்குமுறை தொடர்பான வகுப்புக்களை கொடுத்து அவர்கள் அங்கு பாடசாலைகளில் கற்பிக்கக்கூடியவகையில் ஒரு நடைமுறையினை கல்விக்கழகத்தினூடாக ஒழுங்குகளை மேற்கொண்டு இருக்கின்றோம். சிலர் வாகனங்களுடன் மோதாமல் பாலங்கள், மின்கம்பங்கள் மரங்கள்என்பவற்றுடன் மோதி அதன் மூலமகூட விபத்துக்கள் நிகழ்ந்து உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது.

வீதிவிபத்தினால் வரும் விளைவுகளைப் பற்றியும் தான் ஒரு வாகனத்தை செலுத்திக்கொண்டு செல்லும்போது அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி சிந்திக்கின்ற ஆற்றல் இல்லாது செலுத்தப்படுவது ஒரு காரணமாகும்.

காவல்துறையின் வீதிப் போக்குவரத்து பிரிவினரால் நகரப் பாடசாலைகள் கிராமப்புறப்பாடசாலைகள் என்பவற்றில் வீதி ஒழுங்கு முறை தொடர்பான வகுப்புக்கள் நடாத்தப்பட்டுவருகிறது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு,பளை போன்ற நகர்ப்புற இடங்களில் காவல் துறையின் நகரப்போக்குவரத்துப் பிரிவுகளை நிறுவி அவற்றின்மூலம் விபத்துக்களை கட்டுப்படுத்தமுடிகின்றது. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது நாங்கள் வகுப்புக்களை நடாத்தினாலும் அனுமதிப்பத்திரங்களை வழங்கினாலும் அதை மறந்து விட்டு வீதியால் வேகமாக ஓடினால் விபத்துக்கள் நிகழும். அதற்கு எல்லோரும் ஒருமித்துசெயற்பட்டால் தான விபத்துக்களை தவிர்க்கமுடியும்.

தமிழீழ மக்களின் மனித உரிமைகள் எந்தவழிகளில் பேணப்படுகின்றன? எந்தவகையான சட்ட ஒழுங்குகள் கையாளப்படுகின்றன?

மனித உரிமைகள் என்றால் எந்த ஒரு மனிதனும் சுதந்திரமாக தமது உரிமைகளை பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. அந்தவகையிலே தமிழீழமக்களைப்பொறுத்தவரையில் தமிழீழகாவல்துறையினை தேசியத்தலைவர் ஆரம்பிக்கும் போதே இந்த நீலநிறசீருடைகளை தெரிவு செய்வதற்கு காரணம். எமது மக்கள், காலம் காலமாக பிரிட்டிஸ் ஆட்சிக் காலத்தில் இருந்தே காக்கி நிற சீருடைகளும் சீருடைதரித்த ஆட்சி ஆளர்களுக்கும் பயந்து வந்தனர். ஆனால் அவ்வாறான பயஉணர்வு மக்கள் மத்தியில் ஏற்படாது மிக எழிமையானமுறையில் மக்களும் காவல் துறையும் பின்னிபிணைந்து இருக்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாகஇந்தச்சீருடை தேசியத் தலைவர் அவர்களால் தெரிவு செய்யப்பட்டது.

இதைவிட பாரியகுற்றச் செயல்கள் பெரியளவில் இங்கு நிகழ்வதில்லை. இருந்தாலும் ஏனைய குற்றச் செயல்களை எடுத்துக்கொண்டாலும் ஒரு குற்றவாளி இனங்காணப்பட்டு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டால் அவரை மிகவிரைவில் நீதிமன்றமூடாக பிணையில் செல்ல அனுமதிக்கப்படுவதோடு, கைது செய்யப்பட்டு இருக்கின்றபோது மருத்துவ வசதியைப்பெறுதல், உறவினரைச் சந்தித்தல்போன்ற உரிமைகள் வழங்கப்படுகின்றன.

ஒரு குற்றவாளிக்குத்தண்டனை வழங்கப்பட்டால் அவரது குடும்பத்தின் பின்னணி தங்கி வாழ்பவர்களின் நிலை என்பவற்றை கவனத்தில்கொண்டு, அவர்களை எந்தவகையில் சுலபமாக தீர்வுகண்டு உறவினரிடம் ஒப்படைக்கமுடியுமோ அவ்வாறு மிகவிரைவில் விடுதலை செய்யப்படுகின்றது. அத்தோடு குற்றச் செயல்களுக்கான பின்னணிகள் ஆராயப்பட்டு வேலைவாய்ப்புக்கள் வழங்கி அவர்கள் குற்றச்செய்ல்களில் ஈடுபடாதஅளவுக்கு அவர்களை ஏற்படுத்துவதுடன், ஒரு தொழிலையும் வழங்கி அவரை எதிர்காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடாது தவிர்த்துக்கொள்ளமுடிகின்றது. இவ்வாறு குற்றவாளிகளாக இருந்து செல்பவர்கள் பின்பு எந்தக் குற்றச் செயலையும் புரிவதில்லை. ஆனால் சிறிலங்கா அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளில் மிக மோசமான மனித உரிமைமீறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பயங்கர வாதத்தடைச் சட்டத்தின்கீழ்கைது செய்யப்பட்டு விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்படுதல் மக்கள் சுதந்திரமாக நடமாடமுடியாது நீண்ட காலத்திற்கு சிறைகளில் தடுத்து வைத்திருத்தல் போன்ற சம்பவங்கள் நிறையவே காணப்படுகின்றன.

தமிழீழவிடுதலைப் போராட்டத்தின்போது போர்க்கைதிகளாகபல சிறிலங்கா இராணுவம் பொலிஸ், என்பன கைதுசெய்யப்பட்டு தமிழீழ தேசியத்தலைவர் அவர்களால் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ள சம்பவங்கள் நிறையவே உண்டு. அத்தோடு அவர்கள் கைது செய்யப்பட்டு இருந்த காலத்தில் உறவினர்களைச் சந்திப்பதற்கும் தமது உரிமைகளைப் பெறுவதற் கும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. ஆனால் இதற்கு மாறாகவே, இராணுவகட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இராணுவத்தினராலும் பொலிசாராலும் மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன.




இந்த வருடம் சூழல் பாதுகாப்புத்தினத்தின் கருப்பொருளாக தேவை கடல்களும் ,சமுத்திரங்களும் பிணமாகண உயிருடைய (WANTED SEA SAND OCEANS DEAD OR AIIVE)என்பது ஆகும். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதி இம் மாதத்தினை சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தும் பல செயற்திட்டங்களை அமுல் படுத்தி வருகின்றது. இம்மாதம் முடியும்வரை இந்த நடவடிக்கை தொடரும் என அறிவிக்கப்படுகின்றது.

# எங்கள் பொருண்மிய வளம்

## சிதம்பரதிரு

ஆனால் சூழல் தொடர்பான அக்கறை தனியே இந்த மாதத்துடன் மாத்திரம் முடிந்துவிடும் விடயமல்ல எங்கள் மண் வளமுள்ள மன்னார் இருக்க வேண்டுமானால் ,எங்கள் நீர்வளம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் எங்கள் கடல் வளம் பேணப்ட வேண்டுமானால் சூழல் தொடர்பான அக்கறை இந்தமண்ணில் வாழும் வாழப்போகும், சகலருக்கும் இருக்க வேண்டும்.

அதிலும் உலகளாவிய ரீதியில் இவ்வருடம் முன்வைக்கப்பட்டுள்ள கடல் வளம் பாதுகாக்கப்படவேண்டும், என்ற கருப்பொருளை சிறிதளவேனும் நாங்களும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தென்னாசியாவிலே கூடுதலான கடல் வளவாய்ப்பை இலங்கைத்தீவு பெற்றுள்ளது. இலங்கைத்தீவில் கடல் வளத்தில் மூன்றில் இரண்டு பங்கினை எங்கள் தமிழீழம் பெற்றுள்ளது. எனவே கடல் வளத்தைப் பாதுகாப்பதில் நாங்கள் முன்னிலை வகிக்க வேண்டும்.

உண்மையில் இலங்கைத்தீவில் கடல் சார் பொருண்மிய வருமாணத்தில் கணிசமான வருமாணம் எங்கள் பகுதிகளிலேயே கிடைப்பதால் எங்கள் கடல் வளத்தின் பெறுமதியை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இலங்கையில் மொத்த கடற்கரையோர நீளமாகிய 1739 கிலோ மீற்றர்களில் சுமார் 1163 கிலோ மீற்றர் நீளம் எங்கள் வசம் உள்ளது. அதாவது 67 சதவீதம் எங்களுக்கானது.

இந்த கடற்கரையானது இயற்கையின் அதி அற்புதமான கொடைகளுடன் சதுப்பு நிலங்கள் கண்டற்காடுகள், என அற்புதமாக அமைந்துள்ளது.

இத்தகைய பின்னணியிலேயே நாங்கள் எங்கள் கடல் வளத்தை பாதுகாக்க முனைவோமாக.

(சி-9609)

# கடலும் சமுத்திரமும் அழிவுப்பாதையில்....?



வன வளத்தை மனிதன் எப்படி அழிக்கின்றானோ. இதே போல் கடல் வளத்தையும் மனிதன் அழிக்கின்றான். எமது சுற்றுச் சூழல் மாசடைவது போல கடலும் மாசடைகின்றது. இந்த வகையில் கடல். சமுத்திரம் அழிவுப் பாதையை நோக்கிச் செல்கின்றது எனச் சொல்லப்படுகின்றது.

1970 ஆண்டு காலப்பகுதியில் இருந்து கடந்த மூன்று தசாப்த காலத்தில் கடல்களிலும். சமுத்திரங்களிலும். சூழல் மாசுபட்டால் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டு உயிர்விட்ட "இறந்த வலயங்கள்" எண்ணிக்கையிலும். பரப்பளவிலும் அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது. இதன் அடிப்படையில் இம்மாதம் 1-30 வரையான திகதியில் சூழல் பாதுகாப்புத தினத்தையொட்டி கடலும் சமுத்திரமும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வகையில் கடல் மாசுபடுவது. கடலிலும் சமுத்திரத்திலும் காணப்படும் மாசுக்களில் 80சத வீதமானவை நிலம் சார்ந்த செயற்பாடுகளினாலேயே உண்டாகின்றன. ஆண்டு தோறும் தொன் கணக்கில் கடலை வந்தடையும் பிளாஸ்ரிக் கழிவுகளால் கடல் உயிரினங்கள் அழிகின்றன. அழியாத பிளாஸ்ரிக் சூழற் தொகுதியில் மீதிருந்து திரும்பத் திரும்ப இந்த உயிரினப் படுகொலையை நிகழ்த்தி. கடல்வாழ் உயிரினங்களை அழித்து வருகிறது.

பிளாஸ்ரிக் கழிவுகள் சுமார் 1மில்லியன் கடற்பறவைகளையும் 1 இலட்சம் கடல் பாலூட்டி விலங்குகளையும். எண்ணுக்கணக்கில்லாத மீன்களும் பலியாகி வருகின்றன. இது மட்டுமல்ல கடலில் சேரும் மிதமிஞ்சிய போசனைப்பொருட்களால் குறிப்பாக விவசாய உரங்களிலிருந்து பெறப்படும் நைதரசனால் பல்கிப்பெருகும் பாதகமான அல்காக்கள் ஒட்சிசன் வாயுவைப் பயன்படுத்தி நுகர்கின்றன. இதனால் கரையோரப் பகுதிகளில் ஒட்சிசன் குறைவாகக் காணப்படுவதால் இவை இறந்த வலயங்களாக உள்ளன.

அடுத்ததாக கப்பல் தாங்கிகளிலிருந்து கழுவி அகற்றப்படும் எண்ணெய் தெருக்களில் சிந்தும் எண்ணெய் தொழிற்சாலைக்கழிவுகளாக வரும் எண்ணெய் என 21 மில்லியன் பீப்பாக்கள் அளவிலான எண்ணெய் வருடந்தோறும் கடலில் கலக்கின்றது. இதைவிட எண்ணெய் தாங்கிக்கப்பல்கள் இடையிடையே விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கின்றன. அணு ஆயுத பரிசோதனை கடலில் நடைபெறுகின்றன.

கடல் நீர் வெப்பமடைவதால் அதியுயர் ஊதாக்கதிர்களின் தாக்கத்தினால் மூடுகைக் கற்பாறைகளில் இருந்து அல்காக்கள் வெளியேறி பாறை நிறமிழக்கும். இதை மூடுகை வெளுறல் எனப்படுகிறது. அல்காக்களின் உணவுட்டல் இன்றி வெளிறிய பாறைகள் இறுதியில் இறக்கின்றன.

பவளப்பாறைகள் பு,மியில் உள்ள மிகவும் வித்தியாசமான உயிரின வகையாகும். தெளிவான மென்சு,டான சமுத்திரங்களில் இவைகாணப்படுகின்றன. மீனினங்கள் மற்றும் சில கடல் உயிரினங்களும் உணவு உறைவிடத்தையும் பவளப் பாறைகள் வழங்குகின்றன. இப்பவளப்பாறைகள் 'வெப்ப நிலை அதிகரிப்பால் ஏற்படும் சு,ழல் மாற்றங்களால் பாரிய பிராந்தியப் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது.

இயற்கையாகவே பு,மியின் வளிமண்டலத்தில் ஓசோன் என்னும் வாயுப்படலம் காணப்படுகிறது. சல்பர் ஒட்சைட் அவையின் நிலையங்களின் செயற்பாடுகளால் வெளியாகும் வாயு இதுவாகும் இவ்வாயு அமில மழையை ஏற்படுத்தும் இதேநேரத்தில் இந்த அமில மழையானது கடலில் சங்கமமாகும் போது கடல் வாழ் உயிரினங்கள் பாதிப்படைகின்றன.

அழிவை ஏற்படுத்தக்கூடிய மீன்பிடி முறைகளால் பல்லாயிரக் கணக்கான கடல்வாழ் இனங்கள் வருடந்தோறும் கொல்லப்படுவதுடன் கடலில் அடித்தள வாழிடங்களும் மிகவும் மோசமாக தேசமாக்கப்படுகிறது. எனவே எமது பிரதேசம் கடலை நாம் ஒவ்வொருவரும் வளத்தை. நம் சூழலை. அயல் சூழலை பாதுகாப்பது போல் பாதுகாத்து சமுத்திரமும். கடலும் மாசுறாமல் பாதுகாத்து எமது வருங்காலச் சந்ததியினருக்கு விட்டுச் செல்ல வழி வகுப்போம். இந்த வகையில் எமது பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம் சூழல் பாதுகாப்புப் பகுதி இந்த விழிப்புணர்வு மாதத்தை யு,ன் 1-30-06-2004 வரை வடக்கு கிழக்கு பகுதியில் பல நடவடிக்கைகளை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

சிவகமலா

(14ஆம் பக்கத்தொடர்ச்சி....)

இறந்து கொண்டிருப்பவனின் குரலைப்போல உள்ளூர அழுகை பொங்கிக்கொண்டிருந்தது. மறுமுறையும் அவனுடைய முகத்தைப்பார்த்து.... நானுங்களை சந்திக்கவேயில்லை என்றேன். அழுகையினுள் மறுமுறை என்னால் அதைக்கூட சொல்லமுடியுமா எனச் சந்தேகம் வந்தது... மிகவும் சோர்ந்து போயிருந்தேன்...

இல்லை...நண்பரே உங்களுடைய 'கடலும் கிழவனும் ஆயுதங் களுக்கு விடைகொடுத்தல் யாருக்காக மணியடித்ததோ மற்றும் சிறுகதைகளையும் நான் வாசித்துவிட்டேன். உங்களுடைய தோற்காதவன்கதை மட்டுந்தான் படித்து முடிக்கவில்லை. என்னால் நிச்சயமாகச் சொல்லமுடியும் அன்றுதான் இன்று, சரி தோற்காத வன் கதை குறித்து இப்பொழுது பேசுவோம். இந்தப் பாறையின் மீது அமருங்கள் அதோ ஓடும் ஆற்றைப் பார்த்துக்கொண்டே நாங்கள் பேசுவது தோற்காதவன் கதைக்கு மிகவும் எழிலூட்டுவதாக அமையும். கொஞ்சம் சாய்ந்திருந்தால் சூரியனின் கிரகணங்கள் சாய்வாக தோற்காதவனின் தோல்களில் படியும். அதுகூட நல்லதுதான். இந்தாருங்கள் உங்களுடைய தோற்காதவன் கதை. மிகவும் அருமையான கதைதான் இது.

எனது கையைஇறுகப் பற்றி குலுக்கிக்கொண்டிருந்தான் அவனிட மிருந்து என்னை விடுவித்துக் கொள்ளமுடியவில்லை ஓவென்று அழத்தொடங்கினேன். குரல்வெளியே வரவில்லை. இன்னுமின்னும் சத்த மிட்டு அழுதேன் இன்னும் என்கையை இறுக இறுக பற்றிக்குலுக்கிக் கொண்டிருந்தான் எனக்கு அவன் குறித்து இன்னும் இன்னும் அச்சம் கூடிக்கொண்டே போயிற்று அவனிட மிருந்து எப்படியும் என்னை விடு வித்துக்கொண்டாக வேண்டும். கையைவிடுவித்துக் கொண்டு ஓட எண்ணினேன் ஒரு கணம் விடுவித்த போது ஓடத் தொடங்கினேன் மீண்டும் பிடித்துக் கொண்டான். இன்னும் இன் னும் மூச்சை உள்ளுக்கு இழுத்துக் கொண்டு கூச்சலிட்டு அழத்தொடங்கினேன்.


"எழுந்திருங்கள் நீங்களும் உங்கள் கனவும் யாரோ என்னை உறுக்கினார்கள். திடுக்கிட்டு விழித்தேன்.

என் மனைவி என்னைச் சுட்டெரிப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஷஷஉங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது.

படுக்கையிலிருந்தபடியே அவள் அழத்தொடங்கினாள்.

## சில்லறையை கொடு!



சில்லறை இருந்தும் கொடுக்காமல் ஏய்ப்பது - சிலசமயம் கல்லறைக்கும் வழிவகுக்கும்.


# விக்டோறியா ஈழத் தமிழ்ச் சங்கம் முத்தமிழ் விழா. சிறுகதை. கவிதைப் போட்டிகள்

கடந்த ஆண்டு தன் வெள்ளி விழாவைக் கோலகலமாகக் கொண்டாடிய விக்டோறியா ஈழத் தமிழ்ச் சங்கம் இவ்வாண்டு தனது 12 வது முத்தமிழ் விழாவைக் கொண்டாட உள்ளது.

கண்டங்கள் கடந்தாலும் கருத்தாலும் எழுத்தாலும் உலகத் தமிழருடன் உறவு கொண்டாடும் தமிழ்ச் சங்கம், இவ்வாண்டும் சிறுகதை, கவிதைப் போட்டிகள் மூலம் தன் தொடர்பைப் பலப்படுத்துகின்றது. உலகளாவிய இப்போட்டியில் திக்கெங்கும் வாழும் தமிழர் பங்கு கொள்ளலாம். எத்தனை கதைகளையும் போட்டிக்கு அனுப்பலாம். ஆக்கங்கள் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரமே அச்சுப் பதிவு செய்யப்பட்டோ அல்லது தெளிவாக எழுதப்பட்டோ இருத்தல் வேண்டும்.தனித்தாளில் பெயரும் முகவரியும் இணைத்திடல் அவசியம்.

ஆக்கங்கள் எழுத்தாளரின் சொந்தப் படைப்பாக இருப்பதோடு, இதுவரை காலமும் பிரசுரிக்கப்படாததாகவும், போட்டிகளில் பங்கு பற்றாததாகவும் இருத்தல் வேண்டும். இப் போட்டிக்கு அனுப்பப்படும் கதை, கவிதைகளைப் பிரசுரிக்கும், காட்சிக்கிடும் உரிமை ஈழத் தமிழ்ச் சங்கத்திற்கு உண்டு தமிழ்ச்சங்க நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

(அ) சிறுகதைப் போட்டிச் சிறப்பு விதிகள்.

1. சிறுகதை 3000 சொற்களுக்கு மேற்படாமலும் 1000 சொற்களுக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

முதலாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 200.
இரண்டாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 150.
மூன்றாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 100

(ஆ) கவிதைப் போட்டிச் சிறப்பு விதிகள்.

1. கவிதைகள் பின்வரும் தலைப்புகளுக்குள் அமைய வேண்டும்.
2. ஒருவர் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு கவிதைக்கு மேல் அனுப்புதலாகாது.
3. தரப்பட்டுள்ள தலைப்புகளுக்குள் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு கவிதையாக ஒருவர் நான்கு கவிதைகள் வரை அனுப்பலாம்.
4. மரபுக் கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும், புதுக்கவிதைகள் 240 சொற்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) கவிதைத் தலைப்புகள்.

1. விழித்த விழிகள் இனித் தூங்காது.
2. விரிந்த கடலும் பிரிக்காத உறவுகளே.
3. தலை நிமிர்ந்த தமிழினமே.
4. தமிழ் மண்ணில் விளைந்த மாவீரமே.

(ஈ) பரிசுகள்.


1. முதலாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 150.
2. இரண்டாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 100
3. மூன்றாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 75


முடிவுத் திகதி: 30. 8. 2004

இத்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக உங்கள் ஆக்கங்களை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

TAMIL LITERARY COMPETITION 2004, ETA
30, DOUGHERTY COURT, MULGRAVE, VICTORIA 3170. AUSTRALIA

(சி.9831)



# ஆண்-பெண் மனங்களுக்கிடையேயான தெளிதலும் புரிதலும்

பல பெண்கள் ஆற்றல் மிகுந்தவர்களாயும், திறமைசாலிகளாகவும் இருப்பதை காண்கிறோம். பெரும்பாலும் பாடசாலைப் பருவத்தில் இவர்களது ஆற்றல்களும், திறமைகளும் உச்சமடைகின்றன. காலப்போக்கில் திருமணம், குடும்பம், குழந்தைகள் என இவர்களில் பலரின் எல்லைகள் சுருங்கி விடுகின்றன. இதனால் எண்ணெய் குறையும் விளக்குப் போல மங்கி மங்கி ஈற்றில் இவர்களின் திறமைகள் மழுங்கி விடுகின்றன. பல பெண்கள் இந்நிலையில் ஒதுங்கிவிடுகிறார்கள். இதற்கான காரணங்கள் என்னவாக இருக்கலாம்?

அண்மையில் 20 வயது மதிக்கத்தக்க பெண்பிள்ளை ஒருவர் அறிமுகமானார்.

'எங்கட அம்மாவும் நல்லா கதை கவிதை எல்லாம் எழுதுவா. ஆனால் இப்ப எழுதுறேல்லை.....'

ஏனென்று கேட்டேன்

'தம்பி தங்கச்சியாக்கள், அப்பாச்சி எண்டு அம்மாவுக்கு கனபேற்ற வேலையள்.... அதோடை சமையல் ... எழுதுறது கஷ்டம்.. எழுதாம விட்டுட்டா... ஆனா கவலைப் படுறவா.....' என்றாள். எனக்கு மிகவும் பழக்கமான இன்னும் ஒரு பெண் சொன்னார்.

'நான் நல்லாப்பாடுவன்.. பள்ளிக்கூடத்திலையும் கனக்கப் பரிசுகள் வாங்கினனான்... ஆனா இப்ப பாடுறேல்லை..'

'ஏன்?...'

'நான் பாடுறதைப் பாத்திட்டு ஆசைப்பட்டுத்தான் என்ர கணவர் என்னைக் கலியாணம் முடிச்சவர்... கலியாணம் முடிச்ச பிறகு பாட வேண்டாமெண்டு மறிச்சுப் போட்டார்...' என்மனம் பதறிப்போய்விட்டது.

இதை வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்த இரண்டு நண்பர்களுடன் உரையாடினேன். இருவரும் இலக்கிய ஈடுபாடுடையவர்கள். பெண்களின் ஆற்றல்கள் கால் காலத்தில் முடங்கிப் போய்விடுகிறது பெண்கள் தொடர்ந்தும் சாதிக்க வேண்டுமானால் இரண்டு முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. சமையலும், குழந்தைப் பராமரிப்பு என்பதும் பெண்களுக்கு சுமைதான். சில இடங்களில் புரிந்துணர்வோடு ஆண்கள் இவ் விடயங்களில் ஒத்துழைக்கிறார்கள். இந்த இரு விடயங்களையும் கவனிக்க வேண்டும். வெளிநாடுகளில் குழந்தை பராமரிப்பு இல்லங்கள் இருக்கின்றன. அதிலே குழந்தைகளை குறித்த நேரம் விட்டு பெண்கள் இயங்கலாம் இதனால் பல குழந்தைகளோடு பழகும் வாய்ப்பு குழந்தைகளுக்கு ஏற்படும். குழந்தைகளின் மனமும் விசாலிக்கும்.

இதே போன்று சமையலும் இலகுபடுத்தப்பட வேண்டும். சமையல் பெண்களுக்கு மட்டுமான தலையெழுத்து என்று பெண்ணோ, ஆணோ கருதக்கூடாது.கூடியளவுக்கு உலர் உணவுப் பொருட்கள், ஏற்கெனவே தயாரிக்கப்பட்டபைக்கற் உணவுகள் அறிமுகப்படுத்தப்பட்டால் இது சாத்தியமாகும். என்பது எனது கருத்தாகஉள்ளதுஎன கூறினேன்.ஆனால்.

என்ன இருந்தாலும் வீட்டில் சமைக்கிற மாதிரி ஒருநாளும் வராது..' என்றார்கள். இதேவேளை ஒரு முறை எங்களுடன் சேர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த 22 வயது சகோதரன் ஒருவன் கூறினான்.


'என்ன இருந்தாலும் காப்புகள் போட்டகையால சாப்பாடு வாங்கிச் சாப்பிடுறமாதிரி வராது' என்று (நாம் சாப்பிட்டது உணவு விடுதியில் எடுத்த உணவு)

இவற்றின் அடிப்படையில் நாம் பெண்களின் பிரச்சினைகளை அணுகினால் எமது சமூக அமைப்புகளின் தாக்கம் மனங்களில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சில கோட்பாடுகளை விழுத்தியிருக்கிறது என்பதே உண்மை. பெண்களும் ஆண்களும் தமது மனவுலக இருளிலிருந்து விடுதலை பெற்று வெளியே வரவேண்டும். ஆணாதிக்கத்துக்கு எதிரான சிந்தனை என்பது ஒருபோதும் ஆண்களுக்கு எதிரானது அல்ல.

ஆணும் பெண்ணும் இணைந்துதான் சமூகத்தையும் தேசத்தையும் விடுவிக்க முடியும். எனவே தெளிதலும் புரிதலும் எமக்கு அவசிய மானவையாய் அமைகின்றன.

**ஆதிலட்சுமி சிவகுமார்**

## பாராட்டு விழா



ஒருவர்:-

என்ன சாதனை வீரன் என்று சொல்லி கடுமையா பாராட்டு விழா நடத்துறாங்கள்.

மற்றவர்:-

ஒவ்வொரு நாளும் A-9லை போய் வாறவனாம் என்னும் ஒண்டோடையும் முட்டுப்படேலையாம். அது தான்.

## கத்தரிக்காய்க் கறிக் குழம்பு




| | |
|---|---|
| கறி | -300 கிராம் |
| பிஞ்சுக் கத்தரிக்காய் | - 150 கிராம் |
| வெங்காயம் | - 2 |
| சீரகம் | - சிறிதளவு |
| கறிவேப்பிலை | |
| நெய் | - தாளிப்புச் செய்யுமளவுக்கு |
| மிளகாய் | - 6 |
| மல்லி | - 15 கிராம் |
| புளி | - 15 கிராம் |
| மஞ்சள் துண்டு | - 1 |
| உப்பு | - தேவையான அளவு |

மிளகாயையும், மல்லியையும் தனித்தனியே வறுத்துக் கொள்ளவும். மஞ்சளை அம்மியில் அரைத்துக் கொள்ளவும். பிறகு கறியை பொடியாக நறுக்கி தண்ணீரில் கழுவி கறிச் சட்டியில் போட்டு வதக்கவும் கறியுடன் இரண்டு வெங்காயத்தையும் குறுக்கு வாக்கில் மெல்லியதாய் நறுக்கிப் போட்டு வதக்கவும். கறியும் வெங்காயமும் வதங்கியதும் 400.மி.லீ தண்ணீரை அதில் ஊற்றிக் கிளறிச் சட்டியை ஒரு தட்டால் மூடிவைக்கவும். அப்படியே வேகட்டும்.

கறியானது முக்கால் வேக்காட்டில் இருக்கும் போது சிறிதளவு கறிவேகும் நீரை எடுத்துப் புளியை அதில் கரைத்துப் பிழிந்து, அந்தப் புளிப்பு நீரையும் முன்பு தனித்தனியே அரைத்து வைத்த மிளகாய், மல்லி ஆகியவற்றின் விழுதுகளையும் சுவைக்கேற்பச் சிறிது உப்பையும் ஒன்றாகக் கலந்து கரைத்து, சுத்தமான துணியால் வடிகட்டிக் கொள்ளவும். வடிகட்டிய கரைசலை ருசி பார்க்கவும். சரியாக இருந்தால் வெந்து கொண்டிருக்கும் கறியில் இந்தக் கரைசலைஅப்படியே ஊற்றிப் பழையபடி சட்டியை மூடிவிடவும்.

கத்தரிக்காயை நீளத் துண்டுகளாக நறுக்கிக் கறியில் போடவும். கறியும் காயும் வெந்துவிட்டதும் அதிலுள்ள தண்ணீரோடு சேர்த்து, வேறொரு பாத்திரத்தில். அவற்றைக் கொட்டிக் கொள்ளவும். பிறகு பழைய கறிச்சட்டியை அப்படியே அடுப்பில் வைத்துத் தாளிப்புக்கான நெய்யை ஊற்றிக் காயவிடவும் சிறிதளவு நறுக்கிய வெங்காயத்தை அதில் போட்டுச் சீரகம் கறிவேப்பிலை ஆகியவற்றையும் கலந்து நன்றாகப் பொரித்துத் தாளிப்புச் செய்து அந்தத் தாளிப்பை இந்தக் கறியும் காயும் உள்ள பாத்திரத்தில் கொட்டிக் கலக்கவும். இதுவே கத்தரிக்காயுடன் சேர்ந்த கறிக்குழம்பாகும்.

கறியானது இளசாகவும், காயானது பிஞ்சாகவும் இருந்தால், இந்தக் குழம்பின் ருசியே அலாதியாக இருக்கும்.

## தாய்

ஆராரோ பாடி என்னை
ஆளாக்கிய அன்னையே
முத்தமிட முகம் தந்த
முழு நிலவு நீதானே?
உலகத்து உறவெல்லாம்
உயிர்த் தெழுந்து
வந்தாலும் - உன்
உறவு போல் உண்டா
உயிர் தந்த
என் உயிரே!

**வ.மாதுரி**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*

*வீடு,*
*வெள்ளிநாதம்,*
*ஈழநாதம்,*
*யாழ்சாலை,*
*கிளிநொச்சி.*

## சந்தை

### கலீல் ஜிப்ரானின் ஒரு தத்துவம்

கிராமத்திலிருந்து ஓர் அழகான பெண் சந்தைக்கு வந்திருந்தாள். முகத்தில் லில்லிப்பு,வின் வெளிச்சம். ரோஜாவின் வண்ணம். இருளை நினைவ,ட்டும் தலைமுடி. அவள் உதடுகளில் வைகறை துள்ளியது.

அந்த அழகி அங்கு வந்ததுதான் தாமதம். அனைத்து இளைஞர்களும் அவளைச் சூழ்ந்து கொண்டனர். ஒருவன் அவளுடன் நடனமாடினான். ஒருவன் அவளுக்காகக் 'கேக்' வெட்டினான். அனைவரும் அவளை முத்தமிட ஆசைப்பட்டனர். என்ன இருந்தாலும். அது சந்தைதானே...! அவள் மிகவும் பயந்து நடுங்கினாள். இளைஞர்களைத் திட்ட ஆரம்பித்தாள். ஓரிரு வாலிபர்களை முகத்தில் அறைந்தும் விட்டாள்.

அவள் தன் வீட்டிற்குச் திரும்பிச் செல்லும் போது தன் மனதுக்குள்ளேயே கூறிக் கொண்டாள். "ஒரே வெறுப்பாக இருக்கிறது... இந்தக்கால வாலிபர்கள் இவ்வளவு மட்டமானவர்களா.... அப்பாடா... பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா?" ஒரு வருடம் ஆனது. இப்போது அவள் அதே அழகோடு அதே சந்தைக்கு வந்திருந்தாள். முகத்தில் அதே பிரகாசம். அதே கருங்கூந்தல்... அனைவரையும் கவரும் அதே அழகு...!

அங்கிருந்த வாலிபர்கள் அவளைக் கண்டதும் ஓடி ஒளிந்தனர். யாரும் அவளைச் சீண்டவில்லை..

நாள் முழுதும் தனிமையாகவே இருந்தாள். மாலையில் வீட்டிற்குத் திரும்பிச் செல்லும் போது மனசுக்குள்ளே அழ ஆரம்பித்தாள்.

"வாழ்க்கையே வெறுக்கிறது. இந்தக் கால வாலிபர்கள் இவ்வளவு மோசமானவர்களா...அப்பாடா...பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா?"

## இப்படிச் செய்யலாம்...

* தக்காளி சூப் தயாரிக்கும் போது நன்றாக வேகவைத்த பீட்ருட் துண்டு ஒன்றைச் சூப்பில் போட்டு விட்டால் சூப் பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருக்கும்.
* வீட்டிலுள்ள சமையலறையை தினந்தோறும் டெட்டோல் கலந்த நீரினால் கழுவ வேண்டும். சாப்பாட்டு மேசையை டெட்டோல் கலந்த நீரினால் சுத்தப்படுத்த வேண்டும் ஈக்களின் தொல்லை குறையும்.
* கத்தரிக்காயை நறுக்கினால் அவர்களுடைய கைவிரல்களின் நிறம் மாறிவிடும் இதைத் தடுக்க கத்தரிக்காயை நறுக்குவதற்கு முன்பு கைகளில் கொஞ்சம் எண்ணெயைத் தடவிக் கொள்ள வேண்டும்.




## குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாரி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனில் 10ஐ எமக்கு நிரப்பி அனுப்ப வேண்டும். அனுப்பி வைக்கப்படும் கூப்பன்களில் குலுக்கள் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

### குமரகுரு பரிசுத்திட்டம்–01

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.




## சிந்தனைத் துளிகள் சில

01) வாழத் தெரிந்தவனுக்கு வரும்பெரும் சாதனைகளெல்லாம் வேதனைகளல்ல. இது இலட்சியப் பாதையின் விடிவிளக்குகள்.

02) இலட்சியம் இல்லாத மனித வாழ்வு ஆழ்கடலில் துடுப்பில்லாத படகு போன்றது.

03) பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது. பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது.

04) வரட்டுக் கௌரவம் வாழ்க்கைக்கு உதவாது. முரடடுப் பிடிவாதம் முன்னேற உதவாது.

ச.கவிதா

## எங்கள் யானை

எங்களின் மிகப்பெரிய விலங்கு யானை. உலகத்திலும் மிகப்பெரிய விலங்கு யானைதான். உலகில் அருகிவரும் - அழியாது பாதுகாக்கப்படவேண்டியதும் யானைதான். போரில் அதிகம் யானைகள் எங்களின்காடுகளில் அழிக்கப்பட்டன. எங்கள் காட்டின் மிகப் பெரிய விலங்கான யானையின் உயிரியல் பெயர் 'எலிபஸ் மக்ஸிமஸ் மக்ஸிமஸ்' ஆகும். யானைகள் கூட்டம் கூட்டமாக வாழும். ஒரு கூட்டத்துடன் 30 யானைகள் இருக்கும். முதிர்ந்த ஆண்யானை கூட்டத்தில் வாழாது . அதனால் யானைக் கூட்டத்தில் பெண்யானைகளும், குட்டியானைகளும் மட்டும் இருக்கும். யானைகள் பகலில் தூங்கும். நிலத்தில் படுத்துத் தூங்காது. நின்றவாறு தும்பிக்கையை மரக் கிளையில் தொங்கப்போட்டே தூங்கும். விடிகாலையும் - சூரியன் மறைந்தபின்புமே அதுமேயும். யானைகளுக்கு கூரியபார்வை இல்லை. ஆனால் துல்லியமான மோப்பசக்தி உண்டு. யானையின் வலிமைஅதன் தும்பிக்கையில்தான் உள்ளது. துப்பிக்கை ஊடாக அது எழுப்பும் எமது காதுகளுக்குக் கேட்




காதஒலி - மற்றொருயானைக்கு 5கிலோமீற்றர்களுக்கு அப்பாலும் கேட்கும். யானையின் கேட்டல் மிக மிகதுல்லியம். யானை உடல் வெப்பம் அதிகமானதால் அது அதிகம் நீரில் குளிக்கும். யானை ஒரு நாளைக்கு 200கிலோ உணவை உண்ணும். 150 மீற்றர் நீரைக் குடிக்கும். ஒருநாளைக்கு 30 கிலோ மீற்றர்தூரம் நடக்கும். ஒரு யானை 70ஆண்டுகள் வரை உயிர்வாழும்.

யானை ஞாபகம் வைத்துத் தாக்கும் என்றெல்லாம் புளுகு கதைகள் உள்ளன. உண்மையில் யானைக்கு மூளைதான் பெரிதே தவிர அதன் ஞாபகசக்தியோ மிகக் குறைவு, தனக்குத் தேவையான உள்வெளி நீர் நிலைகளை கூட அது ஞாபகம் வைத்திருக்கத்தெரியாது.

ஒருபெண்யானை 26 மாதம் குட்டியை கருவில் சுமக்கும். இது தான் எங்கள் காட்டின் மிகப்பெரிய விலங்கின் கதை.

## சொற்சிலம்பம் - 40

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ய | ண் | ம் | வி | பு | ன் |
| டி | கி | ய | இ | வா | ண | ர |
| ரா | ர | ள | கு | ல் | ழ | னி |
| சு | ட | ல | ஆ | ஜ் | னை | சி |
| ப | ம | ம் | ன் | ம் | ல் | அ |
| க் | மா | ஸ் | று | ம் | ரு | கு |
| றை | ந | ல் | லூ | று | து | த் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 38 இன் விடைகள்

01. நாய்.
02. பூனை.
03. ஆடு.

01. பல்லி.
02. பாம்பு.

### சொற்சிலம்பம் - 38 இன் பரிசுக்குரியவர்

ப.கேதா,
139, பாண்டியன் குளம்,
நட்டாங்கண்டல்.

### சொற்சிலம்பம் - 38 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. க.கபிலேஷ், 93, பாலிநகர், வவுனிக்குளம்.
02. செ.நந்தினி, இல- 01, காளிகோயில் வீதி, வவுனியா.
03. ப.சோதிகா, தரம் - 03, மு/விசுவமடு ம.வி, விசுவமடு.
04. அ.மோகனகுமாரி,தரம்-10, மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை.
05. தி.ஜெயரூபி, தரம் - 10 யா/மீசாலை வீரசிங்கம--மகா வித்தியாலயம்.
06. க.தருபன், தரம்- 4B ஸ்ரீ/சுப்பிரமணிய வி.சாலை, புதுக்குடியிருப்பு.

01. தண்ணீரைப் பெறும் இடங்கள் மூன்று?

01) ........................................
02) ........................................
03) ........................................

*சொற்சிலம்பம்-40*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

02. வீட்டின் மறு பெயர்கள் இரண்டு?

01) ........................................
02) ........................................

பெயர் :- ........................................

முகவரி :-........................................

........................................

## இடிக்கிற மாடு



**சிறுவன்:-**
அம்மா ஏன் இந்தமாடு இடிக்க வருகுது!

**அம்மா:-**
அது...A-9 லை வாகனம் ஓடுற மாமா வளர்க்கிற மாடெல்லோ அதுதான்.

## எங்கள் பள்ளி



*சேர்த்து விட்டார் பெற்றோர்கள்*
*சிறுவர் எம்மைப் பள்ளியில்*
*பார்த்துங் கேட்டும் இங்கேநாம்*
*பாடங் கற்றே ஓங்குவோம்.*

*சிறுவர் எங்கள் பள்ளியில்*
*சேர்ந்திருப்போர் அறிவினால்,*
*சுறுசுறுப்பால் பூமியைச்*
*சொர்க்கமாக மாற்றுவோம்!*


*உள்ள தொழில்கள் யாவையும்*
*உலகமெங்கும் நாட்டுவோம்*

*கொள்ளை செல்வம் நாடெல்லாம்*
*குவியும் வழிகள் கூட்டுவோம்!*

*ஓவியங்கள் தீட்டுவோம்*
*உளியின் சிலைகள் நாட்டுவோம்*
*காவியங்கள் ஆக்குவோம்*
*கலைகள் யாவும் போற்றுவோம்.*

## முயலாரின் பரிசு

பகுதி - 01



**AGSEP**
connecting sportspeople

# தேசியப்பற்று மிகுந்த விளையாட்டு வீரர்கள் உருவாகவேண்டும்

இலங்கைத்தீவில் கடந்த இருபது வருடங்களாக வாழ்ந்துவருகிறேன். ஆனால் இம்முறைதான் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தேன். யுத்தம் இவ்வளவு மோசமான அழிவுகளை ஏற்படுத்தியிருக்கும் என நான் நினைக்கவில்லை என்றார் ஜேர்மனியரான டோரின். கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேசைப்பந்தாட்டப் பயிற்சி முகாமினை நடத்திய இவர் இலங்கையில் "ஆசிய ஜேர்மன் விளையாட்டுப் பரிவர்த்தனைத்திட்டம்" (A.G.S.E.P) எனும் செயற்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்திவரும் நிறுவனத்தின் பணிப்பாளராவார்.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் வை.எம்.சீ.ஏ.மண்டபத்தில் மேசைப்பந்தாட்டத்துக்கான பயிற்சிமுகாமும், யாழ். பல்கலைக் கழகத்தில் பெண்களுக்கான கரப்பந்தாட்டமும், ஊர்காவல்துறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டத்துக்கான பயிற்சி முகாமும் நடத்தப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை தமிழீழ விளையாட்டுத்துறையும், யாழ்மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கமும், யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச்சங்கமும். மேற்கொண்டிருந்தன. ஒன்பது பேரடங்கிய குழுவினர் இப்பயிற்சியினை ஒழுங்கமைத்திருந்தனர்.

திரு.டோரின் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் சிங்கள மக்கள் சமாதானம் பற்றிய உண்மையான விடயங்களை அறிந்திருக்கவில்லை. அவர்கள் அரசியல்வாதிகள் சொல்வதையும், ஊடகங்கள் வெளியிடுவதையும் மட்டுமே கேட்கிறார்கள். யுத்தம் ஏற்படுத்திய அழிவுகளையும் அதன் தாக்கங்களையும் மிகக்குறைவாகவே அறிந்து கொள்கிறார்கள். எனவே சாதாரண மக்களுக்கிடையிலான தொடர்பு மட்டுமே உண்மை நிலையைத்தெளிவாக்கும்.

அமைச்சர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அடிக்கடிவந்து போவதனால் எந்த மாற்றமும் ஏற்படாது. ஆனால் வடபகுதி மக்களுடன் தென்னிலங்கை மக்களும், தென்னிலங்கை மக்களுடன் வட இலங்கை மக்களும் பரஸ்பரம் தங்களுடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும்போது மட்டுமே உண்மையான சமாதானம் பற்றிய புரிந்துணர்வு ஏற்படும் வாய்ப்பு உண்டாகும்.

இதற்கு மிகச் சிறந்த ஊடகம் விளையாட்டாக மட்டுமே அமையமுடியும் என்றார். முரண்பாடுகள் அரசியல் வாதிகளால் உருவாக்கப்பட்டனவே அன்றி, மக்களால் அல்ல எனவும் குறிப்பிட்டார்.

விளையாட்டமைச்சின் வடகிழக்கு மாகாண மட்டப்போட்டிகள் பரவலாக, [illegible] மாவட்டங்களிலும் நடத்தப்படுவது வழமையாக இருந்துவரும் நடைமுறையாகும். யுத்தம் நடைபெற்றவேளைகளில் மட்டும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுப்பகுதிகளில் இப்போட்டிகள் நடத்தப்படவில்லை. ஆனால்



கடந்த இரண்டு வருடங்களாக, இப்போட்டிகள் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் நிகழ்வுகள் பங்கிடப்பட்டு நடத்தப்பட்டது. அதேபோன்று இவ்வருடமும் நிகழ்வுகள் பங்கிடப்பட்டு நடைபெறும் மாவட்டங்களும் தீர்மானிக்கப்பட்டன. இத்தீர் மானங்கள் மாவட்ட விளையாட்டதிகாரிகள் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்களுக்கான உதைபந்தாட்டமும், யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்களுக்கான வலைபந்தாட்டமும், தீர்மானிக்கப்பட்டது. இப்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் போட்டிகளை இரத்துச்செய்து திருகோணமலை நகரத்தில் நடத்தும்படி வடகிழக்கு மாகாண கல்வி கலாச்சார விளையாட்டுத்துறை செயலாளரால் பணிப்புரை வழங்கப்பட்டதாக அறிவிக் கப்பட்டுள்ளது. இவருக்கான பணிப்புரையை வழங்கியவர் முன்னாள் இராணுவ அதிகாரி யான அசோகஜெயவர்த்தனா. இவரால் வெளிவிடப்பட்ட காரணம் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் பணிகளில் படையினர் பங்குபற்றுகின்றனர். இவர்களின் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்த மாற்றங்களை செய்யும்படியும் வாய் மொழிமூலம் பணிப்புரையை விடுத்திருக்கிறார். வடகிழக்கில் இராணுவ நலன்கள் பேணப்படுவதற்காகவே வடகிழக்கின் ஆளுநராக ஒரு இராணுவஅதிகாரி சனாதிபதியால் நியமிக்கப்பட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும்.




ஏறக்குறைய பதினைந்து வருடங்களுக்கு மேலாக, நிர்வாக ரீதியான எந்தவித வலுவுமின்றி வெறும் எலும்புத்துண்டு நிதிகளைவைத்து ஏதோ செய்துகொண்டிருக்கும் அமைப்பான வடகிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் கடமைகளை சட்டபூர்வமான அங்கீகாரமின்றி முதலமைச்சர் கையில் எடுக்கத்தொடங்கிவிட்டார் என்பதற்கு அண்மையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு விடப்பட்ட அழைப்பும் கோடிகாட்டுகிறது. சமாதான பேச்சு வாத்தை தொடர்பில் தற்போது விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை" வரைபு அவ்வாறான ஒரு தேவையை ஏற்படுத்தியதா என எண்ணத் தோன்றுகிறது. எது எவ்வாறெனினும், மாகாணசபை ஆளுநர் மாகாண சபை நடைமுறைகள் தொடர்பான பரிந்துரைகளை சனாதிபதிக்குச்செய்யும் ஒருவரேயன்றி மாகாணசபை நடத்தும் அதிகாரமுடைய ஒருவரல்ல. சிறிலங்கா வைப்பொறுத்தவரை சட்டவரைபுகள், பட்டயங்கள் பின்பற்றப்படுதற்குரியவையல்ல என்பதை அண்மைய நாடாளுமன்றம் நிரூபித்துள்ளது.

மாகாணசபையின் விளையாட்ட மைச்சில் பல்வேறு வகையான பிரச்சினைகள் உள்ளன. பிரதேச, மாவட்ட ஒதுக்கீடுகள் போதாமை, மாகாண வீரர்களை பயிற்றுவிப்பதற்கான நிதிவளங்கள் போதாமை, விசேடமாக, தமிழ்மொழிமூல விளையாட்டு விஞ்ஞானக் கற்கையைப் பயிற்றுவிக்க முடியாமை, விளையாட்டுப்பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர்கள் உரியமுறையில் நிரப்பப்படாமை என பல்வேறு பிரச்சினைகள் இருந்தபோதும், பாது காப்புப்படையினரின் பாதுகாப்பே வடகிழக்கு மாகாணசபையின் கல்வி கலாச்சார விளையாட்டுத்துறையின் பிரதான பிரச்சினையாகி விட்டது.

கடந்த இருவருடங்களும் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தமிழ்த்தேசிய விளையாட்டு விழாவில் அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து ஆண்களும் பெண்களுமாக படையினர் கபடி, கரப்பந்தாட்ட, உதைபந்தாட்ட அணிகளில் கலந்துகொண்டனர். எவ்வித இடையூறுகளும் இன்றி கௌரவமாக நடத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டதாக அவர்களே தெரிவித்துள்ளனர். பெப்ரவரியில் நடைபெற்ற விளையாட்டுவிழாவில் எவ்வித பிரச்சினைகளுமற்று இருக்கையில், இப்போது மட்டும் எப்படிப்பிரச்சினை உருவாகிறது. அல்லது உருவாக்கப்படுகிறது. அது மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் உள்ள 40 ஆயிரம் படையினரின் பாதுகாப்பும் இன்று கேள்விக்குறியாக இருப்பதாக ஆளுநர் அசோக ஜெயவர்த்தன கருதுகிறாரா? எம்மைப்பொறுத்தவரை விளையாட்டு எம்முடைய வாழ்வின் முக்கிமான ஒரு அங்கமாகும். ஆனால், எங்களுடைய தேசிய உணர்வை வெளிக்கொணரும் ஒரு அங்கமாகவும் விளையாட்டு அமையவேண்டும் என்பதை நாம் அறிவோம். எமது தேசியப்பற்றை கொச்சைப்படுத்தும் எந்த முயற்சிகளையும், அது விளையாட்டுத் துறைசார்ந்ததாக இருந்தாலும் அதனை நிராகரிக்க நாம் ஒருபோதும் பின்நிற்கப்போவதில்லை. உலகில் உதைபந்தாட்டத்தின் முடி சூடா மன்னனாகத் திகழ்வர் 'பீலே' இவர் உலகில்பல கழகங்கள் தமக்காக ஆடும்படி கேட்டபோதும் தன் தாய் நாட்டுக்காக, மட்டுமே ஆடுவதில் உறுதியாக நின்றவர் இவரைப் போன்று தேசியப்பற்று மிகுந்தவர்களாய் எமது தேசத்தின் விளையாட்டு வீரர்களும் உருவாகவேண்டும்.

**அ. அன்ரன் அன்பழகன்**

---

# போர்த்துக்கல்லில் இனி பரபரப்புக்குப் பஞ்சமில்லை

12ஆவது யு,ரோ கிண்ண கால்பந்து போட்டிகள் தற்போது போத்துக்கல்லில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுவருகிறது.

இதில் ஐரோப்பாவில் கால்பந்தில் பிரபலம் வாய்ந்த 16நாடுகளின் அணிகள் கலந்துகொள்கின்றன.

போத்துக்கல்லின் எட்டு நகரங்களில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளில் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமாக ரசிகர்கள் திரள்வார்கள் என அறிவிக்கப்படுகிறது.

ஐரோப்பாவை பொறுத்த வரையில் கால்பந்தாட்டத்தில் போத்துக்கல் அவ்வளவு முக்கியத்துவமற்றதாகக் கருதப்பட்டாலும் கால்பந்தாட்டத்தை நேசிக்கும் நாடாகவுள்ளது.


கால்பந்தாட்டபோட்டிகளின் ஜாம்பவான்கள் திகழ்கின்ற இடமான ஐரோப்பாக்கண்டத்துக்கான இப்போட்டி உதைபந்தாட்ட அரங்கில் உலகக்கிண்ண கால்பந்து போட்டிக்கு அடுத்தபடியாக நோக்கப்படுகிறது. இத்துடன் இப்போட்டிகள் உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்கான தயார்ப்படுத்தலாகவும் அமைந்து விடுகின்றது.

இதுவரை யு,ரோ கிண்ணங்கள் 1960. 64. 68. 72. 76. 80. 84. 88. 92. 96. 2000. 2004 என எந்த விதமான தடையுமின்றி நான்கு வருடத்துக்கு ஒருமுறை நடத்தப்பட்டுவருகிறது.

முதலாவது போட்டி பிரான்ஸ் தலைநகர் பரிசில் நடைபெற்றது முதலாவது போட்டியில் விளையாடிய பிரான்ஸ் யு,க்கோஸ்லாவியாவிடம் தோல்வி அடைந்தது. 5-4 என்ற கோல் எண்ணிக்கையில்.

இதைத்தவிர போட்டிகளை நடத்தி முதலில் ஆடிய அணிகள் ஐந்து தடவைகள் போட்டிகளை சமப்படுத்தியுள்ளன.

இதேவேளை 1962ஆம் ஆண்டு பார்சிலோனாவில் நடைபெற்ற முதலாவது போட்டியில் சோவியத் யு,னியன் மற்றும் டென்மார்க் அணிகள் மோதின இதில் 3-0 என்ற கோல் எண்ணிக்கையில் சோவியத்யு,னியன் வெற்றி பெற்றது. 1968ஆம் ஆண்டு இத்



தாலியில் நடைபெற்றது. இதில் சோவியத் யு,னியன் இத்தாலி அணியுடன் நடைபெற்றபோட்டி கோல்கள் எதுவுமின்றி சமப்படுத்தப்பட்டது.

அதேபோன்று குளோறஸ்சில் யு,கோஸ்லாவியா. இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் 1-0 என்ற கோல்கணக்கில் யு,கோஸ்லாவியா வெற்றிபெற்றது. இதேவருடம் இத்தாலியில் நடைபெற்ற போட்டியில் முதலாவது சமநிலைமை பெறப்பட்டது. அதேபோன்று 1972ஆம் ஆண்டு சோவியத்யு,னியனுக்கும் ஹங்கேரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் ஹங்கேரி 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும். மற்றுமொரு போட்டியில் பெல்ஜியம் மேற்கு ஜேர்மனி அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் மேற்கு ஜேர்மனி 2-1 என்ற கோல் எண்ணிக்கையிலும் வெற்றி பெற்றது.

**கண்ணன்**

அதனைத்தொடர்ந்து 1976 ஆம் ஆண்டு செக்கோஸ் ஸ்லாவாக்கியா நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்றது. இதில் 3-1என்ற கோல்எண்ணிக்கையில் செக்கோஸ்லாவாக்கியா வெற்றிபெற்றது. றோமில் செக்கோஸ்லாவாக்கியா மேற்கு ஜேர்மனிக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் 1-0 என்றகோல் எண்ணிக்கையில் மேற்கு ஜேர்மனி வெற்றிபெற்றது.

1984ஆம் ஆண்டு மீண்டும் பரிசில் நடைபெற்ற போட்டியில் பிரான்ஸ் அணி டென்மார்க் அணியை 1-0என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற மூன்று போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்தது.

1988ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் நடைபெற்றபோட்டியில் இத்தாலி ஜேர்மனியுடன் மோதியது இதில் 1-1 கோல் எண்ணிக்கையில் போட்டி சமப்படுத்தப்பட்டது. அதேபோன்று 1992 ஆம் ஆண்டு சுவி டன் பிரான்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இதுவும் 1-1 என்று சமப்படுத்தப்பட்டது.

1996ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்றபோட்டியில் இங்கிலாந்து சுவிற்சர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டி 1-1 என்ற நிலையில் சமப்படுத்தப்பட்டது.

2000ஆம் ஆண்டு நடைபெற்ற பெல்ஜியம் மற்றும் சுவீடன் அணிகளுக்கிடையிலான போட்டியில் பெல்ஜியம் அணி 2-1என்றகோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது.

இம்முறை நடைபெற்றுவரும் போட்டியில் போத்துக்கல் கிரேக்கத்திடம் 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் ரஷ்யா - ஸ்பெயினிடம் 1-0 என்றகோல் எண்ணிக்கையில் தோல்வி அடைந்துள்ளது.


இந்த போட்டிகளை பொறுத்து மற்றுமொரு சிறப்பம்சம் 1968ஆம் ஆண்டு இத்தாலிமற்றும் சோவியத் யு,னியன் அணிகளுக்கிடையில் நடைபெற்றபோட்டியில் வெற்றிதோல்வி நாணயச்சுழற்சிமூலம் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே இந்தப்போட்டிகளைப் பொறுத்தவரை அநேகமான போட்டிகளை நடத்திய அணிகள் வெற்றிபெற்றுக்கொண்டிருந்தாலும் இம்முறை இந்தத்தொடரில் வெற்றிகொள்ளும் வாய்ப்பு போத்துக்கல் அணிக்கு குறைவாகவே இருப்பதாகக்கருதப்படுகிறது.

மிகப் பலம்பொருந்திய அணிகளாகபிரான்ஸ் அணிமோதுகின்றது. அதேபோன்று ஜேர்மன். இங்கிலாந்து. ஸ்பெயின் அணிகள் மோதுகின்றன. எனவே இந்தப் போட்டிகள் மேலும் பலம்பொருந்தியதாக இருப்பதால் போத்துக்கல் அணி வெற்றிபெறும் வாய்ப்பு குறைவாகவே இருக்கின்றது.

21 நாட்கள் நடைபெறவுள்ள இப்போட்டிகள் கால்பந்து ரசிகர்களுக்கு விருந்தாக அமையப்போகும் அதே வேளை பரபரப்புக்குப் பஞ்சமே இருக்காது.

## எனக்குப் பிடிக்கேல்லை



A-9 ஆலை போகப்போறன் எண்டதுக்காக கடைசியா பக்கத்திலை நிண்டு படம் எடுத்திட்டுப் போங்கோ என்கிறது எனக்குக் கொஞ்சம் கூடப்பிடிக்கேல்லை.



கவிதைகள்

## மாறாத உறவுமுறை

இன்ன இடத்தில்
தோதாய் ஒரு வரன் இருக்கு.
புறோக்கர் செப்ப
கம்பேற்றும் முயற்சி
உசுப்பேறும்.

பேசப் பேசக் குழம்பும்
குழம்பக் குழம்ப பேசப்படும்.

"தெண்டிச்சும்
இதைப் பொருத்திப் போடுங்கோ
நாங்கள்
உருவேற்றி உடுக்கடிப்போம்.

பெரும் தொகையாய் பணம்,
நகை, புதுவீடு, வளவு
இவளவும் தந்தாலே
திருமணம் செய்ய சம்மதமாம்.

என்ன செய்யலாம்?
வயசும் முப்பத்தஞ்சு
கடந்திட்டுது
இனியும் வைச்சிருந்தால்
கலியாணமென்பது....?

சீதனம் காரணமாகி
இதையும் மறுத்தால்
இன்னொரு வரன் கிடைப்பது
குதிரைக் கொம்பு?

ம்..இதையே செய்வம்
சம்மதம் தெரிவித்ததால்
ஒரு வாறாக முடிவாயிற்று.
கடன் பட்டும் ஊறலாயிருந்த
எப்பன் சொப்பனையும் திருமணம்
தப்பமிட்டு விட்டது.

எங்களுக்கென்றிருந்தது
ஒரேயொரு வீடு
அதையும் அக்காவிற்கு
எழுதிக் கொடுத்தாயிற்று.

இப்போது
நானும் அம்மாவும்
மற்ற அக்காவும்
இரவல் வீட்டில்
குடியிருப்பவர்கள்.
எவருடைய கழுத்தும்
எப்போதும்
வெளியே தள்ளப்படலாம்?

இருந்தாலுமென்ன
அக்காவின் புருசனை
அத்தானென்றே
முறைசொல்லவேண்டியிருக்கு.

ஆவரங்கால் சுதன்

## சுய பரிசோதனை

வெறுமை, தனிமை
நான்.....

ஆழ் மனசுள் அலைப்புறுகின்றது
திருப்தி அறியாச் சின்னக் குழந்தை

நேற்றுப் போல் ஆயிற்று
கழிந்த வாழ்வின்
நாசமாய்ப் போன கணங்கள்

பூமிப்பந்தில் வீழ்ந்து,
பின்
கிடந்தும், தவழ்ந்தும், நிமிர்ந்தும்,
நடந்தும் காதைக் கிழிக்கும்
உறவுத் தொண்டைகளின்
ஆர்ப்பரிப்புச் சூழ்ந்த
கழிந்த வாழ்வின் மணித்துளிகள்
கவலையீனச் செலவுகள்...

ஆழ் மனசுள் அலைப்புறுகின்றது
திருப்தி அறியாச் சின்னக் குழந்தை.

பரந்த வெளி பார்த்துப்
பரிதவிக்கிறது மனசு

உழவு பார்த்து
நீண்டு கிடக்கும் நிலத்தினில்
நானென்ன செய்தேன்...?

அலைப்புறும் மனசுள்
ஆழ்ந்து கிடக்கும் என் அன்பே.
நானறிவேன்
உனக்குள்ளும் இந்த அருட்டல்
ஊறிக்கிடக்கும்

எழு,
மனசுக்காய்
வாழ்வோம்.

தணிகைமாறன்

படித்ததில் பிடித்தது

## காதில் ஒலிக்கும் காற்று

காதில் ஒலிக்கும் காற்று
தேடலின் ஒளியில்
உறைந்து போகிறது - என்
இன்றைய நாளைய
நினைவுகள்
கண்ணீர்த் துளி மையத்து
நிர்வாணக் காற்றின்
துடிப்பாய்
வயிற்றில் சிலிர்ப்பூட்டுகின்றன.

இறந்தவர்களால்
மரணத்தின் சிரிப்பைக் கூட
நினைவு கொள்ள முடியவில்லை
வேதனையின் ஓசைபோல்
பணியமறுக்கும் நினைவுகள்
அசையாமல் நிற்பதாய் தோன்றும்
பாலைவனத்து
பாம் மர மச்சைக்குள்
விடிகாலை அலைகளில்
மிதந்து வருகின்றன.


நேற்றைகளின்
கசப்பான வடிவங்கள்
ஒற்றைப் பிறப்பைவிட
பெரிதான
சிரிப்பாலான இலைகளில்
கால எல்லையற்ற
நாளைகளை
இழைத்துவிடுகின்றன.

வில்லியம் கோஸிற் ஸைஸல்

**கவிஞர் பற்றிய குறிப்பு.**

1938 இல் ஜோஹானஸ் பேக்கில் பிறந்தார். தென் ஆபிரிக்காவை விட்டு சில காலம் நீங்கிய இவர் டார்-எல்-சலாமில் வெளிவந்த "ஸ்பியர் ஹெட்" சஞ்சிகையில் பணிபுரிந்தார். 1962ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு அமெரிக்க பல்கலைக் கழகங்களில் கற்பித்துக்கொண்டிருந்தார். கறுப்பு அமெரிக்க தொகுப்புகள் பலவற்றில் இவரது கவிதைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

தமிழில்:- வின்சென்ற்புனோறன்ஸ்



## இலக்கியப்பகிர்வு

## மாருதம்-05

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வெளியிடும் "மாருதம்" இதழின் ஐந்தாவது இதழ் அண்மையில் வெளி வந்துள்ளது.

"கொழும்பை தளமாகக்கொண்டு பத்திரிகைகளும் சிற்றிதழ்களும் வெளிவரும் இந்த சூழ்நிலையில் இலக்கிய தாகம்கொண்ட ஒருசாராரால் "மாருதம்" என்ற படைப்பை வவுனியா போன்ற இடத்தில் வெளியிட்டு வருவது சுலபமான காரியமல்ல" என சுடரொளி வாரமலரில் அ.வரதன் அவர்கள் எழுதியது உண்மையானது.

வவுனியா போன்ற இடங்களில் இவ்வாறான ஒரு இலக்கிய முயற்சி மேற்கொள்வது கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்பானது. தொலைக்காட்சியின் சகல கலைகளும் தலை விரித்தாடுகின்ற சூழலில் சமூகச் சீரழிவுகள் உச்சம் பெற்றுள்ள ஒரு பின்புலத்தில் இவ்வாறான முயற்சிகள் போற்றப்பட வேண்டியவையே.

"வவுனியா கலை இலக்கிய வட்டத்தினர் பௌர்ணமி தினத்தில் கலை இலக்கிய நிகழ்வுகளை நடத்திவருவது பாராட்டுக்குரியது. அவ்வாறே "மாருதம்" இதழ் வெளியீடும் மிகவும் பாராட்டுக்குரியது. இதில் வவுனியா என்று குறுகிவிடாமல் இலங்கை என்பதற்கு விரிவடைந்து "உலகம்" என்ற இலக்கினை நோக்கிப் பயணிக்கவேண்டும் "என தினகரன் வாரமஞ்சரியில் ச.ஜீவா அவர்கள் குறிப்பிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பிரதேசத்தை தளமாகக் கொண்டு வெளியிடப்படும் ஒரு பருவகால சஞ்சிகை தன் வாழ்வுக்கான அடிஆதாரங்களைத் தேடவேண்டும். குறைந்த பட்சம் அது உயிர் வாழ்தலுக்கான அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் "மாருதம்" வவுனியாப்பகுதியையே தன்வலுவுள்ள ஆதாரமாக அது கொள்ளவேண்டும். அவ்வாறு அமைவதும் தவிர்க்கமுடியாது. அதன் பின்னர் தான் இலங்கையோ உலகமோ என்பதை கருத்துச் சொல்பவர்கள் கவனிக்கவேண்டும்.

இதனையே "குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓடுவது எமது நோக்கமல்ல. உலகளாவ பரந்து விரிவதற்கும் சிந்தனை உண்டு. எனினும் சொந்த ஊரில் உழுது பண்படுத்தி அதில் விளையும் பயிரை உலகெல்லாம் உவகை அளிப்பது தான் எம்மெண்ணம்."

"எமது நூலை ஒரு கலை இலக்கிய கல்விப் பண்பாட்டு மையமாக உருவாகி அயல் பிரதேசங்களை அரவணைத்து வானளாவ உயர்ந்து உலகின் உச்சங்களையும் தொட்டுக் கொள்ள ஆவல் உண்டு"
என ஆசிரியர் கருத்தில் ஆசிரியர்கள் வலியுறுத்தி உள்ளார்கள்.

"ஓர் இலக்கியகாரனின் தினக்குறிப்பில் இருந்து" என்னும் தலைப்பில் "சங்கர செல்வி" அவர்கள் குறிப்பிடும் கருத்தும் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

"எமது பண்பாட்டில் புத்தகம் போடுதலும், விற்பதும் கஷ்டமான காரியங்கள் ஏனெனில் புத்தகங்களை காசு கொடுத்து வாங்கிப் படிக்கும் மனோபாவம் எம்மவர் மத்தியில் வளரவில்லை பாடப்புத்தகங்களை இரவலாக வாங்கிப்படிப்பதிலேயே நாம் ஆர்வம் காட்டுகிறோம். இடையில் தென்னிந்திய அரைவேக்காட்டு சஞ்சிகைகள், நாவல்கள் படிப்ப வரும் ஈழத்துப் புத்தகங்களை கண்கொண்டும் பார்க்கமாட்டார்.

இந்த இலட்சணத்தில் ஈழத்துப் படைப்புக்களுக்காக புத்தகப்பண்பாட்டு பெருவிழாவை (கண்காட்சியுடன்) கடந்த வருடம் டிசம்பர் 27 முதல் இவ்வருடம் சனவரி 7வரை தேசிய கலை இலக்கியப்பேரவை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடத்தியது. பல்வேறு சமகால ஈழத்துப் படைப்புக்கள் விற்பனைக்கு வந்தன. ஒவ்வொருநாள் மாலையிலும் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், வரலாறு, அரசியல் என நூல் அறிமுகங்களும், எழுத்தாளர் சந்திப்பும் நடைபெற்றன.

"உண்மையில் வரவேற்கத்தக்க இந்த நிகழ்ச்சியில் பல ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். ஆனால் சென்னையில் இதேகாலத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி பற்றி எழுதிய உள்ளூர் பத்திரிகைகள் இந்நிகழ்ச்சி பற்றி மூச்சுவிடக் காணோம். இப்படியான மற்றாந் தாய் மனோபாவம் உள்ள சூழ்லில் எப்படி மக்கள் மனதில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்"




என சங்கரசெல்வி கேட்பது நியாயமானதாகும். "தாய் பிச்சைஎடுக்க மகன் அறுபத்தி மூவர் பூசை கொடுத்தானாம்" என்ற மாதிரியான பழமொழி ஒன்று எம் மத்தியில் உள்ளது. அதேபோல எங்கள் விடயங்களை எங்கள் மேம்பாடுகளை எங்கள் எழுச்சிகளை உரத்த குரலில் சொல்ல எங்களில் பலபேருக்கு அதுவும் அடிமைச் சீவியம் சீவிக்கும் பலபேருக்கு கஷ்டமாக உள்ளது.


சமூக,கல்வி,கலை இலக்கிய சஞ்சிகை என்ற மகுடத்தை கொண்டு வெளிவந்துள்ள மாருதம் ஏனைய இதழ்களைவிட சற்று மாறுதலாக வெளிவந்துள்ளது. ஆ.இராசையா அவர்களின் அர்த்தம் பொதிந்த உயிர்ப்புள்ள ஓவியத்தை அட்டைப்படமாகக் கொண்டுள்ளது.

"வடஇலங்கையிற் குளக்கோட்டன் " என்னும் முல்லை மணி அவர்கள் எழுதிய கட்டுரையும் "காக்கை சிறகினிலே" என்னும் அகளங்கன் அவர்களின் கட்டுரையும் உபயோகமான கட்டுரைகள். முன்னாள் அதிபர்.வண. சகோ. ம.ம. மடுத்தீன் அவர்களின் நேர்காணல் அர்த்தமுள்ளது. கல்விப் பின் புலத்துடன் கூடிய இந்த நேர்காணலில் அவர் கருத்துக்கள் பெறுமதியானவை.

"ஒரு பாடசாலையிலே ஓவியம், சங்கீதம் ,நடனம் ,விளையாட்டு என்ற துறைகள் நன்கு பேணப்பட்டு வந்தால் கற்றல், கற்பித்தலின் அரைப்பங்கு வேலை முடிந்துவிட்டது எனக் கொள்ளலாம். இதை நான் எய்துவ ற்கு எனது ஆசிரியகுழாம் பெற்றோர் நலன் விரும்பிகள் மாணவர்கள் என்போரின் ஒத்துழைப்பைப் பெற்றிருக்கிறேன். கலாச்சார விழாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றேன் மாணவர்களும் நன்கு பயன்படுத்தியிருக்கிறார்கள். இச்செயற்பாடுகள் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு ஒரு மந்திரக்கோலாகவே இருந்திருக்கிறது இவற்றோடு நல்லநூல்நிலையம் விஞ்ஞானம் மனையியல், சித்திரம், நடனம், சங்கீதம் போன்றவற்றிற்கான நல்ல ஆய்வு கூடங்கள் மாணவர்களின் கல்வி சார்நிலையை உயர்த்துவற்கு உந்து கோலாக இருக்கின்றன. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். கற்றல் தொழிற்பாட்டில் வாசித்தல் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. என வணசகோ ம.ம.மடுத்தீன் அவர்கள் கூறுவதை தற்போதைய கல்விசார் அறிஞர்கள், அதிபர்கள் கவனிக்க வேண்டும்.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

போகப்போகிறேன்...



கவிதா! நீ என்ர காதலை
ஏற்கேல்லை எண்டு
சொன்னா நான்
A-9ஐ கடக்கிற
தைத்தவிர
வேறு வழியே எனக்
குத்தெரியேல்லை.



# உளவியல் நவீனம்...

அத்தியாயம் 01


அது மதிய உணவு நேரம். வீட்டுக்குப் போகும் நேரம். அந்தப் பிள்ளைகள் தங்கள் வழமையான கலகலப்புக்கள் ஆரவாரங்களோடு தங்கள் மேற்கோட்டுகளையும் தொப்பிகளையும் அணிந்து கொண்டிருந்தார்கள். ஆனால் டிப்ஸ் அப்படிச் செய்யவில்லை. அந்த அறையின் ஒரு மூலைக்குள் சென்றுவிட்ட அவன் அங்கேயே கூனிக்குறுகிக் கொண்டு குந்தியிருந்தான். தலை தாழ்ந்திருந்தது. கைகள் இரண்டையும் மார்புக்குக் குறுக்காக இறுகக்கட்டிக் கொண்டிருந்தான். வீட்டுக்குப் போக. வேண்டும் என்று அக்கறைப்படுபவனாக அவன் தெரியவில்லை. ஆசிரியைகள் காத்துக் கொண்டிருந்தனர். வீட்டுக்குப் போகும்நேரம் வரும்போது அவன் எப்பொழுதுமே இப்படித் தான் நடந்து கொள்வான். ஜேன் மிஸ்சும் ஹெடா மிஸ்சும் மற்றப் பிள்ளைகள் தங்கள் கோட்டுகளை அணிந்து கொள்ள தேவைப்பட்டால் உதவுவார்கள். அவர்கள் ஓரக்கண்ணால் டிப்ஸை அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

தங்கள் தங்கள் தாய்மார் வந்ததும் மற்றப் பிள்ளைகள் போய்விட்டார்கள். டிப்ஸ்சும் தாங்களும் தனித்துப் போனதும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு டிப்ஸைப் பார்த்தார்கள். அவன் சுவரோடு சுவராக ஒதுங்கிக் கொண்டிருந்தான். " இன்று உன்னுடைய முறை" என்று ஹெடாவை நோக்கி சொல்லி விட்டு மெதுவாக அறையைவிட்டு வெளியே நடந்தாள் ஜேன்.

"வாங்கோ டிப்ஸ் வீட்டையல்லோ




போகவேணும் சாப்பாட்டு நேரமல்லோ... வாங்கோ" ஹெடா மிகுந்த பொறுமையுடன் அழைத்தாள். சிறியதொரு புயலைப்போல் ஹெடாவை நோக்கிப்பாய்ந்து வந்தான். அடித்து, பிராண்டி, கடிக்க முயன்றபடி அவன் கத்தினான் "வீட்டபோகமாட்டன்... வீட்ட போகமாட்டன்... வீட்ட போகமாட்டன்" ஒவ்வொரு நாளும் இதே கதைதான்.



போகத்தானே வேணும்... அப்பதான் நீங்க சாப்பிடலாம்... அப்பதான் நீங்க பெரிய ஆளா.... பெரிய பலசாலியா வளரலாம்... வாங்கோ"

அவன் திடீரென துவண்டு போனான். ஹெடாவோடு இழுபறிப் படுவதை நிறுத்திக் கொண்டான். கோட்டுக்குள்ளே கைகளை ஓட்டி பொத்தான்களை அவள் பூட்ட விட்டான்.

"நீங்கள் நாளைக்கு வரலாம் தானே..." என்று கெஞ்சலாகச் சொன்னாள் ஹெடா. அவனைக் கூட்டிச் செல்ல வந்த தாயுடன் அவன் சென்றபோது அவன் முகத்தில் எந்த உணர்ச்சியுமில்லை. கன்னத்தில் கண்ணீர்க் கறைகள் உலர்ந்து போயிருந்தன.

சிலவேளைகளில் தாய் வந்த பின்பு கூட இந்தச் சமர் ஓய்வதில்லை. அப்படி நிகழும் வேளைகளில் டிப்ஸ்ஸின் தாயார் தங்கள் கார் சாரதியை அவனைக் கொண்டு வரும்படி அனுப்புவார். அந்தச் சாரதி நல்ல உயரமானவர். நல்ல பலசாலி. அவர் உள்ளே வந்து யாரோடும் எதுவும் பேசாமல் டிப்ஸ்ஸை தன் கைகளில் ஏந்தி எடுத்துக்கொண்டுபோவார். சில வேளைகளில் காருக்குப் போகும் வரை டிப்ஸ் கத்திக் கத்தி அந்தச்சாரதிக்கு குத்துவான். சிலவேளைகளில் தோல்வியால் துவண்டுபோய் மௌனமாக ஆகிவிடுவான். அந்தச்சாரதி ஒருபோதும் டிப்ஸ்ஸோடு கதைக்கமாட்டார். டிப்ஸ் இழுபறிப்பட்டுக் கத்தினால் என்ன, துவண்டுபோய் மௌனமாகி விட்டாலென்ன, அதைப்பற்றி அக்கறைப்படாதவராகவே அவர் தோன்றினார்.

இந்தத் தனியார் பாடசாலைக்கு டிப்ஸ் வந்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாயிருந்தன. அவனோடு ஒரு உறவை ஏற்படுத்திக்கொள்ள, அவனிடமிருந்து ஏதாவது பதில் வினையை உருவாக்க அவனது ஆசிரியைகள் கடுமையாக முயன்றார்கள். எந்தப்பயனும் ஏற்படவில்லை. டிப்ஸ் மற்றவர்களைத் தொலைவிலேயே நிறுத்தி வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று உறுதி பூண்டிருப்பவன் போல் நடந்து கொண்டான். குறைந்தது, ஹெடாவாவது அப்படித்தான் நினைத்தாள்

பாடசாலை வந்தபின் கொஞ்சம் முன்னேறியிருந்தான். பாடசாலைக்கு வந்த புதிதில் யாரோடும் கதைக்கவேமாட்டான் கதிரையிலிருந்து அசையவேமாட்டான். ஒரு ஊமையைப் போல் காலை வேளை முழுவதும் அசையாமல் கதிரையோடு ஒட்டிக்கொண்டிருப்பான். பலவாரங்களுக்குப் பின்பு தன் கதிரையை விட்டு இறங்கி ஊர்ந்தபடி அறைக் குள்ளேயே சுற்றி வரத்தொடங்கினான். தன் னைச் சுற்றி இருக்கிற பொருட்களை அவன் பார்ப்பது போன்ற உணர்வே அந்த வேளைகளில் ஏற்படும். யாராவது அவனை அணுகிச் சென்றால், பந்து போல் சுருண்டுகொண்டு அசையாமல் கிடப்பான். அவன் யாருடைய கண்களையும் நேரடியாகப் பார்க்கமாட்டான். யாராவது அவனோடு பேசினால் ஒருபோதும் பதில் கூறமாட்டான்.

டிப்ஸ் பாடசாலை வரத்தவறுவதேயில்லை. ஒவ்வொருநாளும் அவனது தாயார் அவனைக் காரில் கூட்டிக் கொண்டு வருவார்.

சோகமயமாக வரும் அவனை, தாய் உள்ளே கூட்டிக் கொண்டு வருவார் அல்லது கார்ச் சாரதி அவனைத் தூக்கிக் கொண்டு வந்து கதவுக்கு இந்தப் புறம் மெதுவாக இறக்கிவிட்டுச் செல்வார்.

(தொடரும்....)



பேரன்:- பள்ளிக்கூடத்திற்கு நேரம் போட்டுது விடனை அம்மம்மா இந்த நேரம் 'மிளகாய் சுட்டுத் தடவிக் கொண்டு நிக்கிறாய்.

பேத்தி:- சும்மா இரடா உனக்கென்ன தெரியும் A-9- ஆலை எல்லே போய்வாறனி.

## தொடர் - 23




நன்றாக இருட்டியிருந்தது. அடிவானத்திற்குச் சற்றுமேலே நிலவு தெரிந்தது. அது முழுதாக மூன்று நாட்களிருந்தன, இன்னும். இந்தப் பூமிக்கு அப்பாலான ஒன்றாய்த் தெரிந்தது, வெளி. வானை இங்கேயே நிறுத்தி, இந்த நிலவையும், இந்தப் புற்களை அலையெறிய வைக்கிற காற்றையும், இடைக்கிடை வரநேர்கிற மிருகங்களையும் பார்த்துக்கொண்டே, இந்த அமைதியில் இரவு முழுதும் தங்கமுடிந்தால் எவ்வளவு அற்புதமாயிருக்கும்? முடியாதா?

அயூப்பிடம் கேட்டேன். சிரித்தார். பகிடியாகத்தான் பட்டிருக்கும்; மீண்டும் கேட்டேன். "இல்லை, அதற்கு அனுமதியில்லை; கிடையாது," என்றார், அவரும் மீண்டும் சிரித்தபடி. இந்தப்பதில் நியாயமானதாகத்தான் பட்டது என்றாலும், ஏக்கத்தைக்குறைக்க எள்ளளவும் உதவுவதாயில்லை!

"என்னென்ன பார்த்தீர்கள்?" திரும்பிப்போனதுமே வரவேற்பிடத் திலிருந்த செல்வி. மாஸாகேட்டார். பிறகு சொன்னார். "இரவு சாப்பாட்டின் பிறகு மஸாய் நடனமொன்று நடுக்கூடத்தில் நடைபெற இருக்கிறது. அதன்பிறகு, பத்துமணிக்கு, "ஓநாய்கள் சாப்பிடவரும்!"

"ஓநாய்கள் சாப்பிட வருமா"

"இங்கே நாங்கள் வீசுகிற இறைச்சி, எலும்பு - இவற்றைச் சாப்பிட கூட்டமாய்வரும். அருகிலேயே பார்க்கலாம்..."

"பயமில்லையா?"

"பயமெதற்கு? அவை பத்தடி கீழே பள்ளத்தில் நிற்கும்!"

குளிப்பு, இரவு உணவு எல்லாம் முடித்து வந்ததுமே என்ஜென்கா வந்தார். பார்த்துக்கொண்டிருந்தார் போலிருக்கிறது.

"வாருங்கள், இப்படி உட்காரலாம்", கணப்படுப்பு அருகில் கதிரைகளை இழுத்துப்போட்டார். ஸ்வெற்றரையும் மீறிஊடுருவிய குளிருக்கு, கணப்பு இதமாயிருந்தது.

என்ஜென்கா பலதும் பத்தும் பேசினார். அவர்பேசிய விஷயங்களிலெல்லாமே அவருக்கு ஆழமான அறிவும் உணர்வும் இருந்தமை தெரிந்தது.

"பாருங்கள், எங்களிடம் திறமைசாலிகள் இல்லாமலில்லை. சிறந்த விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். இன்றைக்கு உங்கள் இலங்கையுடன் சமமாகப் பொருதுகிற திறமை எங்களவர்களுக்கு கிரிக்கெட்டில் இருக்கிறது. உதைபந்தாட்டம், தடகளவிளையாட்டுகளிலும் முன்னணியிலிருக்கிறோம். முக்கியமாக நீண்டதூர ஓட்டப்போட்டிகளில் கென்யர்களின் திறமை பற்றிக்கேள்விப்பட்டிருப்பீர்கள்... திறமை, ஆர்வம், இயற்கைவளம் எல்லாமிருந்தும் ஏன் கென்யா இன்னமும் இப்படியிருக்கிறது? உங்கள் நாட்டுப்போர்போன்ற பிரச்சினைகளில்லை; எரிமலைகளில்லை; பூகம்பங்களில்லை! என்றாலும் நாங்கள் ஏன் இப்படி?..."

எனக்கு அவர் அங்கலாய்ப்பு, ஆதங்கம், வேதனை எல்லாம் புரிந்தது. என்ஜென்கா தொடர்ந்து சொன்னார்; "சரியான கொள்கை - வழிநடத்தல் இல்லையா, முயற்சி போதாதா, அல்லது காலனித்துவ ஆட்சியின் விளைவாய் இயலாமை உணர்வு எமது மக்கள் மனதில் ஊறிவிட்டதா...?" தன்னை மறந்து சொல்லிக்கொண்டே போனார்: கென்யாவின் பின்னடைவுக்கு கல்வியறிவு போதாமைதான் காரணமென்று எனக்குப்படுகிறது..."

"இங்கே இலவசக்கல்வியோ, கட்டாயக்கல்வியோ, இல்லை, இல்லையா?"

"ஆமாம், அது ஒரு சாபக்கேடு. அறியாமைதான் எங்கள் ஏழ்மைக்கும், ஏழ்மைதான் எங்கள் நோய்களுக்கும் காரணம். இப்போது இந்த எய்ட்ஸ் நோயை எடுத்துக் கொள்ளுங்கள், கென்யா உட்பட ஆபிரிக்கா எங்கும் அதன் பரவல் அதிகமென்கிறார்கள் அதற்கு முதற்காரணம் ஏழ்மையேயன்றி மேற்குலகு சொல்வது போலத் துர் நடத்தையோ, கட்டற்ற பாலுறவோ அல்ல! சரியான சுகாதார சேவைகளின்மைதான் நோயைப்பரப்புகிறது. ஒரே ஊசியையே தொற்றுநீக்கம் செய்ய முடியாமல் மீண்டும் மீண்டும் பாவிப்பது, சுத்தமான நீர் விநியோகமின்மை போன்றவைதான் பலவியாதிகளின்




பரவலுக்கும் இங்கே காரணம் நோய்களை ஒழிக்க வறுமையையும்,வறுமையை ஒழிக்கக் கல்வியறிவு போதாமையையும் நாங்கள் ஒழிக்க வேண்டியிருக்கிறது...."


யாரோ வந்து அவரை அழைத்ததில் "எக்ஸ்யூஸ்மி...." என்று இழுத்தார் என்ஜென்கா, "...நடனந் தொடங்கப் போகிறது. இருந்து ரசியுங்கள் குட்நைட்!" என்று விடைபெற்றார்.

முதல்நாளிரவு நக்குறுவிடுதியில் நடனத்தைப் பார்க்கக் கூடியவர்களில் பாதிப்பேர் கூட இல்லை இங்கே. நக்குறு விடுதியில் சிற்றுண்டிச்சாலை, கண்ணைப் பறிக்கும் பிரகாசத்துடன் இருந்தது. ஆனால் இங்கோ, சுரைக்குடுவை 'ஷேட்' களின் கீழ் மெல்லிய மஞ்சளாக ஒளிர்ந்து கொண்டிருந்த மின்குமிழ்களும், அவற்றின் மேலே சலாகைகளும் வரிச்சுகளும் தெரிகிற மக்குற்றிக் கூரையுமாய், கூடுதல் 'ஆபிரிக்க உணர்வு'

(தொடரும்...)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

□அலுவலகங்களில் ஆக்கிரமிப்பாளர் போல் நடந்து கொள்ளும் அதிகாரிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

நிறைவேற்று அதிகாரிகள் போலும்....

மா.பிரதீஸ்
விசுவமடு கிழக்கு,
விசுவமடு.

□ காதல், கல்யாணம் இரண்டுக்கும் வித்தியாசம் என்ன?

காதலிக்கும் போது காதலனின் மணிபேர்ஸ் காலியாகும்.
கல்யாணத்தின் போது மாமனாரின் மணிபேர்ஸ் காலியாகும்.

மு.மதிவாணன்,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

□ ஒன்பது பிக்குகள் நாடாளுமன்றம் வந்துள்ளனரே..?

நவக்கிரகங்கள் ஒரு வீட்டுக்குள் குடிபுகுந்துள்ளனர்.... நாடென்னாகுமோ?

ச.தர்சினி,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

□தென்னிலங்கை அரசியலில் ஏன் இந்தக் குழப்பம் இதற்கு விளக்கம் தருக....!

குழப்பவாதிகள் கூட்டுச்சேர்ந்துள்ளதால் ஏற்பட்டது இந்த குழப்பம் தம்பி.....

சு.மதுஷா,
பரந்தன்.

□இடைக்கால நிர்வாகம் கிடைக்கும் பட்சத்தில் தமது பிரச்சினைகள் எல்லாம் முடிவுக்கு வருமா..?

இல்லை..தமது பிரச்சினைகள் எல்லாம் வெளிச்சத்திற்கு வரும்..

முடிவு இறுதித்தீர்வில் தானேயன்றி இடைக்காலத் தீர்வில்லை.

□வாழ்க்கையில் சோகம் ஏன் வருகிறது?

வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கு தாடி வளர்த்து துக்கம் அனுஷ்டிப்பதற்கல்ல...

வை.மாலா,
கட்சன்றோட்,
வட்டக்கச்சி.

□உலகிலுள்ள தமிழர் எல்லோரும் ஒன்று திரண்டால் முடிவு என்னவாக இருக்கும்.?

பாரதிதாசன் பாடியது போன்று எங்கள் பகைவர் எங்கே மறைவார்.

ம.சுந்தரமூர்த்தி,
உழவனூர்,
தருமபுரம்.

□உங்கள் மனைவி உங்களிடம் நீங்கள் எனைவிடவும் உங்கள் அம்மாவை நேசிக்கிறீர்களா என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்?

இல்லை ஒருபோதுமில்லை... நான் உன்னை மட்டுமே நேசிக்கிறேன் என உரக்கச் சத்தியம் செய்து விட்டு என் அம்மாவை பூஜிக்கிறேன் என்று கூறுவேன்.....சரியா?

□வேலிச்சண்டைக்கும், கோழிச் சண்டைக்கும் நீதிமன்றம் செல்பவரைப் பற்றி என்ன நினைக் கின்றீர்கள்...

எல்லைப்படைக்குச் சென்ற அனுபவமில்லாதவர்கள்.

ஜீ.தீபா,
தர்மபுரம்.

□நீங்கள் சிற்பியாக இருந்தால் முதலில் என்ன சிற்பத்தை செதுக்க நினைப்பீர்கள்?

நான். சிற்பியாக கற்பித்தவரை.

பு.இலங்கேஸ்வரன்,
1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

□சமாதானம் நிலவவேண்டுமானால் மக்கள் என்ன செய்ய வேண்டும்?

சமாதானத்தை எவரிடமும் தானமாகக் கேட்கக்கூடாது. என்பதில் நிதானமாக இருக்க வேண்டும்.

சி.கார்த்திகேசு,
கிளிநொச்சி.

□நியாயத்தைத் தட்டிக் கேட்டால் எம்மை தட்டிக் கழிக்கின்றனரே... இதற்கு என்ன செய்யலாம்?

சாம- பேத- தான தண்டம் என நான்கு வழி இருக்கிறதே...

கடைசியைப் பரீட்சித்துப் பாரும்... அதாவது குட்டிக்கேளும்.

சு.விக்கி,
கிளிநொச்சி.

□நிறைகுடம் தளம்பாது குறை குடம் தளம்பும் என்பார்கள் அப்படியானால் வெறுங்குடம் என்ன செய்யும்?

ஒருமூலையில் பேசாமல் இருக்கும்.

க.கிரிசாந்தினி,
யோகபுரம்,
மல்லாவி.

□நீங்கள் அறிவுள்ளவர்களாக இருக்க விரும்புகின்றீர்களா? அழகுள்ளவராக இருக்க விரும்புகின்றீர்களா?

அறிவழகனாக இருக்க விரும்புகின்றேன்.

க.கந்தசாமி,
திருவையாறு.

□உயர் பாதுகாப்பு வலயம் பற்றி உமது கருத்து?

அது தமிழனின் உயிருக்கு பாதுகாப்பற்ற வலயம்!

சு.மங்களேஸ்வரி,
கிளிநொச்சி.

●



# தெருப்பேச்சு

மூன்று கனவுகள் கூறுமாறு ஒரு முதியவரிடம் அவரின் பேரன் கேட்டபோது முதியவர் கூறிய மூன்று கனவுகள்

பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என சந்திரிகா அம்மையார் கண்டது

- பகற் கனவு-

மருமகளின் ஆட்சியில் மகன்மாரும் தானும் மறுபடியும் ஆழநினைத்து ரத்வத்தை ஐயா கண்டது.

- வளரும் கனவு-

அம்மையாரின் அன்புக்குப் பாத்திரமாகி தன் இனத்திற்கே துரோகியான கதிர்காமர் பிரதமராக கண்டது.

-வண்ணக்கனவு-

●●●

இரண்டு நண்பர்கள் கம்பி நீட்டுவது தொடர்பாக பேசிக்கொண்ட போது

ஒரு பவுண் தங்கத்தில் இரண்டு கிலோ மீற்றர் நீளம் கம்பி நீட்டலாம்.

என்னிடம் தந்தால் எத்தனை கிலோ மீற்றர் வேண்டுமானாலும் கம்பி நீட்டுவேன்.

முதலாளி ஒருவர்:- ஒரு வர்த்தக நிலைய வாசலில் நடந்தது

கொழும்புக்கு புளியேற்ற வேணும் குறைஞ்ச மூடைக்குள் கூடிய புளியை அடைக்க வேணும். அல்லது வாகனக் கூலி கூடிப்போம்.

வேலைதேடி வந்தவர்:- அதை நான் செய்யிறன்.

முதலாளி:- முன் அனுபவம் இருக்கோ?

வேலையாளர்:- ஓம்..நான் முதல் பஸ் கொண்டக்டரா இருந்தநான்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் சந்திரிகாவுக்கு ஆதரவு வழங்குவ தில்லையே என தனது நண்பரிடம் கூறிய போது அந்த நண்பர் ஒரு பழைய சங்கதி யொன்றை இப்படிக்கூறினார்.

அமைச்சர் தொண்டமான் வாழ்ந்த காலத்தில் ஒரு பத்திரிகையாளர் அவரிடம் இப்படிக் கேட்டாராம்.

நீங்கள் எப்போதும் கட்சி மாறிக்கொண்டிருக்கிறீர்களே-ஏன்?

அதற்கு தொண்டமான் நானா?... கட்சி மாறுகிறேனா.... இல்லையே நான் எப்போதும் ஆளும் கட்சிதான். ஆளும் கட்சிதான் அடிக்கடி மாறுகிறது.

●●●

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 73



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 73

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 72



**சுகோகிலா,**
**இல56, ஆனந்தபுரம்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*தாயையும் இழந்து தாய் நாட்டையும் இழந்து*
*உற்ற துணைகள் யாருமற்று உளம் நொந்து வாடுகையில்*
*பேணி வளர்த்த தகப்பனைக் கண்டு கட்டித் தழுவி*
*கண்ணீர் மழையாய் கொட்டுகிறான் தன் உளக்குமுறலை.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*நக்கிற நாய்க்கு செக்கு என்ன? சிவலிங்கம் என்ன?*
*ஆக்கிரமிப்பாளனுக்கு தாயென்ன? பிள்ளை என்ன?*
*உடன் அழுவதை நிறுத்து! நாளையும் யாரும்*
*அழாமல் இருக்க. சூடான பதில் கொடு.*

கா.சுஜேர்
கிளிநொச்சி.

*சுதந்திரமற்ற எம் மண்ணில்*
*சொல்லில் அடங்கா துயரங்கள்*
*வடிந்தோடும் கண்ணீரால் மட்டும்*
*வல்லரசுகளுக்கு புரியப்போவதில்லை.*

யோ.கவின்சிக்
நெடுங்கேணி.

*அன்னியன் ஆக்கிரமித்தான் இனிய வாழ்வு தொலைந்ததோ*
*கூடியிருந்து அழுவது தான் முறையோ?*
*சத்தியமே நித்தியமானது. தந்தையே! தயைனே!*
*துணிவு கொள்! விரைந்து செல்! எதிர்த்து நில்.*

ம.கலைநிலா,
புதுக்குடியிருப்பு.

*பத்துமாதம் உனைச்சுமந்து பெற்றெடுத்து*
*சீராட்டி பாராட்டி வளர்த்த அன்னையின்*
*உயிரை பாதகர் பறித்து விட்டாரோ!*
*அழாதே! அன்புத்தந்தை உனக்கு தாயுமாவார்*

க.மதிவதனன்
மல்லாவி.

*அமெரிக்காவின் அராஜகத்தால் மீண்டு*
*அன்னை அணைப்பில் அழுகின்ற அராபியரே!*
*வஞ்சகரை விரட்ட வெஞ்சமர் புரிய- நீ!*
*துஞ்சாமல் திடங்கொள் தமிழ் மறவர் படைபோல்*

ப.கிருஷ்ணபிள்ளை
முத்துஐயன்கட்டு

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகயம்** வழங்குகின்றது.

புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.










இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு யூன் மாதம் 18 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.